
Free Circulation Germany-England மணி 70 - ஓசை 283 பங்குனி . March.2020

# வெற்றிமணி
Vettimaniy

ESTD 1950
Successful Publishing 25 Years in Europe
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
29 வது ஆண்டு நிறைவில்
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel:0231 162377
Fax:0231 147836

# வாழ்வின் அமைதிக்கு வழி
## நான் அது செய்தேன், இது செய்தேன் என்பதல்ல!
Dr.IN



மகளிர்தின சிறப்பிதழ்
கௌரவ ஆசிரியர்
கோகிலா மகேந்திரன்

யேர்மனியில் தேர்க்காலம் 2020

அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்


S.K.SILKS GOLD PARAADISE
Dortmund நகரில்
18 வது ஆண்டு ஆரம்பக் கொண்டாட்டத்தை முன்னிட்டும்
சித்திரைப் புத்தாண்டைச் சிறப்பிக்கவும்
மாபெரும் மலிவு விற்பனை!
14.03.2020 முதல் 15.04.2020 வரை
Mr.P.Sritharan.Proprietor
18th ANNIVERSARY
Adler str 33 - 44137 Dortmund
Tel:0231 9501 647


U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles
T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.11
Gopara Gnanam
RHEINISCHE STR 62
44137 DORTMUND
Tel: Mob:0171 330 6542
Tel:0231 53482206
Page.23
StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.37




தொகுப்பு: “ஆன்மீகத் தென்றல்”
தம்பி.புவனேந்திரன்

**வூப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்.**
கொடி 08.05.2020 தேர் 16.05.2020.
Hünefeld Str 63b
42282 Wuppertal. 0202 479 60 17

**ஹம் வெங்கடேஸ்வரப்பெருமாள் கோவில்**
அலங்கார உற்சவம் 14.05.2020.
தேர் 24.05.2020
Nassauer Str 20. 02381 42 66 420

**யுச்சன் நவசக்தி விநாயகர் ஆலயம்**
கொடி 30.05.2020 தேர் 07.06.2020
Hoch Str 10 b
41363 Jüchen. 02164 70 20 944

**சுட்காட் சித்திவிநாயகர் கோவில்**
கொடி 06.06.2020 தேர்14.06.2020.
Lehmfeld Str 18
70374 Suttgart.
0711 67 393 522

**கற்றிங்கன் வரசித்திவிநாயகர் ஆலயம்**
கொடி 13.06.2020 தேர்21.06.2020.
Gottwald Str 23
45525 Hattingen.
02324 270 61

**ஹம் காமாட்சிஅம்பாள் ஆலயம்**
கொடி 15.06.2020 தேர் 28.06.2020.
Siegenbeck Str 4-5
59071 Hamm.
02388 302 223

**எசன் கதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
கொடி 04.07.2020 தேர் 12.07.2020.
Kloster Str 49 a
45149 Essen. 0201 806 74 33

**டோட்முண்ட் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
கொடி 27.06.2020. தேர் 05.07.2020.
Kiefer Str 24
44225 Dortmund.
0231 72 51 51 65

**கிறிவீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி 27.06.2020 தேர் 05.07.2020.
Girmesgath 95
47803 Krefeld.
02151 565 00 45

**பிறாங்போட் நாகபூசணிஅம்பாள் அலயம்**
கொடி 07.07.2020 தேர்20.07.2020.
Adelbert Str 61- 63
60486 Frankfurt/m
069 979 45 618

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேல்அழகர் ஆலயம்**
கொடி 11.07.2020. தேர்
19.07.2020. Roon Str 2a
59065 Hamm.
02381 291 03

**குறிஞ்சிக்குமரன் ஆலயம் கோமஸ்பாக்**
கொடி 04.07.2020. தேர்12.07.2020.
Industrie Str 7
51643 Gummersbach.
02261 501 5964

**சித்திவிநாயகர் ஆலயம் சுட்காட்**
கொடி.17.07.2020 தேர். 26.07.2020
Waibinger Str 30
70372 Suttgart.
0711 11 32 81.

**சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்**
கொடி 18.07.2020. தேர்26.07.2020.
Robert Koch Str 5 a
58239 Schwerte.
02304 16721

**கில்கெம்ரெக் கனகதுர்க்காஅம்பாள் ஆலயம்**
அலங்காரத் திருவிழா. 18.07.2020.
தேர் 26.07.2020.
Alleen Str 18-20
73230 Kirchheim U. Teck.
07021 807 43 99

**ஹம் சித்திவிநாயகர் ஆலயம்**
கொடி. 25.07.2020 .தேர் 02.08.2020.
Ferdinanand Poggel Str 25
59065 Hamm
02381 162 686.

**கனோவர் முத்துமாரி அம்பாள் ஆலயம்.**
கொடி.17.07.2020 தேர் 25.07.2020.
Carl- Buderus Str 3 a
30455 Hannover.
0511 471 149.

**பேர்லின் மயூரபதி முருகன் ஆலயம்**
கொடி. 25.07.2020. தேர் 17.08.2020.
Blaschko Alle 48
12355 Berlin. 030 694 6900








வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை 283


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

மகளிர்தின சிறப்பிதழ்

கௌரவ ஆசிரியர்

திருமதி கோகிலா மகேந்திரன்

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


# திருமதி கோகிலா மகேந்திரன்

**அவர்களின் ஆற்றலுக்கு**

**வெற்றிமணி வழங்கும் கௌரவம்**

இன்று சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு சிறந்த எழுத்தாளரும் சமூக சிந்தனையாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களை, வெற்றிமணி பத்திரிகையின் பங்குனி மாத சிறப்பிதழின் கௌரவ ஆசிரியராக கௌரவித்து மகிழ்கின்றது.

இவர் விழி,விழிசைக்குயில்,பசுந்தி முதலிய புனை பெயர்களில் ஆரம்பத்தில் எழுதி வந்த கோகிலா மகேந்திரன் அவர்கள் ஆசிரியர்,முதன்மை ஆசிரியர், தொலைக்கல்வி விரிவுரையாளர்,யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர், அதிபர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்,ஆகிய நிலைகளில் சேவை ஆற்றி ஒய்வு பெற்றவர்.

சிட்னி,அவுஸ்திரேலியாவில் சில காலம் தமிழ்ப் பாடசாலை ஆசிரியராகவும், இந்து சமய ஆசிரியராகவும் பணி செய்தவர்.

எழுத்தாளர் என்ற வகையில் சிறுகதையும் நாடகமும் இவருக்குப் பெருமை சேர்த்த வடிவங்கள் ஆயினும் குறுநாவல் ,நாவல்,விஞ்ஞானக் கதைகள், உருவகங்கள், சிறுவர் கதைகள், சிறுவர் கவிதைகள்,புனைவுப் பேட்டி, நடைச் சித்திரம், உரைச் சித்திரம்,கட்டுரைகள் என்று பல திசைகளிலும் இவரது எழுத்துப் பயணம் நடைபெறுகிறது.



**மகளிர்தின சிறப்பிதழ்**
கௌரவ ஆசிரியர்
**திருமதி கோகிலா மகேந்திரன்**

தாய் நாட்டிலும்,அவுஸ்திரேலியாவிலும்,பல நாடகங்களை எழுதி,நடித்து,நெறியாள்கை செய்து புகழ் பெற்றவர்.வட இலங்கைச் சங்கீத சபை மூலம் தான் நாடக கலாவித்தகர் பட்டம் பெற்றதோடு பல மாணவர்கள் அப் பரீட்சையில் சித்தி பெற வழி காட்டியவர் .

# தலைவர்களின் படங்களை வைத்திருப்பதால் அவர்களைப் பயங்கரவாதிகளாகக் கருத முடியாது.

தலைவர்களின் படங்களை வைத்திருப்பதால் அவர் களைப் பயங்கரவாதிகளாகக் கருத முடியாது.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் கைவிட்டார் மலேசிய சட்டமா அதிபர்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட 12 பேரிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் கைவிடுவதற்கு மலேசிய சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.




இந்தக் குற்றச்சாட்டுக்களைத் தொடரத்தேவையில்லை என்பதற்கு, வலுவான காரணங்கள் உள்ளன. என சட்டமா அதிபர் ஸ்ரீ தொமி தோமஸ் தெரிவித்துள்ளார். இதனால் 12 பேருக்கு எதிரான 34 குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கான யதார்த்த பூர்வமான வாய்ப்புக்கள் இல்லவே இல்லை எனத் தெரிவித்தார்.

அதனால் அவர்களுக்கு எதிரான விசாரனைகளை உடனடியாகக் கைவிடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்தார்.

இசைக்கலைஞர்கள், விளையாட்டுவீரர்கள், நடிகர்கள், இவர்களை மட்டும் மக்கள் போற்றவதில்லை எனத் தெரிவித்துள்ள, மலேசிய சட்டமா அதிபர், வரலாற்று நாயகர்கள், அரசியல்வாதிகளையும் ஆராதிக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டினார்.

உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான மக்கள் லெனினையும், ஸ்டாலினையும், மாஓசேதுங்கையும்,சேகுவோராவையும் போற்றுகின்றனர், எனச் சட்டமா அதிபர் தெரிவித்தார்.



**சட்டமா அதிபர்**
**ஸ்ரீ தொமி தோமஸ்**

அவர்களது படங்களையோ ஏனைய குறியீடுகளையோ, கைத்தொலைபேசியிலோ, முகநூலிலோ வைத்திருப்பது ஒருவரைப் பயங்கரவாதியாக மாற்றாது. எனவும் தெரிவித்தார்.

இந்த தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் அரசியல் இலக்குகளை அடைவதற்காக வன்முறையைப் பயன் படுத்தினார்கள், என்பதற்காக அவர்களின் தீவிர ஆதவாளர்களை பயங்கரவாதியாகவோ அல்லது பயங் கரச் செயலில் ஈடுபட்டதாகவோ அல்லது அதற்கு முனைந்தவர்களாகவோ கருதமுடியாது.



விடுலைப் புலிகளின் தலைவரினதும், இலங்கையில் உள்நாட்டுபோரில் கொல்லப்பட்ட அமைப்பின் தலைவர் களதும், படங்களையும், முகநூலில் வைத் -திருந்தனர் என குற்றம்சாட்டப்பட்ட 12 பேருக்கும் இது பொதுவானவிடயம் எனவும் சட்டமா அதிபர் தெரிவித்தார்.இவற்றை கிரிமினல் குற்றமாகக்கருதினால் அது சட்டத்தை அவமதிக்கும் செயலாக அமையும் எனவும் தெரிவித்தார். நன்றி.வீரகேசரி




# இருதய நோய் ஆண்களுக்குரியது அல்ல! பெண்களுக்கும் வரும்!



பெண்களின் மரணத்துக்கான காரணிகளில் முன்னணியில் இருப்பது புற்றுநோய். குறிப்பாக மார்புப் புற்றுநோய் என்ற கருத்து பலரிடையே இருக்கிறது. உண்மையில் பெண்களுக்கு ஏற்படக்கூடிய எல்லாவிதமான புற்றுநோய்களையும் ஒன்றாகக் கூட்டினாலும் அவற்றைவிட அவர்களுக்கு அதிகமாக மரணத்தை ஏற்படுத்துவது மாரடைப்பு (Heart attack) எனப்படும் இருதய நோயாகும். எனவே இருதய நோய் ஆண்களுக்குரிய பிரச்சனை என்று அலட்சியமாக இருந்துவிடக்கூடாது.

பெண்களுக்கு மாதவிடாய் ஏற்படுகிற வயதுப் பராயத்தில் அவர்களுடைய அகச்சுரப்புகள் (Hormones) காரணமாக, இருதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஆண்களைவிட குறைவாக இருக்கின்ற போதிலும், கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் 30-40 வயதுப் பராயத்திலேயே மாரடைப்பினால் திடீர் மரணம் ஏற்படுகின்ற விகிதம் ஆண்களைவிட பெண்களிடையே அதிவேகமாக அதிகரிப்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. புகைத்தல், உடற்பருமன், மது அருந்துதல், வேலைப்பளு போன்றவற்றின் அதகரிப்பும் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்ற கருத்தும் இருக்கிறது.

இருதய நோயினால் பாதிக்கப்பட்டு நெஞ்சு வலியோடு வைத்தியசாலைகளின் அவசர மருத்துவப் பிரிவுக்குப் போனவர்களில், அவர்களுக்கான வலி இருதய நோயினால் ஏற்பட்டதல்ல என்று கணிக்கப்பட்டு வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களில் அதிகமானோர் பெண்களே என்பதும் கருத்துக் கணிப்புகள் ஊடாகத் தெரியவந்துள்ளது. மருத்துவரிடம் செல்லும்போது தங்களுக்குள்ள நோய் பற்றி அல்லது அதற்கான அறிகுறிகள் பற்றி ஆண்களைவிட பெண்களே தெளிவாகக் கூறுவார்கள் என்பதும் தவறான கருத்தாகும். இருதய நோய் ஏற்பட்ட பெண்களில் 35 வீதமான பெண்களே அதனைப் பற்றி தங்கள் மருத்துவரிடம் கூறியதாகவும், அவர்களில் 8 வீதமானவர்கள் மருத்துவர்களால் இருதய நோயுடையவர்களென அடையாளம் காணப்பட்டதாகவும் ஆய்வொன்று தெரிவிக்கிறது. இருதய நோய்க்கான அறிகுறிகள் தென்படும் பொழுது அதற்கான உடனடி மருத்துவ சேவையை நாடுபவர்களில் ஆண்களைவிட பெண்கள் குறைவாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்க இருதய நிவுணர் ஒன்றியத்தினால் 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில், அதற்கு முன்னைய 92 வருட காலப்பகுதியில் பெண்களுக்கு இருதய நோய் சரியாகக் கண்டுபிடிக்கப்படுவதும், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டபின் அவர்களுக்குரிய சிகிச்சை அளிக்கப்படுவதும் ஆண்களைவிட குறைவாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளனர்.

பெண்கள் பொதுவாக விரிவாக விளக்குவதாக எண்ணிக்கொண்டு விபரங்களை சற்று மிகைப்படுத்திக் கூறும்பொழுது அவற்றின் பரிமாணம் குறைத்துக் கணிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதனைவிட இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். நொனற் வெங்கர் (Nonette Wenger) என்ற மருத்துவர் தனது மருத்துவ ஆய்வுக் கட்டுரையொன்றில் "மருத்துவ சமூகத்தில் பெண்களின் மார்பு, யோனி போன்ற வெளி உறுப்புகளுக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் அவர்களின் உள்ளுறுப்புகளுக்கு கொடுக்கப்படுவதில்லை" என குறிப்பிட்டுள்ளார்.



**விக்டர் ஜோ. பிகுராடோ**
**குடும்ப மருத்துவர் (கனடா)**

இருதய நோயைக் கண்டுபிடிப்பதிலும் சிகிச்சை அளிப்பதிலும் இந்த வேறுபாடு இருப்பதற்கான காரணிகள் சிலவற்றை மருத்துவர் பேர்னடின் ஹீலி (Bernadine Healy) முன்வைத்திருக்கிறார். அவற்றில் ஒன்று, கடந்த காலங்களில் மருத்துவ ஆய்வுகளில் பெண்களின் பங்களிப்பு குறைவாக அல்லது தவிர்க்கப்பட்டு இருந்ததோடு, அந்த ஆய்வு முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சைகள் இருபாலாருக்கும் பிரயோகிக் கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமன்றி ஆண்களும் பெண்களும் ஒரேவிதமான இருதய நோய் அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றபோது ஆண்களின் அறிகுறிகள் அதிக பரிமாணமுள்ளவையாக அனுமானிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பெண்களுக்கு இருதய நோயின் அறிகுறிகள், ஆண்களுக்கு ஏற்படுகின்ற நெஞ்சுவலி போலன்றி வேறுவிதமாகவும் வெளிப்படலாமென்ற மருத்துவர்களின் கணிப்பும் இதற்கு ஒரு காரணமாகலாம்.

நெஞ்சுவலி ஏற்பட்டவர்களில் அதிகமாக ஆண்களுக்கும், குறைவாக பெண்களுக்கும் இருதய நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் இந்த வேறுபாட்டிற்கான இன்னுமொரு காரணியாக கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருதய நோய் ஏற்படும்பொழுது அந்த நோய்க்கான அறிகுறிகள் இருபாலாராலும் எவ்வாறு உணரப்படுகின்றது என்பதைக் கண்டறிய 2018ஆம் ஆண்டு பெப்ரவரி Birgo என்ற பெயரில் 18 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட 2009 பெண்களையும், 976 ஆண்களையும் உள்ளடக்கிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அதிலே இருதய நோய் ஏற்பட்டபோது ஆண்களைவிட பெண்கள் மூன்றுக்கு மேற்பட்ட (மேல்வயிற்றுப் புகைச்சல், வயிற்றுப் பிரட்டல், மூச்சுத் திணறல், நெஞ்சுப் படபடப்பு, நெஞ்சுவலி, கழுத்து - தாடை - தோள்பட்டை - புஜம் போன்றவற்றில் உளைவு போன்றவை) அறிகுறிகளை வெளிப்படுத்திய தையும், அவர்களில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக ஏறத்தாழ 30 வீத பெண்களும் 22 வீத ஆண்களும் மருத்துவர்களின் ஆலோசனையை நாடியதும் அவதானிக் கப்பட்டது.

இவ்வறிகுறிகள் ஏற்பட்டபோது 21 வீத பெண்களும் 12 வீத ஆண்களும் இவற்றைத் தங்களது மனவருத்தம், மனப்பதற்றம் என்பதன் அறிகுறிகளாகக் கருதியதாகவும், நெஞ்சுவலி இல்லாமல் ஏனைய அறிகுறிகளோடு இருதய நோய் ஏற்பட்ட பெண்களில் அநேகர் ஏற்கனவே நீரிழிவு, பாரிசவாதம், சிறுநீரகக் கோளாறு, நுரையீரல் கோளாறு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அந்த ஆய்வு காண்பித்தது.

இந்த ஆய்வுகள் வழியாக அறிய வேண்டியது என்னவெனில், இருதய நோய் அல்லது மாரடைப்பு ஏற்படுகின்றபொழுது இருபாலருக்கும் தென்படுகின்ற முக்கிய அறிகுறி 90 வீதம் நெஞ்சுவலியாகும். அத்துடன் ஆண்களைவிடப் பெண்களுக்கு நெஞ்சுவலியுடன் கூடிய ஏனைய குணாதிசயங்களான மேல் வயிற்றுப் புகைச்சல், செமியாத்தன்மை, வயிற்றுவலி, நெஞ்சமுத்தம், வயிற்றுப் பிரட்டல், நெஞ்செரிவு, கழுத்து தாடை தோள்பட்டை உளைவு, நெஞ்சுப் பதற்றம், மூச்சுத்திணறல் போன்றவை ஏற்படுவது அதிகமாகும்.

இந்த நோய்களால் இறப்பவர்களில் ஆண்களைவிட பெண்களே அதிகம். அதற்கான காரணங்கள் சிலவற்றை ஆராய்ந்த அவற்றைப் பின்பற்றினால் சடுதி மரணம் ஏற்படாது தடுக்க முடியும்.

தொடர்ச்சி 09ம் பக்கம்









அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்

# உனக்கு தெரியுமா



இயக்குனர்
லெனின் ஆ. சிவம்
அவர்களுடன்
ஒரு நேர்காணல்



பிரபாலினி பிரபாகரன்

எல்லோருக்கும் வணக்கம், இன்று நாம் சந்திப்பது ஒரு தனித்துவமான ஈழத்து படைப்பாளியை. ஈழ தமிழ் திரைப்பட உலகில் ஒரு நிரந்தர இடத்தை தனக்கென உருவாக்கி எமக்கும் எம் கலைக்கும் கலைஞர்களுக்கும் பெருமை சேர்த்து வரும் இயக்குனர் திரு. லெனின் ஆ. சிவம் அவர்களை.

1. எப்பொழுது இந்த திரை உலகில் நீங்கள் உங்களை இணைத்துகொள்ள விரும்பினீர்கள்?
படைப்பாளியாக உருவெடுத்தீர்கள்?

எப்பொழுது ஆரம்பித்தது இந்த ஆர்வம் என்பது சரியாக தெரியவில்லை, ஆனால் எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து இந்த உலகத்தில் எனக்கு மிகவும் பிடித்த விடயமென்றால் திரைப்படங்கள் பார்ப்பது, அதனால்தான் என்னவோ அவற்றை உருவாக்கவேண்டும் என்ற ஆர்வமும் என்னுள் எப்போதுமே இருந்தது.

2. நீங்க சினிமாத்துறை, கலைத்துறைக்குள் வந்ததட்கு என்ன காரணம்? உங்கள் பெற்றோர்கள் இத்துறையை சேர்ந்தவர்களை? நடிப்பு அனுபவம் நாடக துறை அனுபவம் உங்களுக்கு இருக்கிறதா?

எனது நடிப்பு மற்றும் நாடக அனுபவங்கள் பாடசாலை நாட்களில் இடம்பெற்ற சில அழகான நிகழ்வுகள் உள்ளன. எனது தந்தை ஒரு கதாசிரியர், இயக்குனர், நடிகர் கூட. அவர் ஏறத்தாழ சிறுவயதில் இருந்து சுமார் 25 நாடகங்களை உருவாக்கி மேடையேற்றியுள்ளார், அதுமட்டுமல்லாது இலங்கையில் வெளிவந்த தமிழ் திரைப்படமான "மீனவப் பெண்" என்ற படத்தில் இரட்டை வேடமேற்று அந்த நாட்களிலேயே நடித்துள்ளார். சினிமாத்துறை என்பது எங்கள் குடும்பத்தில் இயல்பாகவே இருந்த ஒரு அன்றாட விடயம், அது ஈழ சினிமா சரித்திரதிலும் இடம்பெற்ற அம்சங்களில் ஒன்று என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியே.

3. நீங்கள் மேல்படிப்பு படித்த ஒரு பட்டதாரி, உங்கள் படிப்பு மற்றும் செய்த தொழில், இப்பொழுது ஈடுபடும் தொழில் துறை என்றவற்றைபற்றி சொல்லுங்களேன். நான் கனடாவில் waterloo universityy; computer science படித்து பட்டம் பெற்றவன். ஏறத்தாழ 20 வருடங்கள் software architectMf Business Objects, SAP, Neilson போன்ற பெரிய ஸ்தாபனங்களுக்கு பணிபுரிந்தவன். எனது 40வது வயதில் வேலை செய்வதை முற்றிலும் நிறுத்திவிட்டு முழுநேரமும் என்னை சினிமாத்துறையில் ஈடுபடுத்தி கொண்டேன். கடந்த 5 வருடங்களாக சினிமாதான் எனது முழுநேர வேலையாகும்.

4. நானறிந்து நீங்கள் 3 முழுநீள திரைப்படங்களை உருவாக்கியுள்ளீர்கள். உங்கள் படைப்பான "ரூபா" என்னை மிகவும் பாதித்த ஒரு திரைப்படம். இப்படி ஒரு தளத்தை அதுவும் எங்கள் கலாச்சாரத்துக்கு சமூதாயத்திட்கு அப்பாற்ப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய கதையை எப்படி தேர்ந்தெடுத்தீர்கள்?

ஆமாம், நான் இதுவரை 3 முழு நீள படங்களை எடுத்திருக்கிறேன். 1999 என்ற திரைப்படம் கனடாவில் 99களின் இளைஞர்களை பற்றியது, அங்கே அந்த காலகட்டத்தில் இடம்பெற்ற குழுக்களின் சண்டைகளை மையமாக வைத்து எடுத்தேன். அதன் பின் “a gun and a ring“ எனும் படம். இது எங்கள் மக்கள் வெளிநாடுகளில் போரைவிட்டு வெளிவந்துவிட்ட பின்னும் போரின் வலிகளை, வடுக்களை எப்படி சுமக்கிறார்கள், எப்படி அவர்களோடு அந்த போரின் தாக்கம் பயணிக்கிறது என்பதை சித்தரிக்கும் படம். எனது மூன்றாவது படம் "ரூபா", ஒரு திருநங்கை பற்றியது. பிரபல எழுத்தாளர் திரு. ஷோபா சக்தி அவர்கள் எழுதிய ஒரு சிறுகதையை படித்த பொழுது அது என்னுள்ளே பல தாக்கத்தை ஏற்படுத்தியது, இன்றும் எங்கள் ஈழத்து திருநங்கைகள் ஒரு போலி வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருப்பதையும், அவர்கள் சமுதாயத்திடம் இருந்து தங்களை ஒளித்துக்கொண்டிருப்பதையும் புரிந்துகொண்டேன், அந்த சிறுகதையை திரைப்படமாக்க வேண்டுமென்று முடிவு செய்தேன்.






5. a gun and a ring: அந்த படத்தை பற்றி சொல்லுங்கள். அந்த படத்தை உலகம் முழுவதும் மிகவும் திறனாக வெளியிட்டீர்கள். ஒரு ஈழ திரைப்படத்திட்க்கு இது பெரும் வெற்றி தான். இந்த படத்தின் தயாரிப்பாளர்கள், மற்றும் லாப நஷ்டங்களைபி பற்றி சொல்லுங்களேன்.

படம் ஈழத்து திரைப்பட வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்று தான் சொல்ல வேண்டும். பொதுவாகவே ஈழத்து படைப்புகளுக்கு பொருளாதார பிரச்சனைகள் அதிகம். செலவு செய்யப்பட்ட பணத்தை எடுப்பது மிகவும் கடினம். a gun and a ring கை பொறுத்தவரை தயாரிப்பாளர்களுக்கு ஒரு நல்ல தொகையை லாபமாக கொடுத்த படம். அதுமட்டுமல்லாது உலகம் முழுவதும் எமது தமிழ் மக்களால் பாராட்டு பெற்ற திரைப்படம். குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் மக்கள் அந்த படத்தோடு ஒன்றோடு ஒன்று பட்டு உணர்வுகளோடு ஐக்கியமானதை பார்த்தேன், அவர்கள் படத்தை மிகவும் பாராட்டினார்கள், ஏற்றுக்கொண்டார்கள். ஈழத்து திரைப்படங்களில் மிகவும் முக்கியமான படங்களிலொன்றாக பார்க்கப்படும் படம்.

6. பல படங்களில் வேலை செய்திருக்கிறீர்கள்,பல விருதுகள் வாங்கி இருக்கிறீர்கள் . அதைபற்றி சொல்லுங்க.

எனது மூன்று படங்களுமே பல விருதுகளை பெற்றிருக்கின்றன.குறிப்பாக ஈழத்தமிழரால் எடுக்கபட்ட ஒரு படம் ஒரு சர்வேதேச திரைப்பட விழாவில் முதல் தடவை கலந்துகொள்ள தேர்வு செய்யப்பட்டதென்பது ஒரு மிக அவசியமான நிகழ்வு. எமது 60 வருட ஈழத்தமிழ் வரலாற்றில் எனது 1999 என்ற திரைப்படம் தான் முதன்முதலாக இன்டர்நேஷனல் பெஸ்டிவல் இல் முதல் தடவை தேர்வு பெற்றது முழுநீளதிரைப்படம். எமது ஈழ தமிழ் திரைப்பட முன்னேற்றத்தில் இது ஒரு முக்கியமான வரலாற்றுப்பதிவாக கருதப்படுகிறது. அடுத்து fgun and the ring சுமார் 3000 திரைப்படங்கள் போட்டியிடும் shanghai international filmfestival,y; Golden Goblet என்ற விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. உலகெங்குமிருந்தும் வரும் சுமார் 3000 படங்களில் 12 படங்கள் மட்டுமே தேர்ந்தெடுப்பார்கள், அந்த 12இல் ஒன்றாக ggun and the ring தேர்வானதும் ஒரு மிக முக்கியமான விஷயம். ➡ 23ம் பக்கம்



### காலம் தோறும் மாறி வந்த பரத நடன மார்க்கமும்
### கலாசூரி திவ்யா சுஜேனின்
# பரத மார்க்கமும் - பாரதி மார்க்கமும்



ரோபிணி அருட்செல்வம் கலாசூரி திவ்யா சுஜேன்

**அண்மைக்காலமாக முக நூலிலும் பத்திரிகைகளிலும் பரத அரங்கேற்றங்கள் பற்றிய செய்திகள் மிக அலங்காரமான புகைப்படங் களுடன் விளம்பரப்படுத்தப்படுகின்றன. தரமில்லாத நடனங்களும் அதை நிகழ்த்துவோரும் ஊடக விளம்பரத்தால் உயர்ந்த நடனங்களாகவும் மிகச் சிறந்த நடனதாரகைகளாகவும் கட்டமைக்கப்படுகின்றன. கட்டமைக்கப் படுகின்றனர். ஊசியும் செம்பொனும் ஒப்பவே நோக்கும் யோக நிலையான பற்றற்ற நிலையை இப்பத்திரிகைகள் அடைந்து விட்டனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. திறமையானவர்கள் இனம் காணப்படுவதில்லை, ஒரு நடன விமர்சனம் எம்மிடமில்லை. இதனால் ஆடும் பரத நடனங்கள் யாவும் அற்புதம் என்றும் ஆடுவோர் அனைவரும் அற்புத நடன மணிகள் என்றும் கூறும் நிலைக்கு அனைவரும் வந்து விடுகின்றனர். தடி எடுத்த எல்லோரும் தண்டல் காரர்களாக மாறி விட்டார்கள்.**

பெரும் பொருட் செலவுகளுடனும் கண்கவர் ஆடை அலங்காரங் களுடனும் ஆர்ப்பாட்டமாக இவை நடை பெறுகின்றன.
நடனம் என்பது ஓர் கலா அனுபவம். வெளியை தன் உடல் அசைவுகளாலும் ஆட்டங்களாலும் நிறைக்கும் அற்புத கலை இது. தம் பாவங்களாலும் அபிநயங்களாலும் கற்பனைகளாலும் சிறந்த ரசிகர்களை இன்னோர் உலகத்திற்கு இழுத்து செல்லும் கலை இது. அந்த அனுபவத்தை இவற்றில் பெரும்பாலானவை தருவதேயில்லை. குடும்ப விழாக்களாகவும் வெறும் சடங்குகளாகவும் அமைந்து விடும் அரங்கேற்றங்களும் நாட்டிய நாடகங்களும் பெரும்பாலும் அரைத்த மாவையே மீண்டும் மீண்டும் அரைக்கும் பிரயத்தனங்களாகவும் அலுப்பு தரும் நிகழ்வுகளாகவும் அமைந்து விடுவது ஒரு கலைச்சோகமே.

இதன் நடுவே அர்ப்பணிப்போடும் ஆர்வத்தோடும் பரதம் பயிறுவிக்கும் சில இளம் நாட்டிய ஆசிரியைகளையும் காண முடிகிறது. அதில் சிலரிடம் புதியன புனையும் ஆற்றலும் துணிவும் காணப்படுவது மனதிற்கு ஆறுதலளிக்கும் ஒன்றாகும். அத்தகையோர்களுள் ஒருவரே திவ்யா சுஜேன் அவர்கள். பரத அரங்கேற்றத்தில் புதியன புகுத்தியுள்ளார் திவ்யா இது . பரத மார்க்கம்தான் ஆனால் அதனைப் பாரதி மார்க்கம் ஆக்கியுள்ளார். அதென்ன பரத மார்க்கம்? பாரதி மார்க்கம்?

## காலம் தோறும் மாறி வந்த மார்க்கம்

தமிழர் மத்தியிலிருந்த இந்த நீண்ட நடன மரபைப்பார்க்கும் போது கி,பி.2 ஆம் நூற்றாண்டில் மாதவி ஆடிய மார்க்கம் கிபி7 ஆம் நூற்றாண்டில் கோவிலில் பிணாப்பெண்டுகள் ஆடிய மார்க்கம் கி.பி 10ஆம் 11 நூற்றாண்டுகளில் சோழ அரசர் காலத்தில் கோவிலில் தளியிலார் எனும் பெண்டுகள் ஆடிய மார்க்கம் பின்னர் 13 ஆம் நூற்றாண்டில் சங்கீதரத்னாகரர் காலத்தில் பரத நாட்டிய நர்த்தகிகள் ஆடிய மார்க்கம் 15 ஆம் நூற்றான்டில் விறலிவிடு தூது இலக்கியம் காட்டிய நாட்டிய மகளிர் ஆடிய மார்க்கம்.18 ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூர் சகஜி வகுத்த மார்க்கம் 18 ஆம நூற்றாண்டில் சின்னையா பொன்னையா சிவானதம் வடிவேல் சகோதரகள் செம்மை செய்து அளித்த இன்றைய மார்க்கம் அதனைபின்பற்றி இன்று 19 ஆம் நூற்றாண்ட்சுகளில் வழுவூர் தஞ்சாவூர் நட்டுவனார்களிடம் இருந்த மார்க்கம் பின்னர் 20 ஆம் நூற்றாண்டில்அடையாறு கலசேத்ரம் உருவாக்கிய பரத்நாட்டிய மார்க்கம் என பரத நாட்டிய மார்க்கம் காலம் தோறும் தமிழ் நாட்டில் புகுந்த பண்பாடுகளுக்கும் அன்றைய காலத் தேவைகளுக்கும் ஏறப மாறி மாறி வந்திருப்பதனைக் காண்கிறோம்.



**பேராசிரியர் சி.மௌனகுரு**

**கலைஞர்கள் மீண்டும் மீண்டும் வாசிக்கவும்**

ஒரு மார்க்கம் போல் ஒன்றிலையாயினும் அடிப்படையான சில விதிகளை மீறாது பரத நடன மார்க்கம் மாறி வந்துள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகிறது இம்மாற்றத்தில் அது தோன்றிய காலச்சூழலும் அதில் ஈடுபட்ட ஆளுமைகளின் முக்கிய பங்கு பெரும் பங்கு வகித்துள்ளன. இதிலிருந்து நாம் தெளிவது என்ன?

பரதமார்க்கம் மாறாத ஒன்றல்ல ஆளுமை பொருந்தியோர் அதனை மாற்ற முயன்றுள்ளனர் புதிய பாதைகளை பரத ராஜ பாதையில் போட்டுள்ள்னர் அவை சமூகத்தால் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளன என்பதே. இது எனக்கு என்ன தருகிறது? பரத மார்க்கத்தில் புதியன புனைய இடஉண்டு என்ற துணிவையும் ஞானத்தையும் தருகிறது. இந்த ஞானத்தோடு புதியன புனைவோர் பரத நாட்டிய விமர்சகர்களின் கணிப்பிற்குள்ளாகிறார்கள்.

இந்த துணிவும் ஞானமும் பெற்ற ஒரு நர்த்தகிகள் நம்முள் சிலர் உண்டு என்பது ஆறுதல். முன் நான் சொன்ன கலைச்சோகத்திடையே கிடைக்கும் ஆறுதல் இது. இவ்வாறுதல் தருபவர்களுள் ஒருவரே பரத மார்க்கத்திற்கு பாரதி மார்க்கம் எனப்பெயரிட்டு பரத மார்க்கத்தில் பாரதி அனுபவம் தந்த அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி நிறுவகர் திவ்யா சுஜேன் எனும் பரத நர்த்தகி. அவரது சீட மாணவியான ரோபிணி அருட்செல்வத்தின் பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு திவ்யா “ஞால வெளியினிலே- பாரதி மார்க்கம்” எனப்பெயரிட்டிருந்தார். பரத மார்க்கம் பாரதி மார்க்கம் எனப்பெயரிட்டிருந்தமைஅந்நடன நிகழ்வை பார்க்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது. அத்தோடு அதற்கு முதன்மை விருந்தினராக வருபவர் பாரதியாரின் கொள்ளுப்பேரனான ராஜ்குமார் பாரதி, அவரையும் காணலாம் என எண்ணினேன். அவ்வனுபவத்தினைப் பெறும் வாய்ப்பு எனக்கு 11.12.2019,மாலை 6.00 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஸ்ணன் மண்ட பத்தில் கிடைத்தது.

பாரதியின் கொள்ளுாப் பேரன் ராஜ்குமார் பாரதியின் பிரசன்னமும் நிகழ்ச்சித் தொகுப்பாளர் உரையும் எமக்கு வழங்கப்பட்ட நிகழ்வுகள் பற்றிய நூலும் கலை நயம் மிகுந்த மேடை அலங்காரமும் எம்மை பாரதி மார்க்கம் காணத் தயார்ப்படுத்தின. ஓர் ஆற்றுகைக்கு பார்வை யாளரைத் தயார்ப்படுத்தல் என்பது மிக அவசியமானதொன்று.

மேடையில் முக்கியமான மூன்று இசைக்கலைஞர்கள் பக்கவாத்தியம் வாசிக்க அமர்ந்திருந்தனர் முழவு ( மிருதங்கம்) வாசிக்க குரு பரத்வாஜும், வயலின் (நரம்பிசை) வாசிக்க இராமகிருஸ்ணன் ஈஸ்வரும், பாடல்கள் பாட (மிடற் றிசை) வீராகவனும் நட்டுவாங்கம் செய்ய திவ்யா சுஜேனும் அமர்ந்திருந்தனர்

தொடர்ச்சி 08ம் பக்கம்







ரோபிணி அருட்செல்வம்





**குரு பரம்பரை** 7ம் பக்கத் தொடர்ச்சி

மிருதங்க வித்வான் குரு பரத்வாஜ் மிருதங்க வித்துவான் மதுரை மணியின் சீடர், வயலின் வித்வான் இராமகிருஸ்ன ஈஸ்வர் வயலின் வித்துவான் டி.என் கிருஸ்ணனின் சீடர் வீராகவன் குரலிசை வித்துவான் பாலமுரளி கிருஸ்ணாவின் சீடர் நட்டுவாங்கம் செய்ய அமர்ந்திருந்த திவ்யாவோ பரத நடன வித்துவான் சந்திரசேகரின் சீடர். அனைவரும் மிகத் திறமான குருமாரிடம் பயின்ற திறன் மிகுந்தோர். நல்ல குரு பரம்பரையில் வந்தவர்கள் அவர்கள் நால்வரின் திறனும் அரங்கேற்றத்திற்கான அடித்தளம், அடித்தளம் வலிமையானால் கட்டிடம் உறுதிதானே என எண்ணிக் கொண்டேன்.

பரத நாட்டிய மார்க்கத்தை ஒட்டி புஸ்பாஞ்சலி அலாரிப்பு,ஜதீஸ்வரம், வர்ணம் பதம் தில்லானா மங்களம் என்ற வகையிலேயே அரங்கேற்ற மார்க்கம் ஒழுங்கமைக்கப்படிருந்தது.

கலை (Art) கைவினை என்ற சொற்கள் கலை விமர்சன உலகில் உண்டு. கலை என்பது புதிதாகப் படைக்கப்படுவது. கைவினை என்பது ஒன்றை அதேபோல மீண்டும் படைப்பது. நம் மத்தியில் ஒன்றை அதேபோல மீண்டும் செய்வதனையே நாம் கலை என்று போற்றுகிறோம். பிரதிபண்ணல் கலை அன்று. புதியன புனைதல் அதாவது சிருஸ்டிப்பதே கலை ஆகும்.

இதுவும் வழமையான பாணிதானே என நடனத்தின் ஆரம்பத்தில் எண்ணியிருந்த என்னை மரபினடியாக திவ்யா புனைந்திருந்த புதுமை இது கலைஆக்கம் என எண்ண வைத்தது.சற்று நிமிர்ந்திருந்து அவதானிக்கவும் ஆடலில் தோயவும் வைத்தது.

**ஆயத்த மனோநிலை**

ஆரம்பத்தில் பரத அரங்கேற்ற மார்க்க முறையில் சகல வாத்தியங்களும் ஒரு தடவை ஒலித்து நமக்கோர் ஆயத்த மனோநிலையை வழங்கின. ஆடல் தொடங்கு முன் அனைத்து வாத்தியங்களும் ஒலிப்பது பழைய மார்க்கம்தானே. இங்கு பழமை பேணப்பட்டிருந்தது. மிருதங்கத்தின் கணீரென்ற ஓசையும் வயலினின் மெல்லிய ஓசையும் நட்டுவாங்கம் செய்பவரின் தாள ஓசையும் இணைந்து ரம்மியமான சூழலை உருவாக்கின. வாத்திய வாசிப்பில் ஒரு மென்மை ஒரு அழகு ஒரு நளினம் இருந்தது. அந்த அழகிய இசைப்பின்னணியில் நடந்து சென்று அரங்கேற்றநாயகி ரோபிணி குருவையும் வாத்தியகார்களையும் வணங்கிய பின்னர் புஸ்பாஞ்சலியைத் தொடங்கினார் நல்லதோர் ஆற்றுகை காணப்போகிறோம் என்ற மன உணர்வை அது தந்தது.

**புஸ்பாஞ்சலி**

வழமையாக புஸ்பாஞ்சலி கணபதி ஸ்தோத்திரத்துடன் அல்லது சிவன் முருகன் ஸ்தோத்திரத்துடன்ஆரம்பமாகும்.ரோகிணி செய்த புஸ்பாஞ்சலியோ வித்தியாசமாக இருந்தது. பாரதியியாரின் புதிய ஆத்திசூடியைப் படிப்போர் அதில் அவர் கூறும் கடவுள் வணக்கத்தைக் காண்பர்,அந்தப்பரம் பொருளுக்கு அவர்தரும் வரைவிலக்கணம் இது.

“பலமதத் தினரும் உணர்ந்து உணராத பலவகையாகப்
பரவிடும் பரம் பொருள் ஒன்றே” என்கிறார்

அந்தப்பரம் பொருள் வணக்கத்துடன் புஸ்பாஞ்சலி நடைபெறுகிறது. ஆடலும் ஆரம்பமாகின்றது. அந்தப்பாடலை பூஹதாரி இராகத்தில் அமைத்து அதற்கான அசைவுகளையும் அபிநயங்களையும் அமைத்திருந்தார் திவ்யா . அந்தப்பாடல் அடிகளை தன்காந்தக்குரலில் அட்சரம் பிசகாமல் அழகாகவும் பாடலின் பொருளில் தோய்ந்தும் பாடினார் ராஜம் வீராகவன்.

அந்தப் பாடலின் முழு அர்த்தத்தையும் பூரணமாக அவர் உணர்ந்து பாடியமை புலப்பட்டது அந்தப்பாடலை அவர் பாடிய விதம், அதற்காக அடக்கமாக வயலினில் எழுந்த மெல்லிய இசை, அவர் பாடல் உணர்வுக்கு ஏற்ப தண்ணென எழுந்த மெல்லிய மிருதங்க ஓசை அனைத்தும் நர்த்தகி ரோபிணியின் உடலுக்கூடாகவும் அபிநயங்களுக் கூடாகவும் வெளிப்பட்டன.

அது ஓர் வித்துவ கலாசங்கமம் அனைத்துக்கலைஞர்களும் பரம்பொருள் எனத் தாம் எண்ணிய ஒன்றில் இணைந்த நிகழ்வு, அப்பரம் பரம் பொருளில் ரோபிணி எனும் அச்சிறு பெண்ணும் லயித்து நின்றாள்.

அவளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி அப்படி. திவ்யாவின் நட்டுவாங்கம் மிக சிறப்பாக இருந்தது பார்வையாளாரும் லயித்து நின்றனர். ஆரம்பமே ஒரு லயிப்புக்குள் எம்மை இழுத்துச் சென்றது இச்சங்கமிப்பு ஆற்றுகையில் நன்கு தெரிந்தது. மிகத் தேர்ச்சி பெற்ற அவர்களுக்கு இணையாக நின்றது திவ்யாவின் சுவைமிகுந்த நட்டுவாங்கம், கணீரென்ற நல்ல உச்சரிப்பு தாளக் கட்டுகளைச் சொன்ன கம்பீரம் அனைவரையும் கவர்ந்தது. நர்த்தகி ரோபிணி நன்கு பயிற்றப்பட்டிருந்தாள் அவளது ஆங்கிக அபிநய வெளிப்பாட்டுத் திறன் ஒவொரு உருப்படியிலும் நன்கு புலப்பட்டன அன்று பெற்றமை நல்லதோர் அனுபவம்.

**புதிய புஸ்பாஞ்சலி**

வாதாபி கணபதி எனும் தெலுங்குப்பாடலின் கணபதி கவுத்துவம் அல்லது தமிழ்ப்பாடலின் வரும் வினாயகர் பற்றிய கீர்த்தனங்களே வழமையான பரத அரங்கேற்றத்தில் புஸ்பாஞ்சலியில் இடம் பெறுவது வழமை இங்கோ அவற்றின் இடத்தைப் பாரதியின் பரம் பொருள் வணக்கம் பிடித்துக்கொண்டது. பழமையான புஸ்பாஞ்சலிதான் ஆனால் புதுமையான கருப்பொருள் அதாவது குறிப்பிட்ட கடவுளோ மதமோ வராமல் பொதுவான பரம்பொருள் வணக்கம்.

திவ்யா துணிந்து ஏற்படுத்திய இப்புதுமை பலருக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கவும் கூடும் அப்புதுமை எனக்கும் பிடித்துக்கொண்டது புதுமை செய்பவரே கலைஞர்கள்

**புதுவகை அலாரிப்பு** **அடுத்த இதழில்......**





# வெற்றிமணி அன்னைக்கு அகவை 100

**நவநிதி சுப்பிரமணியம்**
**1920-2020**

அன்னையை விரும் பாதோர் அகிலத்தில் இல்லை! எனக்கும் அன்னையே தெய்வம். வெற்றிமணி பத்திரிகை ஆரம்பித்த நேரம் எனது அன்னைக்கு வயது 30. நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் ஆசிரியை ஆகப்பணியாற்றிக்கொண்டு இருந்தார்.

இன்று ஒரு 30 வயதுப் பெண்ணுக்கு தனது கடமைகளை தொழிலும் செய்துகொண்டு நிறைவேற்றவது அன்றுபோல் சிரமமானது அல்ல. எனது தந்தையும் ஆசிரியராக பணிபுரிந்துகொண்டு மாணவர்களுக்கு என வெற்றிமணி சஞ்சிகையை 1950 ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் 5 பிள்ளைகளையும் பாரத்துக்கொண்டு ஆசிரியப்பணியுடன் வெற்றிமணி சஞ்சிகைக்கு எழுதும் படைபாளிகளையும், மாணவர்களையும் வரவேற்று உபசரித்து விருப்போடு உணவுபரிமாறி மகிழ்ந்ததையும் நான் கண்டு இருக்கின்றேன். அது மட்டுமன்றி பிற மாநிலங்களில் கல்விகற்பிக்கும் வேளைகளில் அங்கு கற்றமாணவர்களின் உயர்கல்விக்கு உதவும்படியாக அவர்களை எங்கள் வீட்டில் தங்கவைத்து படிக்கவைத்த கதைகளும் நிறைய உண்டு.

பொருளாதாரரீதியாகவும் தந்தையின் வெற்றிமணிக்கு எனது அன்னையின் பங்கு நிறையவே உண்டு. அன்னையின் ஒத்துளைப்பு இல்லை என்றால் வெற்றிமணி ஒலித்திருக்கமுடியாது.

2000 ஆண்டு யேர்மனியில் நடைபெற்ற வெற்றிமணி விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அன்று அவர் தனது உரையில் வாசகர்களும் படைப்பாளிகளும் இங்கு பாரி வள்ளல்களாகத் திகழும் வியாபாரிகளும் தரும் ஆதரவு போற்றுதலுக்கு உரியது என்றார்.

பங்குனி மாதம் (11.03.2020) அன்னையின் 100 வது அகவையை நினைவு கூர்ந்து வணங்குகிறேன். 08.03.20 நடைபெறவுள்ள மகளிர்தின விழாவின் அரங்கை அன்னைக்கு சமர்ப்பணம் செய்கின்றோம். (வெற்றிமணி ஸ்தாபகர் மு.க.சுப்பிரமணியம் அவர்களது நூற்றாண்டுவிழா கொண்டாடப்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்)

# இருதய நோய் ஆண்களுக்குரியது...

4ம் பக்கத் தொடர்ச்சி

CPR எனப்படும் இருதய சுவாச மீளியக்க செயற்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. பெண் ஒருவருக்கு பொது இடங்களில் மாரடைப்பு ஏற்பட்டு சுயநினைவு இழந்தால், சமூக சட்டப்பிரச்சனைகள் ஏற்படக்கூடிய காரணங்களால் அருகிலிருப்பவர்கள் அவ்வாறான அவசர சிகிச்சையளிக்க தயங்குகின்றனர்.

இருதய நோயினால் பாதிக்கப்படும் பெண்கள் எந்த வகையில் ஆண்களில் இருந்து வேறுபடுகிறார்கள் என்பதை நோக்க வேண்டும். பெண்களின் அகச்சுரப்பி மாற்றங்களினால், ஹோர்மோன் மாற்றங்களினால் இருதயத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் முக்கியமானவை. இவர்களின் மாதவிடாய்க்கும் அல்லது மாதவிடாய்க்கான காரணிகளான அகச்சுரப்புகள் அல்லது ஹோர்மோன்களுக்கும் தொடர்புகள் இருப்பதை ஆய்வுகள் காண்பிக்கின்றன. பெண்களுக்கு மாதவிடாய்க் காலங்களில் அவர்களது சூலகத்தில் சுரக்கப்படும் ஈஸ்ரஜன் அவர்களை இருதய நோயிலிருந்து, அதாவது இருதய நாடிகளில் பாரிய அடைப்புகள் ஏற்படாமல் பாதுகாக்கிறது. ஆனால், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பரவலான ஒடுக்கம் நாடிகளில் ஏற்படும். இந்த ஹோர்மோன்கள் காரணமாக மிகக் குறைந்த வயதில் மாதவிடாய் ஏற்படத்தொடங்கி, கூடிய வயதுவரை மாதவிடாய் ஏற்படுபவர்களுக்கு இருதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவு.

பெண்களுக்கு மாதவிடாய் நிற்கப்போகும் அல்லது நிற்கின்ற அல்லது நின்றதன் பின்னர் தொடர்ந்து வரும் காலங்களில் பலருக்கு Hot Flashes வெப்பத் தெறிப்பு ஏற்படுவதுண்டு. இவ்வேளையில் முகத்திலோ உடலிலோ அனல் போன்ற வெப்ப உணர்வு ஏற்படும். இரவில் வியர்க்கும். ஆடைகளைக் களைந்துவிட்டு அல்லது காற்றாடியைப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும்போலத் தோன்றும். இவ்வாறான வெப்பத் தெறிப்பு அதிகமாக அல்லது நீண்டகாலம் இருப்பவர்களுக்கு இருதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் என்பதை அண்மைய ஆய்வுகள் காண்பிக்கின்றன. வெப்பத் தெறிப்பு ஏற்படுபவர்களில் உடல் பருமன் அதிகமானவர்கள், நீரிழிவு உள்ளவர்கள், மது அருந்துபவர்கள், மனஅழுத்தம் உள்ளவர்கள், மனப்பதற்றம் உள்ளவர்களுக்கு இருதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு மேலும் அதிகரிக்கிறது.

இந்த வெப்பத் தெறிப்பு ஏற்படுவதைக் குறைக்க ஈஸ்ரஜன் என்ற ஹோர்மோன் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏதாவது காரணத்துக்காக அறுவைச் சிகிச்சை மூலம் கருப்பை அகற்றப்பட்டவர்களுக்கு இம்மருந்து கொடுக்கப்படுவதால் அவர்களுக்கு இருதய நோய் ஏற்படுவது குறைவாகிறது. ஆனால், கருப்பை உள்ளவர்களுக்கு தனியாக ஈஸ்ரஜன் கொடுப்பதனால் அவர்களுக்கு கருப்பையில் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிப்பதனால் அதனைத் தடுப்பதற்கென ஈஸ்ரஜனுடன் புறொஜஸ்ரஜன் என்ற ஹோர்மோனும் சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும். இவை இரண்டையும் சேர்த்துக் கொடுக்கப்படுபவர்களுக்கு இருதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறையவில்லை. எனவே மேலும் பல ஆய்வுகளின் பின்னர் ஈஸ்ரஜன் இருதய நோயைக் குறைக்கும் மருந்தாக பயன்படுத்தக்கூடும் என நம்பப்படுகிறது.

எமது மூளையில் சுரக்கின்ற இன்னொரு அகச்சுரப்பு குளுர் எனப்படும் ஹோர்மோன். இது பெண்களின் சூலகத்தில் ஈஸ்ரஜனைச் சுரக்க தூண்டுகிறது. மாதவிடாய் நிற்கின்ற காலத்தில் ஈஸ்ரஜன் அளவு அதிகமாக இருப்பவர்களுக்கு இருதய நோய் குறைவாகவும், இதன் அளவு குறைவாக இருப்பவர்களுக்கு இருதய நோய் அதிகமாக இருப்பதையும் மற்றொரு ஆய்வு காண்பிக்கிறது. குறைந்த வயதில் மாதவிடாய் நிற்பவர்களுக்கு இருதய செயலிழப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்பதையும் ஆய்வுகள் காட்டுகின்றன.

மங்கையர் இதயம் ஆண்களின் இதயத்திலிருந்து மாறுபட்டது. அத்துடன் மாதவிடாய் நின்றதன் பின்னர் மேலும் மாறுதலுக்குள்ளாகிறது. இந்த இயற்கை மாற்றங்களுக்கு எதிராக போராட முடியாது போனாலும்கூட, சில வாழ்க்கை முறைச் சீராக்கல்கள் மூலம் வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ள முடியும். அதாவது பெண்கள் புகைத்தலை நிறுத்த வேண்டும் (இது எமது சமூகத்தில் ஒரு பாரிய பிரச்சனையல்ல).

ஆரம்ப காலத்திலிருந்தே உணவுக் கட்டுப்பாட்டை பேணி, உடற்பயிற்சி செய்து வருவதன் மூலம் உடற்பருமனைக் குறைத்துக் கொள்ளலாம். நீரிழிவு ஏற்படுவதைத் தவிர்க்கலாம் அல்லது தள்ளிப்போடலாம். கொலஸ்ரோலின் அளவையும் உயர் இரத்த அழுத்தத்தையும் கட்டுப்படுத்தலாம். இவற்றையும் மீறி இந்த நோய்கள் ஏற்படுமானால் மருந்துகள் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தி மங்கையர் இதயங்களைப் பாதுகாப்பது அவசியம்.

நன்றி : தமிழர் தகவல் கனடா




Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund



மகளிர் தின கவிதைகள்

நெடுந்தீவு முகிலனின் 14




நான் அழகாக இல்லை என்று எந்த ஒரு பெண்ணும் தன்னை தாழ்த்தி கொள்வதில்லை

இருப்பவற்றை வைத்து திருப்தி அடைவதில் பெண்களைப் போல இந்த உலகத்தில் எந்த உயிரினமும் இல்லை...

இரண்டு நபருக்கான உணவை தயார் செய்வதற்கான பொருட்களை அவளிடம் கொடுத்து பார். இருபது பேரின்பசியை அவள் போக்கி விடுவாள்.
எப்படி இருந்தாலும் தங்களை பிரமிப்பாக வெளிப்படுத்தும் சக்தி பெண்களுக்கு மட்டும் தான் உண்டு

ஒப்பனையையும் அலங்காரத்தையும் வைத்து நான் கணக்கிடவில்லை... தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் நான் அவதானித்திருக்கிறேன்.

கூட்டத்தில் ஒருத்தியை தான் ஆண்கள் தேவதை என்று கொண்டாடுவார்கள்.
பெண்கள் என்றாலே தேவதைகள் தான் என்பதை எல்லோரும் புரிந்து கொள்வதில்லை

ஆண்களிடம் இல்லாதது பெண்களிடம் என்ன இருக்கிறது என்றால் ..? நிறைய சொல்லலாம் ஆனால் ஒருபோதும் நான் உடலுறுப்பை சொல்ல மாட்டேன்.
தன் அழகின் ரகசியம் அங்கே இருக்கிறது என்று ஒவ்வொரு பெண்ணுக்கும் தெரியும்.ஆனால் அது ஒவ்வொரு பெண்ணுக்கும் மாறுபடும்.

தாய்மை என்ற ஒன்றே போதும் இந்த உலகத்தில் பெண்களுக்கு நிகரானது எதுவும் இல்லை என்றுநம்புவதற்கு..!

திமிராய் இருக்கிற பெண்களை எனக்கு பிடிக்கும் ஏனென்றால் அவர்கள் தான் ஆண்களை விட பலமானவர்கள்.
அவர்களின் கோபத்திற்குள் தான் நளினம் ஒளிந்திருக்கும் ஆதலால் ரசனையில் வெறுப்பு ஏற்படாது.

தனக்கு ஏற்றதான ஆடைகளை அணிவார்கள். தவறாக பார்க்கும் கண்களை கண்டுகொள்ள மாட்டார்கள்.

ஏனோ தானோ வென்று வாழ்ந்து விட்டு போவதற்கு அவர்களுக்குப் பிடிக்காது. என்ன தேவையோ அதைதாங்களே தெரிவு செய்வார்கள்.

அவர்கள் தாங்கள் வாழ்வதற்கான ஒரு வரைபடத்தை உருவாக்கி அதன் வழியே பயணிக்கவும் முயற்சிப்பார்கள்.

தனக்கு என்ன பிடிக்கிறதோ அதில் பிடிவாதமாக இருப்பார்கள். பிடிக்கவில்லை என்றால் அதை முகத்துக்கு நேராகவும் சொல்லுவார்கள்.

அவர்களிடம் ஒரு புன்னகையை கொடுத்து இலகுவாக இதயத்தை வாங்கிவிட முடியாது.

அவர்களின் எண்ணத்தில் பெரும் தூர நோக்கும் இருக்கும். எந்த சிற்றின்பத்திற்காகவும் எதையும் இழுந்து விடமாட்டார்கள்.

அவர்களை ஏமாற்ற முடியாது. தங்களுக்கான ஒரு நியாய கருத்தை உருவாக்கி அதில் முடிவாக இருப்பார்கள்.
பிழையான கருத்துக்களை அவர்களிடத்தில் திணிக்க முடியாது. தவறாக நினைப்பவர்களை அவர்கள் கண்களேதூர துரத்தி விடும்.

திமிராய் இருக்கிற பெண்களை பெரும்பாலான ஆண்கள் விரும்புவதில்லை - ஆனால் இந்தக் கேடு கெட்டசமுதாயத்தில் இருந்து தப்பிக் கொள்வதற்காக தன் பாதுகாப்புக்காகத்தான் அவள் அவ்வாறு மாறிக் கொண்டாள்என்பதை யாரும் அறிவதில்லை..

## ஊரே ஒன்றுசேர்ந்து கொண்டாடிய பிறந்தநாள் விழா.

பிறந்தநாள் யாவருக்கும் வருடம் ஒரு முறை வரும். ஊரைக்கூட்டிக் கொண்டாடுபவரும் உண்டு. ஆனால் அந்தப் பிறந்தநாளை ஊரே கூடிக் கொண்டாடுவதும் உண்டு. அப்படிக் கொண்டாடப்பட்ட ஒரு பிறந்தநாளைப் பார்ப்போம்.
வணபிதா அல்பெட் கோலன் அவர்களின் அறுவதாவது பிறந்தநாளை ஒரு நகரமே ஒன்றிணைந்து கொண்டாடி மகிழ்ந்தது. தமிழர்களுக்காக குரல் கொடுத்தும் உதவியும் வருகின்ற இம்மாமனிதனுக்கு எம்மால் முடிந்த சிறிய நன்றிகள். வெளிநாட்டில் வாழ்ந்து வரும் மக்களுக்கு மட்டும் அல்ல எம் தாயகத்தில் வாழும் எம் தமிழ் உறவுகளுக்கும் உதவி வருகிறார் அல்பெட். தமிழாலய வளர்ச்சிக்கும் இளையவர்களின் வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருபவர்.

இவரின் பிறந்தநாள் அன்று வணபிதா வேட்டி சட்டை அணிந்திருந்தார். பார்க்கவே அழகாக இருந்தது. இவர் தமிழர்களில் ஒருவர் போலவே இருந்தார்.அவரை மண்டபத்துக்கு அழைத்துச் சென்ற அழகோ அழகு.

வாசலில் அனைவரும் பலூன்களை கையில் வைத்திருந்து வனபிதாவை வரவேற்றனர்.அவர் வந்த பின் அனைவரும் சேர்ந்து பலூன்களை வானத்தை நோக்கி பறக்க வைத்தார்கள். அதற்குப் பின் ஆலய குரு அவர்கள் மாலை அணிவித்து அவரை அழைத்து மண்டபத்துக்குள் நுழைந்தார். பின்னர் பலர் பொன்னாடைகள் அணிவித்து மகிழ்ந்தனர்.
எவ்வளவு உரைகள், பாராட்டுகள், வாழ்த்துக்கள். சொல்ல வார்த்தைகளே இல்லை. தாய்மொழி வளர்ச்சிக்காகவும் விளையாட்டுக்காகவும் உதவிக் கரம் நீட்டி தன்னலமற்று வாழும் மனிதனுக்கு எமது நன்றி. யோ்மன் மக்கள் நமக்கு செய்யும் உதவிகளுக்கு நாம் நன்றி உடையவர்களாக இருப்போம்.



றஜினா தருமராஜா




G SYSTEMS Dreams Of Technology
+44 2035005944 +1 6478461813 +41 315281679 +45 89878033
+1 6467553014 +61 283104289 +35 227862039 info@gsystem.co
+94 112364394 +34 931807349 +32 28080901 www.gsystem.co

# பழங்களும் நோய்களும்




"வாயைக் கட்டிக் கிடக்கிறாளே. ரம்புட்டான் ரம்புட்டானாகத் திண்டு தீத்தாள். இப்ப காய்ச்சல் எண்டு அனுங்கிக் கொண்டிருக்கிறாள்." திட்டித் தீர்த்தார் தந்தை. வேலைக் போகாமல் பிள்ளையை மருத்துவமனைக்குக் கூட்டித் திரிய வேண்டிக் கிடக்கிறதே என்ற சினமாக இருக்கலாம்.
இவர் மட்டுமல்ல, இன்னமும் பலர் தங்கள் பிள்ளைகள் ரம்புட்டான் பழம் சாப்பிட்டதால்தான் காய்ச்சல் வந்தது என அவர்களில் என்று குற்றம் கண்டார்கள்.

Dr IN
டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

மே, ஜீன் ஜீலை மாதங்கள் பொதுவாக ரம்புட்டான சீசனாக இருக்கும். இலங்கையில் மல்வான ரம்புட்டான் மிகவும் பிரசித்தமானது. களனிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்திலிலேயே பெருமளவு ரம்புட்டான் உற்பத்தியா கின்றது. இருந்தாலும் பிபில, மொனராஹல பகுதியிலிருந்து தை மாசி மாசங்களில் குறைந்தளவு ரம்புட்டான் பழங்கள் வருவதுண்டு.

### ரம்புட்டானுக்கு காய்ச்சலா?

சீசன் காலத்தில் ரோட் ஓரமெல்லாம் தற்காலிக கடைகள், லொறிகள். இவற்றில் எல்லாம் மதாளித்த சிவத்த கம்பளிப் பூச்சிகள் போலப் பழங்கள் குவிந்து கிடக்கும். வழமையான பழக்கடைகளிலும் கூடை நிறைய வைத்திருப்பார்கள். பிள்ளைகள் மட்டுமல்ல பெரியவர்களும் ரம்புட்டான் அமுக்குவதில் பின்நிற்பதில்லை. இவ்வாறு ரம்புட்டான் சாப்பிட்டவர்களில் சிலர் காய்ச்சலுடன் வருகிறார்கள். "ரம்புட்டான் காய்ச்சல்" என்று தாங்களாகவே நாமம் சூட்டிவிடுகிறார்கள்.

அதே வேளை ரம்புட்டான் சாப்பிடாத பலரும் இப் பருவ காலத்தில் காய்ச்சலுடன் வருகிறார்கள்.

காய்ச்சல் என்பது தனி ஒரு நோயல்ல என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். தடிமன் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், டைபொயிட் காய்ச்சல் எனப் பலவகை இருக்கின்றன. இவை யாவம் கிருமிகள் தொற்றுவதாலேயே வருகிறது.

ரம்புட்டான் சாப்பிடுவதால் எவ்வித காய்ச்சலும் வருவதில்லை. ஆனால் இது பரவலாகக் கிடைக்கும் காலங்களான ஜீன் ஜீலை மாதங்களில் பெரும்பாலும் தென்னிலங்கையில் மழை பெய்வதுண்டு. வெயிலுடன் மழையும் மாறி மாறி வரும் இம் மாதங்களில் டெங்கு முதல் சாதாரண காய்ச்சல்கள் எனப் பல்வேறு தொற்று நோய்கள் பரவுகின்றன

நுளம்பு கடிப்பதால் டெங்குக் காய்ச்சல், மலேரியா போன்றவை வருகிறன. எலிகளின் எச்சங்களால் எலிக்காய்ச்சல் பரவுகிறது. நோயுள்ளவர் தும்முவதாலும் இருமுவதாலும் தொற்றுகிறது பன்றிக் காய்ச்சல். ரம்புட்டான் பழம் சாப்பிடுவதால் எந்தக் காய்ச்சலும் பரவுவதில்லை.

### எப்படி உண்பது

நெல்லிக்காய், மங்குஸ்தான், மாம்பழம், கொய்யாப்பழம் போன்ற எந்தப் பழத்தை வாங்கினாலும் அவற்றை உண்ண முன்னர் நன்கு கழுவிய பின்னரே உண்ண வேண்டும் என்பது தெரிந்ததே. பழத்தின் உட்புறம் கிருமிகள் தீண்டாது சுத்தமாக இருக்கும் என்ற போதிலும் அவற்றின் தோலானது பலவித அழுக்குகளாலும் கிருமிகளாலும் மாசடைந்திருக்கக் கூடும்.

ஏனெனில் பழங்களை பிடுங்கி நிலத்தில் போட்டிருப்பார்கள். நிலத்தில் நாய் பூனை போன்ற பிராணிகளின் மலம், குருவிகளின் எச்சம், மனிதர்களின் கழிவுகள் போன்ற பலவற்றிலிருந்த கிருமிகள் பழத்தின் தோலை மாசுபடுத்தியிருக்கும். பழங்களை பறித்த இடங்களிலிருந்து விற்பனை செய்யும் இடத்திற்கு கொண்டுவரம் பயன்படுத்தும் பைகள் சாக்கு போன்றவற்றில் இருந்தும் கிருமிகள் பரவியிருக்கும்.

அதேபோல தெருவோரம் வைத்து விற்கும்போதும் காற்றிலிருந்தும் பழங்களைக் கையாளும் மனிதர்களின் கரங்களிலிருந்தும் பலவிதமான கிருமிகள் அவற்றின் தோலில் படிந்திருக்க வாய்ப்புண்டு.

எனவேதான் ரம்புட்டான் முதல் வேறு எந்தப் பழத்தை வாங்கினாலும் சாப்பிட முன்னர் நன்கு கழுவவேண்டும். இரண்டு தடவைகளாவது கழுவ வேண்டும். அல்லது ஓடும் நீரில் கழுவ வேண்டும்.

கழுவிய பின்னரும் கூட ரப்புட்டான் தோலை வாயினால் கடிக்க வேண்டாம். கத்தியினால் தோலை வெட்டி அகற்றிய பின்னர் மீண்டும் கைகளை நீரினால் கழுவி அதன் பின்னரே பழத்தை எடுத்து உண்ணுங்கள். சுத்தப்படுத்திய பழங்களைச் சாப்பிடுவதால் நோய்கள் எதுவும் தொற்றாது. உள்ளிருக்கும் சுளைகள் சுத்தமானவை.

மாறாக சுத்தப்படுத்தாமல் உண்டால் வயிற்றோட்டம், வாந்தி, டைபொயிட், செங்கண்மாரி, குடற் பூச்சிகள் போன்ற பல்வேறு நோய்களுக்கும் ஆளாகக் கூடும் என்பதை மறுப்பதற்கில்லை

### ரம்புட்டான் பழம் பற்றி

ரம்புட்டான் இலங்கையில் பிரபல்யமாக இருந்தாலும் இதன் பூர்வீகம் இந்தோனிசியா என அறியப்படுகிறது.

இது அதிக நீர்ச் சத்துக் அதிகம் கொண்ட பழமாகும். ஆயினும் பழத்தின் சாப்பிடக் கூடிய பகுதியின் 100 கிராமிலிருந்து 64 கிலோ கலோரியளவு சக்தி கிடைக்கும். அதேவேளை புரதம் 1 கிராம் உள்ளது. கொழுப்பு மிகக் குறைவாக 0.1 கிராம் மட்டுமே உள்ளது. கல்சியம், பொஸ்பரஸ் போன்ற கனிமங்களும், ரைபோபிளேவின், தயமின், விற்றமின் சீ போன்றவையும் நிறையக் கிடைக்கின்றன.
இதன் காரணமாக இந்தோனிசியா. மலேயா போன்ற நாடுகளில் நீரிழிவு, பிரஸர் போன்ற நோய்களுக்கான வீட்டு மருத்துவமாக உபயோகிக்கப் படுகிறது. காய்ச்சலுக்கு மருந்தாக இதன் பட்டைகளை உபயோகிப்பதாகவும் தெரிகிறது.
ரம்புட்டானால் காய்ச்சல் வருகிறது என நம்மவர்கள் சொல்ல காய்ச்சலுக்கு மருந்தாக அதே ரம்புட்டானை வேறு நாடுகளில் பயன்படுத்துவது சுவார்ஸமான தகவலாகப்படுகிறது. இருந்தபோதும் இதனால் காய்ச்சல் வருகிறது என்பது தவறான கருத்து என்றே சொல்ல வேண்டும்.

### வேறு பழங்கள் பற்றிய தவறான எண்ணங்கள்

ரம்புட்டான் பற்றி மட்டுமல்ல வேறு பழங்கள் பற்றியும் எமது சமூகத்தினரிடையே பல தவறான எண்ணங்கள் இருக்கவே செய்கின்றன. அவை பற்றிய விழிப்புணர்வு தேவை.

தொடர்ச்சி 12 ம் பக்கம்...



03 ம் பக்கத் தொடர்ச்சி

## கோகிலா மகேந்திரன்




மகாஜனாக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் , அதிபர் பொ.கனகசபாபதி அவர்களுடன்



அவுஸ்திரேலியாவில் கௌரவம் ,

தாய் நாட்டைப் போர் மேகம் சூழ்ந்திருந்தபோது உளவளத் துணையாளர் பயிற்சி பெற்று,அதன் தொடர்ச்சியாக நெருக்கீட்டுக்குப் பிற்பட்டமன வடுவுக்குரிய விசேட சம்பவ விபரிப்புச் சிகிச்சையை இத்தாலி நாட்டின் vivo குழு வினரிடம் பயின்று பிரயோகித்தவர். இரு நூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை உளவளத் துணையாளர்களாக ப் பயிற்று வித்து மாணவர் நலம் பேண உதவியவர். தொடர்ந்து அறிகை நடத்தைச் சிகிச்சை,ACT ஆகியவற்றையும் உளவளத் துணையாளர்களுக்குப் பயிற்றுவித்துத் தானும் துணை நாடிகளுக்கு உதவி வருபவர்.

இவரது நூல்களுக்காகப் பல முறை தேசிய சாகித்ய விருது ,மாகாண மட்ட இலக்கிய விருது ,கொடகே தேசிய விருது, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது, ரூபராணி ஜோசேப் இலக்கிய விருது, இரா உதயணன் இலக்கிய விருது,வடக்கு மாகாண முதலமைச்சர் விருது சிவத்தமிழ் விருது (2020) எனப் பல விருதுகளையும் பரிசுகளையும் அள்ளிக்கொண்டவர்.

பண்ணிசை பயின்று திருவாவடுதுறை ஆதீனத்தின் திருமுறை நெறிச்செல்வர் பட் டம் வென்றுள்ளார் .

இலங்கை அரசும் கலை ,கலாசார சமூக நிறுவனங்களும் இவருக்கு " இலக்கிய வித்தகர் " "கலைச்சுடர் " "கலா பூஷணம் " "சமூக திலகம் " "கலைப் பிரவாகம் " என்ற பட்டங்களை வழங்கியுள்ளன. இவ்வளவு பெருமைக்குரியவரது திறனையும்,சேவையையையும் கௌரவிக்குமுகமாக வெற்றிமணி தனது மகளிர்தின சிறப்பு இதழின் கௌரவ ஆசிரியராக்கி கௌரவித்து மகிழ்கின்றது.



மகாஜனாக் கல்லூரி நாடக விழாவில் கோகிலா மகேந்திரன்



11 ம் பக்கத் தொடர்ச்சி...

## பழங்களும் நோய்களும்

முழுகிப் போட்டு மாம்பழம் சாப்பிட்டன். தொண்டை கட்டி சளியோடை காய்ச்சல் வந்துவிட்டது" எனத் தன்னைத்தானே நொந்து கொண்டாள் அரச நிறுவனம் ஒன்றில் அதிகாரியாகப் பணியாற்றும் ஒரு பெண்மணி.

"நானும்தான் முழு மாம்பழம் சாப்பிட்டனான். எனக்கு ஒண்டும் இல்லைதானே" என்றார் கணவன். மற்றவர் முன்னாலாவது தனது வீரத்தைக் காட்டிய பெருமை முகத்தில் படர்ந்தது.

"இந்தச் சளித் தொல்லையோடை நாளாந்தம் அல்லாடுறன். வாழைப் பழத்தை தொடுறதே இல்லை" என்றார் இன்னொரு பெரியவர்.

"தயங்காமல் வாழைப்பழம் தினமும் சாப்பீடுங்கோ. இவ்வளவு நாளும் வாழைப்பழத்தை கைவிட்டும் சளித்தொல்லை தீரவில்லை என்றால், உங்கடை சளிக்கு வாழைப்பழம் காரணம் இல்லை என்றுதானே அர்த்தம்" என்றேன் நான்.

சிறிது காலத்திற்கு முன்னர் Imperial College of London ல் செய்யப்பட்ட ஒரு ஆய்வானது தினமும் ஒரு வாழைப்பழம் சாப்பிடும் குழந்தைகளுக்கு ஆஸ்த்மா நோய் வருவதற்கான சாத்தியம் சாப்பிடாதவர்களை விட 34% குறைவு என்கிறது. எனவே சளித்தொல்லைக்குக் காரணம் வாழைப்பழம் அல்ல என்பது தெளிவாகிறது.

அதேபோல பிரஷர் வராமல் தடுப்பதற்கும் அதைக் கட்டுப்படுத்துவதற்கும் வாழைப்பழத்தில் உள்ள கனிமமான பொட்டாசியம் உதவும். இதற்கு எதிர்மாறாக கறி உப்பில் உள்ள சோடியம் சத்து பிரஷரை உயர்த்தும் என்பது பரவலாகத் தெரிந்த விடயமே. அத்துடன் குருதியில் பொட்டாசியம் அதிகளவில் இருப்பதானது பல்வேறு நோய்களால் ஒருவர் மரணிக்கக் கூடிய சாத்தியத்தை 20% ஆல் குறைக்கிறது என்கிறது மற்றொரு ஆய்வு.

வாழைப்பழம் பற்றிய தவறான கருத்துகளை உதறி ஒதுக்க வேண்டும். அது மிகச் சிறந்த பழங்களில் ஒன்று என்பதால்தான் உலகில் ஆகக் குறைந்தது 107 நாடுகளில் பயிரடப்படுகிறது. பலராலும் விரும்பி உண்ணப்படுகிறது.

மாம்பழத்தில் 20ற்கு மேற்பட்ட விட்டமின்களும் தாதுப் பொருட்களும் உண்டு. அதிலுள்ள ணநயஒயவொைெ என்ற ஒட்சிசனெதிரி ஆனது கண்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய நீல ஒளிக் கதிர்களை வடித்தெடுப்பதன் மூலம் மக்கியுலர் டிஜெனரேசன் (Macular degeneration) என்ற கண்பார்வை இழப்பு நோயைத் தடுக்கும் எனக் கூறுகிறார்கள்.

அத்துடன் மாம்பழத்தில் உள்ள பீற்றா கரோடின் என்ற பொருளானது சளி ஆஸ்த்தா போன்றவற்றை தடுக்கும் ஆற்றல் கொண்டது. பப்பாளி, பூசணி, புரொகோலி, கரட் போன்றவற்றிலும் இது நிறைய உண்டு. அத்துடன் புரஸ்ரேட் புற்று நோய், பெருங் குடல் புற்று நோய் போன்றவற்றையும் தடுக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு வகைப் பழங்களிலும் பல போஷணைப் பொருட்கள் உண்டு. அவை பல நோய்களைத் தடுக்கும் ஆற்றல்கள் கொண்டவை. ஆயினும் அவற்றை விபரிக்க கட்டுரையின் நீளம் இடம் தராது.

ஒவ்வொரு வேளை உணவுடனும் ஏதாவது ஒரு பழத்தையாவது உண்ணுங்கள். நோயற்ற வாழ்வு வாழ அது கை கொடுக்கும்.



# சிரிப்பின் மகத்துவம்



மனிதன் சிரிக்கும் விலங்கு எனப்படுகிறான். இது மனிதனுக்கேயான சிறப்புரிமை. வாழ்க்கை சிரித்து ஆனந்தமாக வாழ்வதற்கே! சிரிப்பில் பலவகை உண்டு. உளம் மகிழ்ந்த சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, எகத்தாளச் சிரிப்பு, வஞ்சகச் சிரிப்பு, வீரச் சிரிப்பு என பலவற்றைக் கூறலாம். இருப்பினும் இங்கு நாங்கள் பார்க்க இருப்பது உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் ஆற்றலை வழங்கி ஆனந்தத்தை தரவல்ல உளமகிழும் சிரிப்பு. குழந்தையில் தொடங்கிய இயற்கையின் கொடையாகிய இந்த அழகிய சிரிப்பு வாழ்வின் இறுதிவரை ஒருவரோடு அதிகம் உறவாடும் எனில் அவருக்கான வாழும் நாட்களை நீடித்து ஆரோக்கியத்தையும் பரிசளிக்கிறது இந்த சிரிப்பு. எனவேதான் "வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்றனர்.

அன்றாட வாழ்வில் இன்று மிகுந்த பரபரப்பும், அதிகம் தொழில்நுட்பங்களோடு செலவழிக்கும் இயந்திரமயமான வாழ்வாகியும் போய்விட்டது. இந்நிலையில் குடும்பம் மற்றும் உறவுகளோடும், நண்பர்களோடும், சமுதாயத்தோடும் இணைந்து அகமகிழ்ந்து வாழும் நிலை இல்லாமலே போய்விட்டது எனலாம். இறுக்க மனநிலையில் பசி, தாகம் போன்ற உணர்விற்கே அந்த உணர்வை உணர்ந்து செயற்படாமல் நேர அட்டவணை மூலம் உள்ளெடுக்கப்படுகிறது. இயல்பான சிரிப்புக்கு கூட இன்று சிகிச்சைக்காக சிரிப்பு முகாம் என ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அது "சிரிப்பு தெரபி" என உலகெங்கும் பிரபல்யமாக அழைக்கப்படுகிறது. இன்றைய வாழ்வில் அதிக நோய்க்கான காரணம் இறுக்கமான மனநிலை எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே தான் குறைந்த பட்சம் ஒருவர் முப்பது தடவையாவது நாளொன்றுக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் என மருத்துவம் கூறுகிறது. அதிக காலம் உயிர்வாழ்ந்த முதியவர்களிடம் அதற்கான காரணத்தை கேட்டீர்களானால் அவர்கள் "எப்போதும் எதற்காகவும் வருந்தியதில்லை", "சிரிப்பு என்னை விட்டு சென்றதில்லை" என்பார்கள்.

அறிமுகமற்ற குழந்தையினை பார்த்து சிறிது நேரமாக புன்னகைக்கும் போது அக்குழந்தை அவ்விடத்தை விட்டு நீங்கும் வேளையில் முத்தத்தின் பாவனையை கரங்களை வாயில் வைத்து வெளிப்படுத்துவதை கண்டிருப்போம். அல்லது பார்வையில் இருந்து மறையும்வரை பார்த்துக் கொண்டே செல்லும் அக்குழந்தை. சிரிப்பு இலகுவில் இதயங்களின் இணைப்பை ஏற்படுத்துகிறது. உறவின் பாதுகாப்பு தன்மையினை உறுதிப்படுத்துகிறது. தெருவோரம் நடந்து செல்லும் அறிமுகமற்ற ஒருவர் பார்த்து புன்னகைக்கையில் எம்மையறியாமலே பதிலுக்கு புன்னகை உருவாகிறது. புன்னகைத்து பின் காலை வணக்கம் கூறிவிட்டுச் செல்வதைக்கூட காணமுடியும். அந்த சிரிப்பே அறிமுகமற்ற ஒருவருடன் அறிமுகத்தை ஏற்படுத்தவல்லது. இது ஒரு அழகான உடல்மொழியாகும். உலகின் அத்தனை மொழிக்கும் பொதுவானது இம்மொழி.

ஒரு மேலதிகாரியை பதற்றத்துடன் சந்திக்கும் போது அந்த அதிகாரியின் புன்னகை கலந்த பார்வை முழு கலக்கத்தையும் வினாடியில் கலைத்து விடக்கூடியது. கேள்விகளின் சாதகமான பதிலை அழகான ஒரு சிரிப்பே உணர்த்திவிடும். அன்பான சிரிப்பு எத்தனையோ பகைகள், போர்களையே நிறுத்தியிருக்கும்.



கண்களை மூடி உதடு புன்னகைக்கையில் உள்ளம் மலர்ந்து விரிவடையும். புத்தரின் தியான முறைகளில் தன்னை தானே ஆனந்தமாக வைத்துக்கொள்ளும் பரவச நிலை முதன்மை வகித்தது.

கரிணி

உள்ளம் மலர்ந்தாலொழிய அங்கு வேறெந்த நல்ல விடயங்களையும் உள்வாங்க முடியாது. இறுக்கமான மனநிலையில் எதையுமே சாதிக்க முடியாது. சிரிப்பு ஒன்றே உள்ளத்தை வினாடிப் பொழுதில் பரந்து மலர வைக்கக் கூடியது. இதனை பரீட்சித்து பார்க்க வேண்டுமெனில் கண்களை மூடி நெஞ்சிற்குள் மனதினை செலுத்தி உதட்டில் புன்னகைத்துப் பார்க்கலாம். ஏதோ ஒரு சக்தி நெஞ்சிற்குள் மலர்ந்து பரவசத்தை ஏற்படுத்தும். எந்த உச்சக்கட்ட துயரத்தையும் உடனேயே மாற்றிவிடும். ஆக துயரத்தை இழுத்து வைத்து வேதனையை போதை போன்று மீண்டும் மீண்டும் அனுபவத்தில் தருவது மனமே.

சிரிப்பு அணுக்கூறுகளை புதுப்பிக்கும். அழும் போது உடலில் வராத அதிர்வு சிரிக்கும் போது உடலெங்கும் வருகிறது. அந்த அதிர்வு ஆனந்தத்தோடு உருவாகுவதால் மூளைக்கான சக்தி அதிகமாக கிடைத்து உடலெங்கும் அந்த அற்புதத் தன்மை பெருகுகிறது. இந்நிலையில் உடலில் உள்ள குறைகள் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு சீரமைக்கப் படுகின்றன.

உடலின் சக்தி மையங்களினை வைத்துப் பார்க்கையில் சிரிக்கும் போது தொப்புளுடன் கூடிய வயிறு உள்நோக்கி அழுத்தப்படும். அங்கு "மணிபூரகம்" என்று சொல்லப்படுகின்ற சக்தி மையம் சிறப்பாக செயற்பட்டு சக்தியை மேல் நோக்கி செலுத்தும். இந்நிலையில் உடல் நேர்மறை ஆற்றல்களைப் பரப்பும். அதாவது தனக்கும் தன்னை சுற்றியுள்ள சூழலுக்கும் அந்த ஆற்றல் வெகுவாகப் பரவும். எனவே தான் சிரிப்பு, மகிழ்வு நிறைந்த இடத்தில் இருக்கும் போது நேரம் போவதே தெரிவதில்லை. நேர்மறையான ஆற்றல்கள் தன்னை மறந்து கரைந்து போகச் செய்துவிடும். இந்நிலை உயர்ந்த தெய்வீகமானது. இதே வேளை கவலை, மன அழுத்தம் என்பன சக்தியை கீழ்நோக்கி செலுத்துவதோடு பலமிழக்க செய்து சோர்வை ஏற்படுத்திவிடும். தொப்புளில் உள்ள சக்தி இயக்கம் கீழ்நோக்கி அதிகமாக இருக்கும் போது அதிக உணவு உட்கொள்ளல், உறக்கம், போகம், கோபம், குரோதம், விரக்தி போன்ற எண்ணங்கள் ஆட்கொள்ளும். இதே சக்தி நிலை மேல் நோக்கி இதயத்தை அடைந்து மேலும் மேல் நோக்கி செல்ல முடிந்தால் அன்பு, கருணை, முழுமை, இணக்கம் போன்ற உயரிய எண்ணங்கள் மேம்படுவதோடு அதே உயர்நிலை சக்தி கொண்டு பிறரை குணமாக்கும் தொடுகை வைத்தியர் (கீலர்) ஆக முடியும். முழு ஆனந்தமாக இருக்கும் ஒருவரே பிறருக்கு தன் ஆனந்தத்தை, அற்புத உணர்வை பகிர்ந்து கொள்ள முடியும்.

ஆனந்தமான மனநிலை மற்றும் நகைச்சுவை உணர்வு மிக்கவர்களை எப்போதும் மனிதர்கள் சூழ்ந்திருப்பார்கள். அவர்களுடைய அந்த சிரிப்பின் நேர்மறை ஆற்றல் அவர்கள்பால் ஈர்ப்புசக்தியை ஏற்படுத்தும். துயரம் எவ்வாறு தேவையற்ற விடயங்களை ஈர்க்குமோ அதே போல் சிரிப்பு மகத்தான நல்ல விடயங்களை தன்பால் ஈர்க்கும்.

ஐந்து வினாடிகள் புன்னகைப்பதால் மிக அழகான புகைப்படத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றால்.. கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள் தொடர்ந்து புன்னகைக்கும் போது உங்கள் வாழ்வு எவ்வளவு அழகாக இருக்கும்.




# இந்தியாவில் சாதனை புரியும் தாயகத் தமிழச்சி




## நேர்காணல்- பொலிகையூர் ரேகா

தாயகத்தின் வல்வை மண்ணைப் பூர்விகமாகவும் தமிழகத்தின் திருச்சியை வாழ்விடமாகவும் கொண்டு நீச்சல் துறையில் பல சாதனைகளைப் படைத்து வரும் எம் மண்ணின் மகள் "அதிவேக நீச்சல் வீராங்கனை" தனுஜா ஜெயக்குமாருடனான நேர்காணல்.

1.வணக்கம் தனுஜா, உங்களைப் பற்றிக் கூறுங்கள்?
வணக்கம், எனது பெயர் தனுஜா. எனது சொந்த இடம் இலங்கையில் உள்ள வல்வெட்டித்துறை. தற்சமயம் திருச்சியில் அகதிகளாக வாழ்ந்து வருகிறோம். கே.கே நதரில் உள்ள ஆல்பா விஸ்டம் வித்தியாசரம் என்னும் பள்ளியில் 8ஆம் வகுப்பில் கல்வி பயின்று வருகின்றேன். எனது அப்பாவின் பெயர் சி.ஜெயக்குமார், அம்மாவின் பெயர் அருள்ஜோதி, என்னுடைய தங்கையின் பெயர் டிலாஜினி.

2. எந்த வயதில் நீங்கள் நீச்சல் கற்றுக்கொள்ளத் தொடங்கினீர்கள்?
ஆறு வயதில்

3. நீங்கள் எவ்வாறு இந்த நீச்சல் துறையைத் தேர்வு செய்தீர்கள்?
எனது அப்பா பள்ளி விடுமுறை நாட்களில் என்னைத் திருச்சியிலுள்ள பெமினா நீச்சல் தடாகத்திற்குக் கூட்டிச் சென்று அடிப்படை நீச்சல் பயிற்சி சொல்லிக் கொடுப்பார். நீச்சல் எனக்கு மிகவும் பிடித்திருந்ததால் அப்போதே எனக்கு நீச்சலின் மீது ஈடுபாடு வந்துவிட்டது.

4. நீச்சல் வீராங்கனையாக உங்களின் சாதனைப் பயணம் குறித்துக் கூறுங்கள்?
நான் 2015ஆம் ஆண்டுதான் மாநில அளவிலான போட்டியில் கலந்துகொள்ள ஆரம்பித்தேன். 2016ஆம் ஆண்டிலிருந்து மாநில அளவில் பதக்கங்கள் வெல்ல ஆரம்பித்தேன். இக்கால கட்டத்தில் இந்திய அளவில் விளையாடுவதற்குத் தெரிவானேன். அப்போது தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் 10 வயதான என்னை 14 வயது எனக் குறிப்பிட்டிருந்தார்கள். அதனால் எந்தவொரு நீச்சல் போட்டியிலும் கலந்துகொள்ள முடியாத நிலை உருவாகியது. இது தொடர்பாக எனது அப்பா பலரிடம் உதவி கேட்டும் யாருமே உதவ முன் வரவில்லை. பல கஸ்டங்களுக்கு மத்தியில் அப்பா மதுரை நீதிமன்றத்தில் சட்டப்படி வழக்குத் தொடர்ந்தார். ஒரு வருடம் நீடித்த அந்த வழக்கில் மீண்டும் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று எனக்குச் சாதகமாகத் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.பின்பு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் எனது வயது 11 எனச் சரியாகக் கூறப்பட்டது. எனக்காக வாதாடும் வழக்கறிஞர் இன்றுவரை எந்தவிதக் கட்டணமும் வாங்குவதில்லை அவர் பெயர் மரிய ஜான்சன்.



அதன் பின்பு 2018,2019 இல் மட்டும் தமிழ் நாட்டு அளவில் 58 தங்கப் பதக்கங்கள் பெற்றதுடன் 11 சாம்பியன் பட்டமும் பெற்றேன். தென்மண்டல அளவில் 4 தங்கப் பதக்கங்களும்,8 வெள்ளிப் பதக்கங்களும் பெற்றேன். இந்திய அளவில் 1 தங்கப் பதக்கமும்,3 வெள்ளிப் பதக்கங்களும், 1 வெண்கலப் பதக்கமும் பெற்றுள்ளேன்.
இந்த ஆண்டு மாசி மாதம் 8ம் திகதி 9ம் திகதியில் மதுரையில் Tamilnadu state aquatic association னால் நடத்தப்பட்ட தமிழ்நாட்டு அளவிலான குறுந்தூர நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு
50 metre freestyle 29.56 செக்கனிலும்
100 metre butterfly 1.12.69 செக்கன்
50 metre butterfly 32.62 செக்கன்
25 metre freestyle 13.38 செக்கனில் முடித்து அனைத்துப்போட்டியிலும் பதக்கம் பெற்றதுடன் சாம்பியன் பட்டமும் பெற்றுள்ளேன்.

5.இந்தச் சிறு வயதில் அதிக வெற்றி பெற்றுள்ளீர்கள். வெற்றி பெறும்போது உங்கள் உளநிலை எப்படி இருக்கும்?
கடுமையான பயிற்சி இலகுவான வெற்றி என அப்பா அடிக்கடி எனக்குக் கூறுவார். கடுமையான பயிற்சிக்குக் கிடைத்த வெற்றி என நினைத்துக்கொள்வேன். இன்னும் கடுமையாகப் பயிற்சி எடுத்து மேலும் சாதிக்க வேண்டும் என நினைப்பேன்.

6.உங்கள் தந்தை கூறியது போல நீங்கள் கடுமையான பயிற்சி எடுக்க உதவியாக இருப்பது யார்?
திருச்சியிலுள்ள அண்ணா விளையாட்டு நீச்சல் தடாகத்தில் மூன்று ஆண்டுகளாக ராஜா கோச்சிடம் பயிற்சி பெற்று வருகின்றேன். அவர் என் பயிற்சிக்கு உதவியாக உள்ளார்.

தொடர்ச்சி 29பக்கம்



K.K.L Textilien Schmuck Haushaltsware
சித்திரை தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும்
மலிவு விற்பனை!
04. 04 .2020
Only One Day Sale
சாறிகள் அனைத்தும்
50% விலைக்கழிவிலும்
மற்றும் அனைத்து ஆடைகளும்
25% முதல் 50% வரை

Rheinische str.56 44137 Dortmund Tel: 0231 96 98 6610
https://m.Facebook.com
kkl.textillenschmuck

# கனடிய சனத்தொகை மூப்படைகிறது

## Canada's Population Rapidly Aging

**2031ஆம் ஆண்டில் கனடாவின் சனத்தொகையில் மூத்தோர்கள் 12 மில்லியனாகவும், சிறார்கள் 8 மில்லியனாகவும் இருப்பர் என அதிகாரபூர்வ மதிப்பீடு தெரிவிக்கிறது.**



றஞ்சி திரு

Canada's population is rapidly aging. The first baby boomers reached their senior years in the past five years, and everyday, more baby boomers reach this age. The aging of this massive generation of Canadians is having a major impact on their senior population in Canada.



கனடிய மூத்தோர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் கனடிய சனத்தொகை மூப்படைகிறது என்கிறது கனடிய புள்ளிவிபரத் திணைக்களம். உலகப்போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து வந்த காலம் (Baby boomers) வழக்கமானதைவிட கூடுதலாகப் பிள்ளைகள் பிறக்கும் காலமாக இருந்ததால், கடந்த ஐந்து வருடங்களானது இவர்களை மூத்த பிரஜைகளாக்கியுள்ளதே இதற்கான காரணமென்று கூறப்படுகிறது.

கனடாவின் மூத்த பிரஜைகளாக இருப்பவர்கள் தொகை கடந்த பத்தாண்டுகளில் தொடர்ந்து வேகம் கொண்டு வருகிறது. இதனைப் பின்வரும் கூறுகளால் அவதானிக்க முடியும்:

ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை கனடாவின் சனத்தொகை வீடு வீடாக படிவங்கள் விநியோகிக்கப்பட்டு அதனூடாகச் சேகரிக்கப்பட்டு மதிப்பிடப்படுகிறது. இறுதியாக நடைபெற்ற கணக்கெடுப்பின் பிரகாரம் கனடாவாழ் மூத்தோரின் எண்ணிக்கை 5.9 மில்லியன் என தெரிய வந்தது. அதற்கு முன்னைய ஐந்தாண்டுகளுக்கு முன்னர் இந்த எண்ணிக்கை 4.9 மில்லியனாகவிருந்தது. இதன்படி பார்க்கையில், ஐந்தாண்டு இடைவெளியில் ஒரு மில்லியன் எண்ணிக்கையில் மூத்தோர் தொகை அதிகரித்துள்ளது. அடுத்து வரும் வருடங்களில் இத்தொகை மேலும் அதிகரிக்கும் சாத்தியம் உண்டு.

முதன்முறையாக, இங்கு வாழும் சிறார் தொகையைவிட மூத்தோரின் தொகை அதிகரித்துள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது 5.8 மில்லியன் சிறார்கள் இங்கு வாழ்கின்றனர். விகிதாசாரத்தில் இதனைப் பார்க்கின், சிறார்கள் தொகை கனடாவின் சனத்தொகையில் 16.6 வீதமாகவும், மூத்தோர் தொகை 16.9 வீதமாகவும் உள்ளது.

உலக மகாயுத்தத்தின் பின்னர் - 1946 முதல் 1965 வரையான காலப்பகுதியில் பிறந்த கணிசமானோர் இன்னமும் மூத்தோர்களாகவில்லை. இவர்களுள் அநேகர் ஓய்வு பெறும் வயதடைய இன்னமும் சில வருடங்கள் உள்ளன. 1965களில் பிறந்தவர்கள் 2030ஆம் ஆண்டளவிலேயே மூத்தோர்கள் ஆவர்.

இதனால் 2031ஆம் ஆண்டில் கனடாவின் சனத்தொகையில் மூத்தோரின் எண்ணிக்கை 23 வீதமாக அதிகரிக்குமென்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. அப்போது மூத்தோர்கள் 12 மில்லியனாகவும், சிறார்கள் 8 மில்லியனாகவும் இருப்பர் என அதிகாரபூர்வ மதிப்பீடு தெரிவிக்கிறது.

மூத்தோர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அவர்களுக்கான வைத்திய வசதி, பராமரிப்பு, அத்தியாவசிய தேவை என்பவை முதன்மை பெறுகின்றன. இப்பணிகளுக்கென சேவை வழங்குபவர்கள் கூடுதலாகத் தேவைப்படுவர். இப்போது ஐந்தில் ஒரு மூத்தவருக்கு தினசரி வாழ்வுக்கு உதவி தேவைப்படுகிறது.

உணவு ஊட்டுதல், நீராட்டுதல் (குளியல்), உடை மாற்றுதல் போன்றவை இவற்றுள் முக்கியமானவை. உதவும் உபகரணங்களை பயன்படுத்தினாலும்கூட பெரும்பாலான மூத்தோர் மிகுந்த சிரமத்துடனேயே தங்கள் வாழ்வைக் கழிக்கின்றனர்.

65 வயதுக்கும் 69 வயதுக்கும் இடைப்பட்டவர்களான 45 வீதமான முதியவர்களுக்கு உதவி எதுவும் தேவைப்படுவதில்லை. 90 வயதுக்கு மேற்பட்டவர்களில் 4 வீதமானவர்கள் மட்டுமே எந்த உதவியும் பெறாது சுயமாக வாழக்கூடியவர்களாக உள்ளனர்.

மூத்தோர்களைப் பராமரிப்பதற்கென பல சேவைகள் கனடாவில் உண்டு. மாகாண அரசாங்கங்கள் நகர அரசாங்கங்கள் என்பன நேரடியாக பல சேவைகளை வழங்குகின்றன. ஓய்வுகால குடிமனைகளும், நீண்டகால பராமரிப்பு வீடுகளும் இவற்றுள் அடங்கும். இந்த வசதிகளைப் பெற வருடக்கணக்கில் மூத்தோர் காத்திருக்க வேண்டியுள்ளது. அடுத்த பத்து வருடங்களில் மூத்தோர்களுக்கென கனடா முழுவதும் ஒரு லட்சத்து மூவாயிரம் வீடுகள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2046ஆம் ஆண்டளவில் அதற்கும் மேலாக 240,000 வீடுகள் தேவைப்படலாமென ஓர் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஞாபக மறதி (Dimentia) நோயுள்ளவர்களுக்கு பராமரிப்பு இல்லங்கள் அவசியமானது. வழுக்கி விழுபவர்கள், கால் தடக்கி விழுபவர்கள், நீண்டகால பராமரிப்புக்கு உட்படுத்தப்படுவதை இது தொடர்பான விழிப்புணர்வு வெளியீடுகள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன.

தங்கள் குடும்பத்தினருடன் வாழுவதற்குரிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வசதி உள்ளவர்களுக்கு இதற்குத் தேவையான மருத்துவ வசதியும் மற்றும் அத்தியாவசிய வசதிகளும் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. இவ்வாறான வசதியற்றவர்கள் மட்டுமே நீண்டகால பராமரிப்பு வீடுகளில் அனுமதிக்கப் படுகின்றனர். கனடாவில் மூத்தோர்கள் எங்கு வாழ்ந்தாலும் பாரபட்சமற்ற வகையில் அரசாங்கம் வழங்கும் எல்லா வசதிகளும் அவர்களுக்கு கிடைக்க வேண்டுமென்பது சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.



**19வது ஆண்டு நினைவாஞ்சலி!**

**கஜனி தேவராஜா**

மலர்வு 12.05.1988 பிரிவு:16.03.2001

நிலையில்லா வாழ்வென்று நீ உணர்த்திப் போனாலும்
நிலையாக எம் நெஞ்சில் வாழ்கின்றாய் எப்போதும்!
கலைமகளே எங்கள் கண்மணியே கஜனியம்மா
காலத்தை வென்று எங்கள் நினைவுகளில்
நீ இருப்பாய்
உன் அன்பின் நினைவுகளோடு
அப்பா அம்மா அக்கா அத்தான்


தேவராஜா U.K





Frankfurt நகரில்....
Jaffna Bazar
Jaffna Bazar
தங்க நகைகள்
தரமானவை மட்டும்
என்றும் எம்மிடம்
கிடைக்கும்
சர்வதேச மகளிர் தின
வாழ்த்துகள்
2020 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுகள்!
KADHIR
Laila
Basmati
Rice
Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com
0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான
மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்

# Fabulous Hobbies for Fantastic Women



Women have been playing the role greater than men in all walks and life. From the poor to the rich, majority of the women are occupied as professionals. We hear and find how at the beginning of the history women loved education and how they excelled in all the fields in education. Even though in some period when women were not allowed to attend to schools in ancient times they knew how to cook, look after the families, save food for their families. During their lifetime, they stitched clothes, helped the men and children to learn, earn, and to lead a happy life. They looked after farm animals and earned money through their products.

Hard work, energy and moral strength are the foundation for a good, strong educated, wealthy and virtuous families. All over the world we find several popular women including the queens whose regime and their heroic achievements are preserved and recorded. In India Jansi Rani fought and got rid of the name that women are weaker sex. There is no one to compete women such M.S. Subuluxshmi in rendering Carnatic music. There are many women who are employed in offices, departments and companies. There is no comparison for Kalpana Chawla who was an active, intelligent and experienced astronaut. This indicates how women play the equal role as men. Above all women bear the babies for nine months and give birth. Women are such a special creation of God, that they have immense strength, will power, tolerance, patience, caring and daring to face any challenges.

In a small scale or large-scale women empowerment is found from the ancient times. There were artists, painters, musicians, musical instrument players who attained their highest achievements in their professions. Women participated in indoor and outdoor sports. They were good weavers, tailors, doctors, nurses and scientist.

In this digital age parents and teachers lament about the behaviour of the children. They find most of the children being indifferent at home. The parents feel that it is hard to raise their children. The children do not seem to listen to what their parents say to them. They do not respond to the requests and errands of their parents. When they start their schooling, their behaviour changes a bit. As they must study and do homework they listen and respond to their teachers and parents. Today the children are not prepared to obey the parents at home. They do not help their parents at home. They neither look after themselves nor the others.

What is the cause? Children are now involved very much in playing computer games. When they grow, they spend most of their time in computer games, films, television serials and social medias which give entertainment that make them very occupied. When a woman/mother has hobbies such as blogging/writing, cooking, gardening, yoga, photography, travelling, volunteering, origami and involve her child in her hobbies, the child's mental and physical health will grow. It will help the woman to improve her skills and express her feeling to the community. Her child too can become the multi-talented person and a best person in our community.

**Blogging/writing**



Bavvatharani
Ravindran
Nallur

**Jotting down ideas, or 'free writing' in a journal, will hone the women's skills and raise their voice. It will give the ability to be brave enough to share their words with the world.**

**Cooking**
Women may feel cooking is a stressful thing. If they start to enjoy cooking that will make them feel awesome. There's much to be said for the joys of cooking everything from a simple meal-for-one to a luxurious feast for family and friends. The tactile nature of cooking keeps their body and mind healthy, which is a great way to reduce stress.

**Gardening**
Perhaps one of our favourite hobbies for women is gardening, it brings out huge list of both physical and mental benefits. Planting seeds, pulling weeds and tending to a portion offer the perfect antidote to a day spent glued to a screen indoors, and can even ease depression. Also, they can provide healthy organic vegetables to their family and friends.

**Yoga**
The origins of yoga have been speculated to date back to pre-Vedic Indian traditions. The Rigveda mentions about yoga. Yoga is designed to help achieve a more positive outlook on life and a focused, permanent sense of serenity and peace. It is the ultimate stress reliever.

**Photography**
When it is comes to photography, in the arrival of smartphones and tablets, children to elderly people, everyone has the potential to be a great photographer. Whether you're amassing an enviable Instagram-ready photo album or looking to get published in a magazine, photography offers the opportunity to capture memories, you can spend much of your time focusing and noticing your surroundings.

**Travelling**
Through travelling, one can experience new things that they could never experience at home. They may have the opportunity to see beautiful places and landscapes that do not exist where you live. They may meet many people you can know about their culture through that will change their life, and their way of thinking. Travel can be done by foot, bicycle, automobile, train, boat, bus, airplane, ship or other vehicles.

**Volunteering**
Volunteering is essential to the way of life and have a positive impact on the way our communities grow and succeed. It can also help a person to make new friends, learn new skills, advance their career, and even stay healthy.

**Origami**
Origami is the art of paper-folding. It allows a person to create both two-dimensional and three-dimensional subjects. it develops not only eye hand co-ordination, sequencing skills, maths reasoning, spatial skills, memory but also patience and attention skills.






மங்கல இசை
நாதஸ்வர மதுரகானமணி
N.K.பாலமுரளி.குமரகுரு



யேர்மன் அரசாங்க அங்கிகாரம் பெற்றவரும்
ஐரோப்பிய இசை இரசிகர்களின்
அமோக வரவேற்பை பெற்றவருமான மாபெரும்
நாதஸ்வரவித்துவான் வரிசையில் உள்ள
நாதஸ்வர மதுரகானமணி
N.K.பாலமுரளி. குமரகுரு
அவர்களும் அவர் புதல்வன்
B.கஜேந்திரன் (க.கி ) Kaki அவர்களும்
இணைந்து தரும் மங்கல இசை
விருந்திற்கு நாடுங்கள்
0049 208 43 74 709
கைத்தொலைபேசி:
0049 163 22 77 303

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய
வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
MPU
ASF
FES
இவர்களுக்கான
சிறப்பு
வகுப்புக்களும்
உண்டு!
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5- 44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

# இளந்தலைமுறையினர் இணைந்து நடத்திய
# கனடா தமிழர் தகவல் 29வது ஆண்டு விருது விழா



கனடாவிலிருந்து 29 ஆண்டுகளைக் கடந்து வெளிவரும் கனடிய மூத்த தமிழ் இதழான தமிழர் தகவலின் 29வது ஆண்டு விருது விழா இந்த மாதம் (பெப்ரவரி) 9ம் திகதி ரொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபாபீடத்தில் நடைபெற்றது. அரச அவை போன்று காட்சியளித்த இம்மண்டபம் பார்வையாளர்களால் நிரம்பியிருந்தது.

முன்னாள் நகரசபை உறுப்பினரும், கல்விச்சபை உறுப்பினருமான திரு. நீதன் சண்முகராஜா தலைமையில் இவ்விழா நடைபெற்றது. கனடாவில் ஒவ்வொரு ஜனவரி மாதத்தையும் தமிழர் மரபுரிமை மாதமாக பிரகடனம் செய்யும் மசோதாவை 2014ம் ஆண்டு ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் முன்மொழிந்து அதனைச் சட்டமாக்கிய தற்போதைய சமூகசேவைகள் அமைச்சர் திரு. ரொட் சிமித் இவ்விழாவில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி தமிழர்களின் விசேட சிறப்புகளையும், அவர்கள் தங்கள் விழுமியங்களை பாதுகாப்பதில் காட்டும் அக்கறையையும் எடுத்துரைத்தார். இவருக்கு இவ்விழாவில் ஷசரித்திரம் படைத்தவர்ஷவிருது (History Maker Award) வழங்கி கௌரவம் செய்யப்பட்டது.

தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் இங்கு உரையாற்றும்போது, புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலுள்ள புலமையாளர்களையும் சான்றோர்களையும் ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட தமிழர் தகவல் விருது அதன் இலக்கை அடைந்து வருவதாகவும் குறிப்பிட்டதோடு, இவ்வருட விழாவை இளைய தலைமுறையினர் பொறுப்பேற்று நடத்துவது பெருமைக்குரியது என்றும் தெரிவித்தார்.

இவ்விழாவில் பல்துறை சார்ந்த எண்மர் அவரவர் பணிக்காக விருதுடன் தங்கப்பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்பட்டனர்.

கனடா தமிழீழச் சங்கம், கனடா உலகத்தமிழர் இயக்கம் ஆகியவற்றின் தலைவராகவிருந்து, நெருக்கடியான காலங்களில் மண்ணையும் மக்களையும் மறவாது பணியாற்றிய ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம் (86 வயது) வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

தொடர்ச்சி 19 ம் பக்கம்



18 ம் பக்கத் தொடர்ச்சி

# இளந்தலைமுறையினர் இணைந்து நடத்திய கனடா தமிழர் தகவல் 29வது ஆண்டு விருது விழா











இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் ஒலிபரப்புத் துறையில் நான்கு தசாப்தங்களாக அறாத்தொடராக சேவையாற்றிவரும் மூத்த ஒலிபரப்பாளர் எஸ்.கே.ராஜன் ஊடக ஆளுமையாளர் சிறப்பு விருது வழங்கி மதிப்புச் செய்யப்பட்டார். அமைச்சரின் பாராட்டுப் பத்திரம், தமிழர் தகவலின் சான்றிதழ் உட்பட ஐந்து வகையில் விருது சிறப்புச் செய்யப்பட்டது.

2019ம் ஆண்டு கனடிய பல்கலைக்கழக புகுமுக பரீட்சையில் 99 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் வந்த நான்கு மாணவர்களில் ஒரேயொரு தமிழரான செல்வி சரண்யா ஜெயகாந்தன் இளையோர் சாதனை விருதினைப் பெற்றார்.

கனடிய தேசிய நீரோட்ட தொழிற்துறை முன்னோடி விருதை பிரபல கட்டிடக்கலை நிறுவன அதிபர் திரு. தேவதாஸ் சண்முகலிங்கமும், இசைத்துறைக்கான விருதை வாய்ப்பாட்டு மற்றும் வீணை வாத்திய இசைக்கலைஞர் திருமதி சாருமதி மனோகாந்தனும், தமிழர் பண்பாட்டுக் கலைத்துறை பணிக்கான விருதை திருமதி சசிகலா நரேந்திரனும், கனடிய வணிகத்துறையில் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த சாதனை விருதை திரு. வடிவேலு பூலோக இந்திரனும் பெற்றனர். விருது பெற்றவர்களை கனடிய தமிழ் இளையோர் அறிமுகம் செய்து வைத்தனர்.

தமிழர் தகவலின் 29வது ஆண்டு மலர் இளமதிச் சுவடு என்ற மகுடத்தில் 172 பக்கங்களில் வெளியிடப்பட்டது. மலர் வெளியீட்டு நிகழ்வுக்கு கனடிய பாடசாலை ஆசிரியர் அஜந்தி மதனாகரன் தலைமை தாங்கினார்.

ஒலிபரப்பாளர் பி.எஸ்.சுதாகரன் விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றியதைத் தொடர்ந்து அமைதி வணக்கமும் செல்வி ஹர்சிதா சிவகரனின் தமிழ் வாழ்த்தும், சிவசிறி பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்களின் ஆசியுரையும் இடம்பெற்றன.

ஊடகவியலாளரும் எழுத்தாளருமான திரு. ராஜ்மோகன் செல்லையா மலர் வெளியீட்டுரை நிகழ்த்தினார். ரொறன்ரோ மாவட்ட கல்விச்சபை உறுப்பினர் யாழினி ராஜகுலசிங்கம் வாழ்த்துரை வழங்கினார். ஒலிபரப்பாளர் எஸ்.கே.ராஜனின் சிறப்புரையை அடுத்து மலரின் முதற்பிரதியை இளம் எழுத்தாளர் கெவின் தெய்வேந்திரனுக்கு பிரபல இசைக்கலைஞர் திரு. கோணேஷ் வழங்கினார். விருது தெரிவுக்குழுவின் தலைவர் பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் தலைமையில் டினோஜா மரியாம்பிள்ளை, ஐஸ்வரியா சந்துருஷ் பிரதிஷ்னி மதீஸ்வரன், அகஷ்ன் ரவிசங்கர், மெஷாலன் விலோசன் ஆகிய இளையோர் விருதாளர்களை அறிமுகம் செய்து உரையாற்றினர். விருது பெற்றவர்கள் சார்பில் திரு. சிற்றம்பலம் ஏற்புரை நிகழ்த்தினார். அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டது போன்று சரியாக மூன்று மணிக்கு ஆரம்பமான விழா ஐந்து மணிக்கு நிறைவுபெற்றது.


Easy Holiday

Travels & Tours



உலகின் எப்பாகங்களுக்கும் சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் நிறைந்த மனதுடன் தருகின்றோம்

தொடர்புகளுக்கு: Thureiraj Rukshan

Mob:0152 1365 4331 - 0152 04153138

2020
Juni - August
கோடைகால
மலிவு விற்பனை

தாய்நாடு Sri Lanka சென்று உங்கள் விடுமுறையை சந்தோசமாக கழிக்க நாம் வழங்கும் ஓர் இனிய வாய்ப்பு!!! இதோ விமான பயணச்சீட்டுக்கள்

Only ab 499 Euro!!!

Emirates · ETIHAD · Gulf Air · OMAN AIR · QATAR

எம் மக்களின் அபிமானம் வென்ற

Easy Holiday
Travels & Tours

தாய்நாடு சென்றுவர மலிவு விலையில்

- விமானச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதிகள்
- வாகன வசதிகள்
- வீசா உதவிகள் (இந்தியா இலங்கை)
- ஹோட்டல் வசதிகள்



Westring 36
44623 Herne
Germany

Tel:02323 965 4426 Fax:02323 9654427
e.mail: ezholiday16@gmail.com

# பெண்ணியம் என்பது
## பேசு பொருளல்ல!




சேவியர்



### அது வாழ்வின் பொருள்.

உலகைப் படைத்து முடித்த கடவுள் பார்த்தார். இனி ஒரு மனுஷனைப் படைச்சுட்டா வேலை முடிஞ்சது. கடவுள் ஒரு கலைஞர். மனிதனே நீ உருவாகு என சொல்லவில்லை. அவர் ஒரு சிற்பி. மண்ணை எடுத்து ஒரு மனிதனை உருவாக்கினார். தன்னையே மாடலாகவும் வைத்துக் கொண்டார். அவனுக்கு உயிர் மூச்சை ஊத அவன் உயிர்பெற்று எழுந்தான். அப்பாடா, என ஓய்வாய் அமர்ந்த கடவுளுக்கு ஒரு குழப்பம். "ஏதோ ஒண்ணு இடிக்குதே.. அது என்ன ? " என்று பார்த்தார்.

சட்டென அவருக்குப் புரிந்து விட்டது. பறவைகளெல்லாம் ஜோடி ஜோடியாய்ப் பறந்து திரிகின்றன. விலங்குகளெல்லாம் இணை இணையாய் நடந்து திரிகின்றன. ஆனால் இந்த மனிதன் மட்டும் மொரட்டு சிங்கிளாவே இருக்கானே ! இவனுக்கு ஒரு ஜோடியை உருவாக்குவோம் என நினைத்தார். ஆணுக்கு இணையாய் பெண் உருவானாள். இப்போது கடவுள் பெண்ணை மண்ணிலிருந்து படைக்கவில்லை, மனிதனின் விலா எலும்பை உருவி எடுத்து அதிலிருந்து படைக்கிறார். இருவரும் இணையாய், ஒருவருக்கொருவர் துணையாய் மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள்.

படைப்பைப் பற்றி கிறிஸ்தவம் சொல்லும் கதை இது. இதிலுள்ள விஷயங்களில் நம்மை வசீகரிக்கும் அம்சங்கள் சில உண்டு. அவை பெண்ணியத்தின் பெருமையையும், பெண்களை நாம் வைக்க வேண்டிய இடத்தையும் நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது.

கடவுள் பெண்ணைப் படைக்க நினைத்த போது, அவள் ஆணின் பாகமாய் இருக்க வேண்டும் என நினைத்தார். பெண் என்றவள் ஆணோடு இணைந்தவள், ஆணிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவள் எனும் பாடம் நமக்குப் புரிகிறது. அதன் பின் உயிர்கள் பெண்களின் உடலிலில் இருந்தே உலகுக்கு வருகின்றன. முதல் உயிர் மண்ணிலிருந்து வந்தது. இரண்டாவது உயிர் ஆணிலிருந்து வந்தது. அதன் பின் உயிர்கள் பெண்ணின் உடலிலிருந்து வருகின்றன. இந்த படைப்பின் பாணி, பெண்ணும் ஆணும் இணைந்தே இருக்க வேண்டியவர்கள் எனும் பாலபாடத்தை நமக்குச் சொல்லித் தந்து கொண்டே இருக்கிறது.

இன்னொரு விஷயம், கடவுள் பெண்ணை படைத்த போது அவளை ஆணின் காலிலிருந்து படைத்து அவளை அடிமையாக்கவில்லை, தலையிலிருந்து படைத்து அவளை கர்வக் கிரீடத்தில் அமர வைக்கவில்லை. மாறாக விலாவிலிருந்து படைத்து அவளை இணையாக்குகிறார், ஆணின் துணையாக்குகிறார். பெண்ணியத்தின் முதல் பாடம் படைப்பிலிருந்து துவங்குகிறது.

ஆனால் இன்றைக்கு அந்த பெண்மைக்குரிய மரியாதை சரியான அளவில் கொடுக்கப்படுகிறதா என்று கேட்டால், "கண்டிப்பா" என சட்டென சொல்ல முடியவில்லை. பேச்சளவிலோ, வெளிப்பார்வைக்கோ பெண்மையின் பெருமைகளைப் பட்டியலிடலாமே ஒழிய, வாழ்வில் அது எந்த அளவுக்கு பின்னிப் பிணைந்திருக்கிறது என்பது மிகப்பெரிய கேள்விக்குறி தான்.

பெண்ணியம் என்ற உடனே அது சில பெண்கள் பகட்டு ஆடை உடுத்தி, எங்கோ இடுகின்ற கோஷமல்ல. அப்படிப்பட்ட போராட்டங்களும், அறைகூவல்களும் பெண்மைக்குரிய மரியாதையை பெற்றுத் தர முடியாது என்பது தான் உண்மை. வல்லூறுகளின் கண்களுக்கு மண்புழுக்கள் தென்படுவதில்லை. அதைப் பார்க்க வேண்டுமெனில் தரையோடு தரையாகத் தவழ வேண்டும். அதே போல தான் பெண்களுக்கு மறுக்கப்படுபவை என்ன என்பதைப் பார்க்க நாமும் அவர்களுடைய தேசத்தில் தான் பயணிக்க வேண்டும்.

நமது வீடுகளிலிருந்து அந்தப் பயணம் துவங்கலாம். எத்தனை வீடுகளில் பெண்பிள்ளைகளும், ஆண் பிள்ளைகளும் சமமாக நடத்தப்படுகின்றனர் ? இன்னும் கிராமங்கள் பெண்களை செலவினமாகவும், ஆண்களை வரவினமாகவும் பார்க்கின்றனர். பெண்களின் உணர்வுகளை விட, அவர்களால் நேரிடப்போகும் பொருளாதாரச் செலவுகளே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆண்பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்துகளும், பெண் பிள்ளைகளுக்கு பழைய கஞ்சியும் கொடுத்து வளர்த்தும் கிராமங்கள் இன்னும் உயிர்ப்புடன் இருக்கின்றன.

"நாளைக்கு நமக்கு சோறு போடப் போறவன்" என்றோ, "நாளைக்கு கொள்ளி வைக்கப் போறவன்" என்றோ அடையாளப்படுத்தப்பட்டு சிறப்புக் கவனம் ஆண் குழந்தைகளுக்கு வழங்கப்படும் போது, பெண்ணியத்தின் மீதான முதல் ஆணி அறையப்படுகிறது. ஆண் உயர்ந்தவன் பெண் தாழ்ந்தவள் எனும் எண்ணம் குழந்தைகளின் மனதில் சொல்லாமலேயே குடியேறிவிடுகிறது. இது ஆண்களின் மனதில் கர்வமாகவும், பெண்களின் மனதில் தாழ்வு மனப்பான்மையாகவும் உறைந்து விடுகிறது.

குடும்பத்தில் நிகழ்கின்ற இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் அப்படியே சமூகத்திலும் பரவிவிடும். சமூகம் என்பது குடும்பங்களின் பிரதிநிதிகள் தானே. குடும்பம் எனும் வேர்களில் விழுகின்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் தான் சமூகம் எனும் வீதிகள் கனிகளைப் பெற்றுக் கொள்கின்றன. அந்த பெண்ணியத்தின் புனிதத் துவக்கத்தை குடும்பங்கள் அகல் விளக்கு ஏற்றி ஆரம்பித்து வைக்க வேண்டும்.

அப்படியே பெண்களுக்கான கல்வி வழங்குதலில் பாரபட்சமற்ற நிலையை நாம் பின்பற்றுகிறோமா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரே மாதிரியான இலட்சியங்கள் கொண்ட ஆண்பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் இருந்தால், இருவருக்கும் அதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கிறோமா என்பதை நாம் மனப்பூர்வமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி நாம் பாரபட்சம் காட்டுகின்ற தருணங்கள் எல்லாம் பெண்மையின் மாண்பினை இழிவு செய்கின்றன என்பதே பொருள். சிறுவயதில் அவர்கள் பெறுகின்ற ஊக்கமும், அரவணைப்பும், வாய்ப்புகளும் தான் அவர்களை எதிர்கால வீதிகளில் வீறு நடை போட உதவும் என்பதை மறந்து விடக் கூடாது.

வீடுகளில் பெண் குழந்தைகளுக்குச் சரியான ஊட்டச்சத்து கிடைக்காத போது அவர்களுடைய ஆரோக்கியம் பாதிப்படைகிறது, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய அங்கீகாரம் கிடைக்காத போது அவர்களின் தன்னம்பிக்கை உடைபடுகிறது, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சரியான அன்பு கிடைக்காதபோது அவர்களுடைய வாழ்க்கையே தள்ளாடுகிறது. பெண்ணியம் என்பது கோஷங்களில் கிடைப்பதல்ல அது நமது வீடுகளில் வினியோகிக்கப்படுவது. பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களில் 80 சதவீதம், குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் மூலமாக நடப்பதாக வெளியாகியிருக்கும் ஆய்வு நம்மை விழிப்படையச் செய்ய வேண்டும்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்




20ம் பக்க தொடர்ச்சி

# பெண்ணியம் பேசு பொருளல்ல ....



நம்மைச் சுற்றிய இடங்களில் நாம் பெண்களுக்கு எப்படிப்பட்ட மரியாதையை வழங்குகிறோம் என்பதே மிகவும் முக்கியம். குறிப்பாக அலுவலகங்களில் பெண்களுக்கு உரிய மரியாதை கிடைப்பதில்லை என்பதே கசப்பான உண்மை. தாய்மை நிலையிலிருக்கும் பெண்களை வேலைக்குச் சேர்க்காமல் தனியார் நிறுவனங்கள் உதறிவிடுகின்றன. அவர்களுடைய வேலை பாதிக்கப்படும் என்பது அவர்களுடைய கவலை. அதே போல, திருமணத்தை எதிர்நோக்கியிருக்கும் பெண்களையும் அவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளத் தயங்குகிறார்கள். பிரசவ காலத்தில் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் போன்றவையெல்லாம் பெரும்பாலும் மறுக்கப்படுகின்றன.

இவற்றையெல்லாம் நிறுவனங்கள் வெளிப்படையாகச் செய்வதில்லை. மறைமுகமாக வேறு ஏதோ ஒரு காரண முகமூடி அணிந்து கொண்டு நாசூக்காக செய்து முடிக்கின்றன. இத்தகைய ஏற்றத்தாழ்வுகளையும், பாலியல் ரீதியிலான அவர்களுடைய பிரச்சினைகளையும் கவனிக்கவும், சரி செய்யவும், பாதுகாப்பு வழங்கவும் ”பாஷ் ( POSH - Prevention of Sexual Harassment ) " எனும் அமைப்பு இப்போது நிறுவனங்களோடு இணைந்திருக்கின்றன.

பழைய காலத்தோடு ஒப்பிடுகையில் பெண்ணிய சிந்தனைகள் இன்றைக்கு வலுவாகவே இருக்கின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகமாக வெளி உலகிற்குத் தெரிய வருகின்றன. இன்றைய சமூக ஊடகங்களும், வாட்சப் போன்ற தகவல் பரிமாற்ற செயலிகளும் இத்தகைய அத்து மீறல்களை உலகெங்கும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

ஆண்களைப் போல பெண்களை நடத்துவதல்ல பெண்ணியத்தின் அடிப்படை. பெண்களைப் போல பெண்களை நடத்த வேண்டும்.
அவர்களை அவர்களுடைய மாண்புடன் நடத்தாமல் இருக்கும் போது தான் சிக்கல்கள் முளைக்கின்றன. ஆணும் பெண்ணும் சமமல்ல, அவர்கள் இருவருக்கும் உடல், உணர்வு, செயல்பாடு ரீதியாக ஏகப்பட்ட வித்தியாசங்கள் உண்டு. அந்தந்த குணாதிசயங்களுக்கு ஏற்ப அந்தந்த பாலினத்தவரை ஏற்றுக் கொள்வதும், மரியாதை செலுத்துவதும், அன்பு செலுத்துவதுமே தேவையானது.

மானுக்கும் புலிக்கும் ஒரே மாதிரி மரியாதை கொடுக்க வேண்டுமென யாரும் சொல்லப் போவதில்லை. ஆனால் மானை மானாக நடத்தாமல் நாயாக நடத்தும் போது தான் சமநிலை பாதிப்படையும். பண்டைய தமிழின வரலாற்றில் கூட, ஆண்கள் போர்க்களம் கண்டு வீர மரணம் அடைந்தார்கள். பெண்கள் இதயத்தில் அந்த போர்க்குணத்தைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் களம் புகவில்லை, ஆனால் தன் மகன் விழுப்புண் கண்டு வீர மரணம் அடைந்தானே என வீரக் குரலோடு பெருமிதம் அடைந்தார்கள்.

பெண்களின் மனதைப் புரிந்து கொள்வது மிகக் கடினம் என்பார்கள். ஆனால் உண்மையில் அது மிக எளிது. பெண்களின் பக்கத்தில் நின்று பார்த்தால் அதை எளிதில் புரிந்து கொள்ளலாம். மதில் சுவரின் மறுபக்கத்தில் நின்று கொண்டு எதிர்பக்கம் என்ன இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வது கடினம். பெண்களைப் புரிந்து கொள்ளவேண்டுமெனில் அவர்களைப் போல மாறி சிந்திக்க வேண்டும். ஆண்கள் எப்போதுமே அப்படிச் செய்வதில்லை. தெருவில் விளையாடும் கோலி விளையாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் தெருவில் தான் தவழ வேண்டும். பல்லக்கில் இருந்து கொண்டு பள்ளத்தாக்கில் இருப்பதைப் புரிந்து கொள்ள முடியாது. அதே போலத் தான் பெண்களின் உலகில் நுழையாமல் பெண்மையைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

பெண்மையை மதிப்பது என்பது, அவர்களை மரியாதையாய் நடத்துவது மட்டுமல்ல. அவர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் உடனே சென்று உதவி செய்வதும் மரியாதை செலுத்துவதன் அடையாளமே. நமது குழந்தைக்கு அடிபட்டால் நாம் செல்.ஃபி எடுத்துக் கொண்டு சென்று விடுவதில்லை. நமது பெண் பிள்ளைக்கு ஒரு பிரச்சினை என்றால் ஓரமாய் உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பதில்லை. அந்த மனநிலையை நம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்வொரு பெண் பிள்ளைகளிடமும் காட்ட வேண்டும். அதுவே ஆண்மையின் அடையாளமாகும். கொடுமை கண்டு பொங்குவதே ஆண்மை, கொடுமை செய்யப் பொங்குவதல்ல.

நான் சொன்னதுல என்ன தப்பு இருக்கு ? என பல ஆண்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அவர்களுக்கு ஒரு சின்ன டெஸ்ட். நீங்கள் சொல்கின்ற, சேட் செய்கின்ற, கிண்டல் செய்கின்ற ஒரு விஷயம் சரியா தவறா என கண்டுபிடிக்க ஒரு சின்ன வழி உண்டு. நம் மீது உயிராய் இருக்கும் தாயின் முன்னாலோ, சகோதரிகளின் முன்னாலோ வைத்து அவற்றைப் பேச முடியுமா என யோசியுங்கள். அப்படிப் பேச முடியாத எதுவுமே தவறானது எனக் கொள்க.

பெண்களின் மனதை வெல்ல வேண்டுமெனில் ஆண்களிடம் ஒரு சின்ன குணாதிசயம் இருந்தாலே போதுமானது. செவிமடுத்தல். பெண்களுக்கு தங்கள் உணர்வுகள் கேட்கப்பட வேண்டும், தங்களது பகிர்ந்தல்கள் கேட்கப்படவேண்டும் எனும் சிந்தனை ஆழமாக உண்டு. அதனால் தான் அமைதியாகச் செவி மடுக்கும் ஆண்களை பெண்கள் எளிதில் நண்பர்களாக்கிக் கொள்கிறார்கள்.

பெண்ணியம் என்பது பேசுபொருளல்ல. பெண்கள் வேற்றுக்கிரக வாசிகளும் அல்ல. அவர்கள் நமது மகிழ்வின் ஆளுமை. அவர்கள் நம் பயணத்தின் தோழமை. அவர்களை மதிப்பதும், நேசிப்பதும் நமது தேர்வல்ல, கடமை. பெண்ணியம் என்பது வாழ்வோடு இணைய வேண்டும். கண்ணியம் என்பது நமது உயிரோடு உலவ வேண்டும். பெண்மை தாயாய், தாரமாய், சகோதரியாய், மகளாய் உலவும் நமது இல்லங்களில் பெண்ணியம் பூக்கவில்லையேல், அது சமூகத்தில் கனிகொடுக்காது.

பழமையை மாற்றுவோம்
பெண்மையைப் போற்றுவோம்







அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்


Wuppretal நகரில்
அன்னையை வணங்குவோம்! பெண்மையைப் போற்றுவோம்!!
மகளிர் தினம் பங்குனி 08
INTERNATIONAL WOMEN'S DAY
புதுமைப் பெண்கள் 2020
வெற்றிமணி அன்னை
நவநிதி.சுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியை)
நூற்றாண்டு அரங்கம்
08.03.2020 Sunday
மணி:14.59
Women's day
MARCH 8TH
StaR-Impex
TKS BEST FOODS
NANDY'S Curry & more
AKR VISUALIZERS Photography & Cinematography
Nimal HD Video and Photo
தமிழர் அரங்கம்
KIRI VIDEO
ஆட்டம் பாட்டம்
கொண்டாட்டம்
முன்னனியும்
பின்னனியும்
பிரதம விருந்தினர்
Dr.K. சுபாஷினி
( தமிழ்மரபு அறக்கட்டளை நிறுவனர் )
சொல்லுங்கள்!
வெல்லுங்கள்!!
நிகழ்ச்சி தொகுப்பாளினிகள்:
அபிரா
வித்தியா
குறும்படங்கள்
Women's Day
08.March.2020
Sunday 14.59
அரங்க நிர்வாகம்
கலைநிதி சபேசன், ஜெயா சக்திவேல்,
கீர்த்திகா.
சி.சக்திவேல்,சிவ.வினோபன்,கோபி
பிரவேசம்:
இலவசம்
நன்றி: IBC தமிழ் | அகரம்
Vettimaniy: +49 163 199 2333
மண்டபம்: PALAZIO | KASINOSTR. 25 42103 WUPPERTAL

06ம் பக்கத் தொடர்ச்சி..




அதாவது இலங்கை தமிழ் படங்கள் என்பதை தாண்டி இந்திய தமிழ் படங்களுக்குள்ளேயும் gun and the ring தான் Shanghai international filmfestival இல் Golden Goblet விருதுக்காக தேர்ந்தெடுக்கபட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது ரூபா திரைப்படம் பல பல திரைப்படவிழாக்களுக்கு சென்றது. அதில் முக்கியமாக GOA international filmfestivalஇல் தேந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஈழத்து படைப்பான தமிழ் திரைப்படம் GOA international filmfestivalஇல் கலந்து கொள்வது இதுவே முதல் தடவை. பல பல திரைப்பட விழாக்களில் எனது 3 படங்களும் விருத்திகள் பெற்றுகின்றன. ஒரு படைப்பாளியாக இது எனக்கு மிகவும் உச்சகமும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்றன.

7.இப்பொழுது நீங்க ஒரு இந்திய தமிழ் திரைப்படத்தில் அதுவும் ஒரு மிக பெரிய இயக்குனரிடம் சிஷ்யனாக வேலை புரிந்து வருகிறீர்கள். அந்த அனுபவங்கள் பற்றி சொல்லுங்கள்.

இயக்குனர் மிஸ்கின் எனது நீண்டகால நண்பர், மிகவும் நெருக்கமானவர். அவர் தனது திரைப்படமான துப்பறிவாளன் 2 பாகத்தை முழுக்க முழுக்க Londonஇல் எடுக்கப்போகிறதாகவும், நான் அவருக்கு சில உதவிகள் செய்து அவருக்கு துணையாக இருந்தால் அவருக்கு அது ஒரு பெரிய பலமாக இருக்குமெனவும் சொன்னார். நானும் அதை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். அவர் படத்தில் இப்பொழுது first assistant director பணியாற்றிவருகிறேன். முதலாவது schedule இப்பொழுது நிறைவேறிவிட்ட்து இரண்டாவது schedule பங்குனி மாதம் தொடரும்.

8.ஒரு ஈழத்து இயக்குனராக உங்கள் படைப்புகளையும் மற்ற நாட்டு படைப்புகளையும் பார்க்கும் பொழுது எங்கள் மக்கள் மத்தியில் எமது படைப்புகளுக்கு வரவேற்பு ஆதரவு எப்படி இருக்கின்றது, நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் என்ன?

கலைஞர்களாகிய எங்கள் பலரால் ஆதங்கங்கள் வெளிப்படுத்தப்படுவது உண்டு. ஆனால் நான் இதை சற்று வித்யாசமாகதான் பார்க்கிறேன். ஏனெனில் ஒரு மிக பெரிய தென் இந்திய திரைப்படத்துறையால் 100 வருடங்களுக்கு மேலாக திரைப்படங்களை பார்த்து பழகிய எமது மக்களுக்கு திடீரெனெ எமது படங்கள், எமது மொழிநடையை பாருங்கள் என்று கேக்கவும் வற்புறுத்தவும் முடியாது, பார்க்காவிட்டால் அது அவர்கள் பிழையென்றும் நாங்கள் சொல்ல முடியாது. ஒரு திரைப்படத்துறையை உருவாக்குவதட்கு, கட்டியெழுபுவதட்கு ஒரு அரசு தேவை, அதன் பல கட்டங்களில் பலவிதமான நகர்வுகாளை உருவாக்கித்தான் அதை கொண்டுவர முடியும். 60களில் சிங்கள அரசாங்கம், சிங்கள திரைப்படங்களை திரையிட திரை அரங்குகள் இடம் ஒதுக்க வேண்டுமென்று எப்படி கண்டிப்பாக சட்டங்களை கொண்டுவந்ததோ அப்படி ஒரு சூழ்நிலை எமது படங்களுக்கும் வந்தால் தான் எமக்கான ஒரு திரைப்படத்துறையை அமைக்கலாமென்று நினைக்கிறன். ஆதலால் அன்று தொடங்கி இன்று வரை எமது மக்கள் எமது படைப்புகளை ஆதரிக்க மாட்டார்களென்று சொல்வது ஒரு பிழையான விடயமென்று நான் நினைக்கிறன். எமது மக்கள் போர் மற்றும் எத்தனையோ துன்பங்களை கடந்து வந்த மக்கள், இப்பொழுது அன்றாட வாழ்வியல் பிரச்சனை என்று எத்தனையோ பிரச்சனைகள் இருக்கும் பொழுது கலை சம்பந்தமான விஷயங்களுக்கு ஊக்கம் கொடுப்பதும் ஊக்குவிப்பததற்கும் நேரமில்லை என்று தான் நினைக்கிறன். எமக்கென்ற ஒரு சினிமாத்துறை எமது இரண்டாவது சந்ததியினர் ஏற்படுத்துவார்களென்று நினைக்கிறன். அவர்களுக்கு நேரமும் போதிய அளவு பணமும் இருந்தால் எமக்கென்று ஒரு திரைப்படத்துறை அமைய வாய்ப்பு உண்டு. அதட்கு மேல் திரையரங்குகளுக்கு சென்று படம் பார்க்கவேண்டுமென்பது கடந்த காலமாகிவிட்டது. VOD முறையில் amazon, netflix போன்ற தளங்கள் இருப்பதால் நாம் ஒழுங்கான, தரமான ஒரு திரைப்படத்தை எடுத்து VOD தளங்கள் மூலம் விநியோகஸ்தம் செய்தாலே அது எமது மக்களுக்கு மட்டுமல்ல சகல மக்களுக்கும் போய்சேரும். எமது கலைஞர்களும் படைப்பாளிகளும் இப்படிபட்ட இணையத்தின் தளங்களுக்கு எமது படைப்புகளை கொண்டு சேர்க்க வழிகள் தேடவேண்டும். தொடர்ந்தும் எமது மக்கள் மேலே குறை சொல்லி கொண்டிருப்பது சரியில்லை.

எங்கள் வெற்றிமணி பத்திரிகைக்காக உங்கள் நேரத்தை ஒதுக்கி ஒரு அருமையான நிறைவான நேர்காணலை கொடுத்தமைக்கு நன்றி திரு. லெனின் அவர்களே. உங்கள் புதிய திரைப்படங்களுக்கு காத்திருக்கிறோம்.

யேர்மனி இங்கிலாந்து இங்கெல்லாம் வெற்றிமணி பத்திரிக்கை இலவசமாக கிடைப்பதை அறிவேன். அருமையான சேவை. திரு. மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கும் அவரது 25 வருட கால உழைப்பிற்கும் மிகவும் நன்றியும் பாராட்டுகளும். என்னை நேர்கண்ட தோழி பிரபாலினிக்கு எனது நன்றிகள்.



புங்குடுதீவு கிழக்கு கலட்டியம்பதி
வரசித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்



புங்குடுதீவு கிழக்கு கலட்டியம்பதி வரசித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த 07.02.2020 மிகச்சிறப்பாக இடம்பெற்றது.ஆலயத்தில் கோபுரம் ஆலயசிற்பங்கள் யாவையும் சிறப்பாக அமைத்த (சிதம்பரம்) புருஷோத்தமன் குழுவினரை ஆலய நிர்வாகக்குழுவினரும் பிரதம குரு ஐயாமணி குருக்களும் கௌரவித்தனர். இவ்வாலயம் 6 கோடி ரூபா செலவில் புதுப்பொலிவுடன் நிர்மானிக்கப்பட்டுள்ளது.






அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்

# சின்னத்திரை நாடகங்களால், அபத்தமாகும் பெண்ணினம்!



ராம் பரமானந்தன்

சௌந்தார்யாவிற்கும் Snow White இற்கும் என்ன சம்மந்தம்?
சின்னத்திரையில் வரும் முதிய பெண்களின் அதிகமான கதாப் பாத்திரங்களிற்கும், உண்மையான பெண்களுக்கும் சம்மந்தமே இல்லை. இருந்தும் அவர்களது கதாப்பாத்திரங்ளைத்தேடியே நாம் தொலைக்காட்சியை நுகர்கிறோம். ஏன் அப்படி? நாம் வாழும் சமூக அமைப்புக்களில் ஒவ்வருவருடைய பங்குகளும் மிக நுணுக்கமாக பிரிக்கப்பட்டுள்ளன. குடும்பத்தில் எவரவர் என்னன்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் சமுதாயம் எதிர்பார்த்தே செல்கிறது. குடும்பம் எனும் அமைப்பில், பெண்ணினது, முக்கியமாக தாயினது பங்கு மிக நுட்பமாகவே பிரிக்கப்பட்டுள்ளது. தாயவளின் அன்பும் ஆதரவும் நிபந்தனையில்லாதது, என்றும் நிலையானது. அவளின் கடமைகளில் அவள் என்றும் தவறமாட்டாள், மலர்ந்த முகத்துடன், மக்களை ஆதரிப்பது தாயினது சுபாவமென வகுத்திருக்க, அதையே நாம் காணும் தாய்மாரிடம் நாம் எதிர்பார்ப்போம்.

எதிர்பார்ப்பிற்கு மாறாக ஒன்று இருந்தால், அது ஆபத்து என நினைப்பது மனிதசுபாவம். இரவு வீதியில் நடந்து சென்றால் வழக்கத்திற்கு மாறாக எதாவது இருக்குமோ என அதிக அவதானத்துடன் கண்கள் தேடும். திசைதிருப்பும் சிந்தனைகளுக்கு சுரங்கப்பாதையில் இடம் இல்லை. இது உயிராபத்திற்கு எச்சரிக்கையாக இருக்கச்சொல்லும் உள்ளுணர்வு. மனித இனமென்ன, மிருகம்கூட வழக்கத்திற்கு மாறாக இருப்பதைக் கண்டறிந்தே, தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை அறிகிறது. அப்படியே, தூய்மையான நேசம் கொண்ட தாய், எதிர்பார்ப்பிற்கு மாறாக வஞ்சகமான வில்லியாவது, மனிதருடைய உள்ளுணர்வுகளுடன் விளையாடுகிறது. பச்சாத்தாபம் கொண்டு கதாநாயகர்களுக்கு தவறாக நடக்கும் மூத்த பெண்களால் ஏற்படக்கூடிய ஆபத்தை நோக்கி எம்மை சின்னத்திரையை நுகர வைக்கின்றனர்.

நடுரோட்டில் ஒரு விபத்து நடந்தால், ஆபத்திற்கு உதவலாமே தவிர, வேடிக்கை பார்க்கக்கூடாது. ஆனால் என்ன நடக்கிறது? எப்படி முடியுமோ? என வேடிக்கை பார்க்காமல் இருக்க மனம் விடுவதில்லை. அந்த உணர்வுடனே, சின்னத்திரை இயக்குனர்கள் விளையாடுகின்றனர். இன்று சௌந்தர்யா „பாரதி கண்ணமாவில்“ எந்தப் பிரச்சனையை ஊதுவாரோ? „அரண்மனைக்கிளியில்“ மீனாட்சி ஜானகியிடம் எந்த பிரச்சனையை தொடுப்பாரோ? இவர்களிடயே அர்ஜுன் எங்கே? ஒரு தாய் இப்படி இருக்ககூடாது, அவள் செய்வது மனித நேயத்திற்கே விரோதமானது என்று அறிந்தும், இன்று அவள் எமது எதிர்ப்பார்ப்பிற்கு மாறாக எப்படி நடப்பாள் என்பதை அறிய மேலதிக ஆர்வம் தூண்டப்படுகிறது.
மாமியார்களும், சித்திகளும் ஒருவிதத்தில் தனிமைக்குத் தள்ளப்பட்டு இருக்கும் கதாப்பாத்திரங்களே. தனது மகன் தன்னை விட்டு போய்விடுவானோ என்ற ஏக்கமே மாமியார் மனதில். ஏற்கனவே நிலையாக இருக்கும் குடும்பத்தில், தன்னையும், தன் சொந்தவாரிசுகளையும் நிலை நிறுத்த ஏற்கப்படும் இரண்டாம் தாரம், தான் சித்தி. ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படும்போது, அவளுக்கு தோன்றும் இயற்கையான பயங்கள். இவற்றை கடந்த நூற்றாண்டுகலளிலியே தீவிர விளைவுகளுடன் கருவாக்கினர் கதையாசிரியர்கள். Cinderellaவின் கதையில், சித்தி தன் மகள்களின் எதிர்காலத்தை நிறுவ எடுக்கும் முடிவுகளை அபாண்டமாகப் பெரிதுபடுத்தி, அப்பாவி அனாதையாக Cinderellaவை உருவகிக் கின்றனர். Cinderella போல அழகி தனது பெறாமகளாக இருந்தால், எந்தத் தாய் தான் முற்பாதுகாப்பிற்கு வழி அமைக்கமாட்டாள்? அதற்காக அப்பாவிப்பெண்ணை இப்படி சித்திரவதை செய்யும் சித்தியா? சித்தியும் சிண்ட்ரெலா அடிப்படையிலும் தான் நாம் பார்க்கும் அதிகமான சின்னத்திரைத் தொடர்கள் தொடர்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. சிறியதொரு பிரைச்சனையை பெரிதாக ஊதி, நியாயமற்ற, அளவுக்கு மீறிய எல்லைகளை உண்டாக்கும் முதிய பெண்களை வில்லிகள் ஆக்குவது, ஒருவிதத்தில் சுவாரஸ்யம், இன்னொருவிதத்தில் அபத்தமான குடும்பத்தலைவிகளைத் தேடித்தொடர வைக்கிறது. அதைவிட „சரியாக“ நடக்கும் பெண்களிலும் மாசுகளைத் தேட வைக்கிறது. இது சின்னத்திரையில் வரும் முதிய, „நல்ல“ பெண்களின் மேல் கூட வரும் எதிர்பார்ப்பு. நல்ல குடும்பக்குத்துவிளக்காக நிலைத்து நிற்கும் „பாண்டியன் ஸ்டோர்ஸ்“ அண்ணி „தனம்“, ஏதாவது ஒரு சூழ்ச்சியில் இறங்கியிருப்பாரோ என்று யோசித்தது, நீங்கள் மட்டுமல்ல. இங்கே ஆபத்தானது: நிஜவாழ்விலும், முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கைச்சிக்கல்களை நேரிடும் பெண்ளின் மீதும் இந்த அபத்தமான எதிர்ப்பார்ப்புக்கள் எமக்குள் ஊடுருவுகின்றன.
பார்வையாளர்களது நல்ல உள்ளத்துடனும் இயக்குனர்கள் விளையாடு கிறார்கள். சித்தி மாறமாட்டாளோ? மருமகளை ஏற்று, எமைப்போல சராசரி மனித நேயத்தை கொள்ளமாட்டாளோ? என்று மாறுவாள்? எனும் எமது ஏக்கமே சின்னத்திரை தொடர்களின் உயிர்நாடி. சில வருடங்களுக்கு முதல் இவள் வில்லி, இவள் அப்பாவிக் கதாநாயகி என நாம் அறிவதற்காக ஒருமிகையான சுபாவங்களையே மாமியார்களுக்கு வழங்கப்படிருந்தன. ஆனால், அங்கும் இங்கும் ஒரு சில இடங்களில மாமியாரை அழவைத்து, அவளும் உணர்வுள்ளவள் தான் என நாம் கருத்தில் கொள்ள அண்மையகாலத்து சின்னத்திரைகள் மாறியுள்ளன. இதனால் வில்லியின்மேல் சிறியதொரு புரிந்துணர்வை எமக்கு ஏற்படுத்தி, அவளை திடுதிடுப்பென அபாண்டமான முடிவுகளையும், காரியங்களையும் எடுக்கவைத்து, உணர்வுகளை முறிக்கின்றனர். எமது நம்பிக்கையை மாமியார் கெடுத்துவிட்டார், இவள் மேல் கருணைகொண்டோமே என நாம் மாமியார் மேல் மென்மேலும் கோவம் கொள்கிறோம்.

ஒரு சித்தி, தனது பெறாமகளை கொல்ல, அன்பான ஒரு பாட்டியாக மாறிவந்து விசத்தைக் கொடுக்கிறாள் என்றால், அவள் எவ்வளவு கொடுமையானவள் என்பதை, கதையின் உள்ளடக்கதிற்கு அப்பாற்பட்டு யோசிக்க அபத்தமாக தெரிகிறது. அதேபோல பெத்ததாய் தன் மகனை வீட்டிற்கு முன்னால் உண்ணாவிரதம் இருக்க வைக்கிறாள் என்பதும் கனவில் கூட நடக்காததாக உள்ளது. பெண்ணின் என்ணங்களை அள்வில்லா முட்டாள் தனமாகவும், சூழ்ச்சித்தனமாகவும் காட்டி, அவளை வில்லியாக நிறுவி, மூத்த பெண்ணுறவுகளை கொடியவர்களாக்கியே வருகின்றனர்.Snow White கதையில் சித்தி ஒரு ராணி, பணத்திலும் அழகிலும் சிறந்தவள். அதுபோலவே, பாரதி கண்ணம்மாவின் சௌந்தர்யாவோ, அரண் மனைக்கிளி மீனாட்சியோ, அனைத்து வசதிகளையும் கொண்டிருந்தாலும், கடைசியில் தனிமைக்கு பயந்தே தம்மை இழந்து கொடூரமான முடிவுகளில் இறங்குகிறார்கள். மூவரும் காலத்தின் கறை படாத அழகை நோக்கி, தமது இளமையை பேண அதிக ஆர்வம் கொண்டவர்களாகவே காட்டபடுகின்றனர். அதிக அலங்காரம், அதிக மேக்கப், அதிக கிளாமருடன், போட்டிக்கு வரும் இளம்பெண்களை குத்திக்கொல்வது, விசம் வைத்துக்கொல்வது, பண்டைய கதைகளில் இருந்து, இன்று சின்னத்திரையில் வரை.இளமையும், அழகுமே பெண்ணை சமுதாயத்திடையே மேன்மைபடுத்தும் என்ற கருத்தை இலக்கியங்களும், இயக்குனர்களும் நிறுவுகிறார்கள். இங்கே சுவாரஸ்ய மானது: Snow White போன்ற கதைகளிலிருந்து, இன்று நாம் பார்க்கும் சின்னத்திரை நாடகங்களின் ஆசிரியர்கள் வரை அனைவரும் ஆண்களே என்பது தான். இவர்காளால் வயது முதிர்ந்த பெண்களைப் பற்றி சமுதாயத்தில் ஒரு தவறான அபிப்பிராயமே நிறுவப்படுகிறது. முதுமையான பெண்களை குணத்திலும், அழகிலும் பின்தங்கியவர்கள் என்பாதல் முதிர்ந்த ஆண்களை அணுகுவதுபோல், முதிர்ந்த பெண்களை நாம் மரியாதையாக அணுகுவது இல்லை.முதுமையுடன் அனுபவம் சேர, பெண்களின் அறிவு வளர்கிறது. அதை மட்டுப்படுத்தவே, இந்த கொடுராமான உருவகிப்புக்கள். இயக்குனர்கள் முதிய பெண்களை கொச்சைப்படுத்தும் நோக்கத்துடன் இந்த திரைக்கதைகளை எழுதாவிடினும், பழைய முறைகளையும் கதை வடிவங்களையும் கண்மூடித்தனமாக தொடர்ந்து படைப்பது, 38 ம் பக்கம்



# யேர்மனியில் இயங்கி வரும் ஐரோப்பியத் தமிழ் (ETR) வானொலியின் 16 வது ஆண்டு விழாவும் அகரம் சஞ்சிகையின் 10 வது ஆண்டு விழாவும்



## இரு ஊடகங்களின் ஒரு பெருவிழா

யேர்மனியில் இயங்கி வரும் ஐரோப்பியத் தமிழ் (ETR) வானொலியின் 16வது ஆண்டு விழாவும் அகரம் சஞ்சிகையின் 10தாவது ஆண்டு விழாவும் நேற்றாகிய 15.02.20 அன்று டோட்மண்ட் நகரில் மண்டபம் நிறைந்த சபையோருடன் தேன் மதுரமாலை என்ற பெயரில் இவ்விழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இவ்விழாவில் பல்கலை நிகழ்ச்சிகளான ஆடல் - பாடல் - வில்லிசை - பட்டிமன்றம் என்பன சிபோ சிவகுமாரின் தயாரிப்பிலும் இயக்கத்திலும் ஜரிஎன் தொலைக்காட்சியின் அனுசரணையில் தயாரிக்கப்பட்டு நாளைய நாம் தொடர்நாடகத்தின் சில காட்சிகளும் இவ்விழாவில் இடம்பெற்றிருந்தன.

பல்வேறு நடன அமைப்புகளிலிருந்து வந்த நடன மாணவர்களின் நடனங்களும் தாளம் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் ஈழப்பிரியனால் தயாரிக்கப்பட்ட வில்லிசை நிகழ்ச்சியும் வெற்றிமணி ஆசிரியர் நடுவராக இருக்க சுவிசிலிருந்து வருகைதந்த ஊடகவியலாளர் சண்.தவராசா எழுத்தாளர் பொலிகை ஜெயா - பாலா - சபேசன் - ஏலையா க.முருகதாசன் பல்கலைக்கழக மாணவர்களான செல்வி.கஸ்தூரி லோகநாதன்,செல்வன்.ராம் பரமானந்தன் ஆகியோர் பங்குபற்றிய புலம்பெயர் மண்ணில் முறைசார் ஊடகங்களின் பணி பயனுள்ளதா? பயனற்றதா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெற்றிருந்தது. இவ்விழாவில் உரையாற்றிய ஐரோப்பிய தமிழ் வானொலியின் இயக்குனரும் அகரம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான த.இரவீந்திரன் அவர்கள் இவ்விழாவிலே யேர்மனியில் வெளிவரும் வெற்றிமணி அகரம் தமிழ் ரைம் ஆகிய அச்சு ஊடகங்களின் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நிற்பது மகிழ்வானது. வேறு நாடுகளில் எங்குமே நடப்பது அரிதானது, எனக் குறிப்பிட்டதுடன் சபையோர் அனைவரும் பிரதம விருந்தினர்களே என விளித்துப் பேசுகையில் தான் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தடைகள் என்பவறறைக் கூறியதுடன் மக்களின் ஆதரவே இவ்விழாவைச் சிறப்பாக நடத்துவதற்குக் காரணம் எனக்குறிப்பிட்டு இவ்விழா நேரத்திட்டமிடலுக்கு அமைய 14.59 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு திட்டமிட்ட நேரத்திற்கு நிறைவு செய்ய முடியாமைக்கு பல காரணங்கள் இருந்தாலும் அக்காரணங்களை தவிர்த்துவிட்டு அதற்காக மன்னிப்புக் கேட்கிறேன் என்ற பெருந்தன்மை மிகவும் பாராட்டக்கூடியதே.

அவரின் உரையில் பொதுச்சுடராக ஏற்றிய தீபக் குத்துவிளக்கு இடம் மாற்றப்படாமல் அதே இடத்தில் இருந்தது மட்டுமல்ல, குத்துவிளக்கின் அத்தனை தீபங்களும் விழா நிறைவு செய்யும் வரை அணையாமல் இருந்ததைக் குறிப்பிட்டதுடன் விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்றுபவர்கள் தமது நிகழ்ச்சிக்கான குறிப்பிட்ட நேரத்தில் வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமே விழாவைச் சிறப்பாக நடத்தி குறிப்பிட்ட நேரத்தில் நிறைவு செய்ய முடியும் என்பதையும் ஒரு அறிவுறுத்தலாக தொட்டுச் சென்றார். வழமை போல் உபசரிப்பும் சிறந்து விளங்கியதைக் காணக் கூடியதாக இருந்து. இரவு உணவும் அளிக்கப்பட்டது.

இவ்விழாவில் சிறப்பம்சமாக, விழாவை நடத்துவதே தாயக மக்களுக்கு என்று சொல்லப்படாமல் உதயம் தொண்டு நிறுவத்தினர் விரும்பினால் சபையோரிடம் நிதி அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற முறைமைக்கமைய, அந்நிறுவன தொணடர்கள் சபையோர் மனமுவந்தளித்த நிதியை பெற்று அகரம் சார்பாக தாயக மக்களுக்கு உதவி செய்தமையும் பாராட்டக்கூடியதே. அத்துடன் இவ்விழாவில் சிற்றுரை ஆற்றிய வெற்றிமணி ஆசிரியர் அகரம் சஞ்சிகையின் வருகை தன்னை உசார்ப்படுத்தியது என்றும் குறிப்பிட்டார். புலம்பெயர் நாடொன்றில் ஒரு வானொலியையோ அல்லது ஒரு சஞ்சிகையை அதுவும் யேர்மனியில் நடத்துவது என்பது அசாத்தியமானதாகும்.

இவ்விழாவன்று 14.30 மணிக்கே முக்கால்வாசி மண்டபம் நிறைந்திருந்ததை காண முடிந்தது. இரு ஊடகங்களின் ஒருபெருவிழாக இவ்விழா இனிதாக நடந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதே. இவ்விழாவினை தேவன் வியயன் தர்மா சுதன் ஆகியொர் அளவறிந்து சொற்களில் கம்பிரமாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியதுடன் மூத்த அறிவிப்பாளரான திரு.லோ.வலன்ரைன் அவர்கள் பைலா பாட்டொன்றையும் பாடி சபையோரை மகிழ வைத்தார்.

ஆக்கம்: **ஏலைலையா க. முருகதாசன்**





### யேர்மனியில் முதன் முதலாக தமிழில் ஒரு தொடர் கதையை எழுதிய ஒரு பெண் எழுத்தாளர் என்னும் பெருமைக்குரியவர் திருமதி

# புஸ்பராணி ஜோர்ஜ்

மனைவி நல்லவளாகவும், புத்திசாலியாகவும் இருந்தால், மனைவியை முன்னேற்ற வேண்டியது கணவனின் கடமை. என்னுடைய மனைவி நல்ல கெட்டிக்காரி சொன்னவர் யார்?

2011 ஆம் ஆண்டு ஹம் நகரிலே பிரான்ஸ் தமிழரங்கு தமிழ் கலாசார ஒன்றிய விழாவிலே முத்தான மூன்று கலைஞர்களாக கௌரவிக்கப்பட்டவர்களில் ஒருவரான அமரர் திருமதி புஸ்பராணி ஜோர்ஜ் அவர்களின் கணவன் ஜோர்ஜ் அவர்களே இவ்வார்த்தைகளுக்குச் சொந்தக்காரன் ஆவார். இலங்கையில் பருத்தித்துறையில் இருந்து 1988 இல் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் ஹம் நகரில் வாழ்ந்து வந்தது ஒரு குடும்பம். அக்குடும்பத்தில் இருந்து எழுதி வந்த எழுத்துக்கள் இடையில் நின்று போனது. காலம் எழுத்தாளர்களை மறந்து விடுகின்றது. மறக்கப்படுகின்றார்கள். தொடர்ந்த செயற்பாடுகளே எழுத்தாளர்களை அடுத்தவர்கள் கண்களுக்கு அடையாளம் காட்டிக் கொண்டே இருக்கும். இதற்கு அத்தாட்சியானது திருமதி புஸ்பராணி ஜோர்ஜ் அவர்களின் இழப்பு.

நான் அறிந்த வரையில் ஜேர்மனியில் முதன் முதலாக தமிழில் ஒரு தொடர் கதையை எழுதிய ஒரு பெண் எழுத்தாளர் என்னும் பெருமை திருமதி புஸ்பராணி ஜோர்ஜ் அவர்களையே சாரும். ஒரு எழுத்தாளராக கலைஞராக அவர் வலம் வந்த காலப்பகுதியில் ஜேர்மனி மாத இதழ்களான திரு காசி. நாகலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட வண்ணத்துப்பூச்சி, இலக்கியச் செம்மல் இந்துமகேஷ் அவர்களை ஆசிரியராகக் கொண்ட பூவரசு போன்ற இதழ்களில் இவருடைய படைப்புக்கள் வெளிவந்தன.

இம் மாத இதழ்களில் வெளியான கதைகளை உள்ளடக்கியே கதம்ப வாசகங்கள் என்னும் ஒரு நூல் இவரால் 2004 இல் திருகோணமலையில் வெளியீடு செய்யப்பட்டு ஜேர்மனி ஹம் நகரில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் பின் நிதங்களின் தரிசனம் என்னும் அமரர் திருமதி லூர்த்தம்மா யோசேப் அவர்களின் ஞாபகார்த்த மலர் ஒன்றை 2010 இல் வெளியீடு செய்திருந்தார். இது கிறிஸ்தவ ஆராதனைப் பாடல்களுடன் மேற்படி தம்பதியரினது வாழ்க்கை வரலாறு, பரம்பரைப் பெருமைகளைப் பதிவுடன் இந்நூல் மாரீசன்கூடல் பற்றிய பிரதேச வரலாற்றினையும் ஓரளபதிவு செய்கின்றது. இவ்விரண்டாம் பாகத்தில் முழுமையாக ஒரு குடும்பத்தின் ஏழு தலைமுறைக்கான சந்ததி வரலாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

திருமதி. புஸ்பராணி ஜோர்ஜ் என்பவர் 3 குழந்தைகளுக்குத் தாயான பின்பே பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் சாதாரண தொழிலாளியாக இணைந்து யாழ் கொக்குவில் கல்லூரியில் கணக்கியல் படித்து Higher National Diploma படித்து கணக்காளராகப் பதவி வகித்தார். இவரது அயராத ஊக்கமும் உழைப்பும் கணவனின் ஒத்துழைப்புமே இவரது உயர்வுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. ஜேர்மனியிலுள்ள ஹம் தமிழாலய உதவி நிர்வாகியும், ஆசிரியருமாகக் கடமையாற்றியதுடன் 1993 கலாசார சிதைவு என்ற நாடகத்திலும், ஐசாக் இன்பராசா அவர்களின் நாடகக் குழுவிலும் நடிக்கத் தொடங்கி ஏறக்குறைய 30 நாடகங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

கதம்பவாசகங்கள் என்னும் நூலில் 10 சிறுகதைகளும் நெடுங்கதைகளும் இடம்பெற்றிருக்கின்றன. எழுதாத கோலங்கள், பிரியாத உறவுகள், ஓயாத பயணங்கள், முடியாத தொடர்கள், சுதிசேரா சுரங்கள், ஒலிக்காத ஓசைகள், அழியாத சுவடுகள், சுவையா இலக்குகள், புரியாத சில நொடிகள், நிழலின் நிசங்கள் ஆகிய தலைப்புகளில் இவை அமைந்துள்ளன.



கௌசி

தொடுவானம் ஆசிரியர் அ.பி.ஜெயசேகரம் அவர்கள் மனிதவாழ்வில் புதைந்திருக்கும் பல்கூறுகளில் வினாக்களை எழுப்பி அவற்றுக்கு விடை காண முயல்பவர் எழுத்தாளரே என்றும் இந்நிலையில் ஈழத்தமிழரின் சமகால வாழ்வு அவர்களின் புலப்பெயர்வு, பொருளாதார தடை, உறவுகளின் பிரிவு, போன்ற புறச்சூழல்களை முன்னிறுத்தி பல்வேறு வினாக்களைத் தனக்குள்ளே எழுப்பி அவற்றிற்கான விடைதேடும் பாங்கில் தன்னுடைய கதைகளை புஸ்பராணி நகர்த்திச் செல்கின்றார் என்கிறார்.

பூவரசு ஆசிரியர் இந்துமகேஷ் அவர்கள் ஆசிரியர் பற்றிக் குறிப்பிடுகையில் அன்னிய மண்ணின் வாழ்க்கைச் சூழல், குடும்பப் பொறுப்பு, தாயக மண்ணில் உறவுகளின் பிரிவுத்துயர், என்று விரைந்தோடும் காலகட்டத்தில் நேத்திற்காய் மல்லுக்கட்டி கலை, இலக்கியம் என்று கால்பதிக்க முயலும் பெண்களின் வரிசையில் புஷ்பராணி ஜோர்ஜ் கவன ஈர்ப்புப் பெறுகிறார் என்கிறார்.

நூலகவியலாளர் செல்வராஜா அவர்கள் ஐ.பி.சி வானொலியில் இவர் பற்றிக் கூறும்போது தனது உணர்வுகளை சம்பவக் கோர்ப்பாக்கிக் கொட்டத் துடிக்கும் வேகம் தெரிகிறது. இவருடைய ஆக்க இலக்கியம் மேலும் மேலும் தொடரவேண்டும் அதற்கு தனது எழுத்துக்களைப் மேலும் மேலும் பட்டை தீட்டிக்கொள்ள வேண்டும். இன்று ஈழத்து எழுத்துத் துறையில் நன்கு பேசப்படும் பிற எழுத்தாளர்களின் நூல்களை வாசித்து அவர்களின் எழுத்துக்களின் பாணிகளை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். சம்பவங்களை எழுத்தில் வடிப்பதில் பல நுணுக்கங்கள் உள்ளன. அவற்றைக் கண்டறிய வேண்டும். உரையாடல்களில் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் பாணி வரவேற்கத்தக்கது. நீண்ட உரையாடல்கள் வாசகரைக் கவர்வது குறைவு. இத்தகைய அடிப்படை நுட்பங்களை மனதில் பதித்து மேலும் மேலும் வளர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இன்று எழுத்தாளர் புஸ்பராணி நம்மத்தியில் இல்லையானாலும் இவ் அறிவுறுத் தல்கள் வளருகின்ற எழுத்தாளர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்று கருதுகின்றேன்.

இவர் நீண்டு வாழ்ந்திருந்தால் நிலையான பல படைப்புக்களை இவ்வுலகிற்குத் தந்திருக்கலாம். காலம் கரைத்துவிட்ட படைப்பாளியாக இவர் கருதப்படாது வாழ்ந்திருக்கலாம். இவரால் உலகுக்கு அளிக்கப்பட்ட கதம்பவாசகம் ஒன்றேயானாலும் அது பல நிதர்சனங்களின் தரிசன மாகவுள்ளது.உதவி: கதம்பவாசகங்கள், நூலகவியலாளர் செல்வராஜா திரு. ஜோர்ஜ்







# ஈழத்தில் இன்றளவும் செழித்திருக்கும் கண்ணகி வழிபாடு !



வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம்

தமிழர் மரபில் கற்புக்கு இலக்கணம் யாதென கேட்பின் அடுத்த பதில் இந்த மகராசியின் பெயரே முன் வந்து நிற்கும்,பத்தினித் தெய்வம் கண்ணகி.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பெற்ற கண்ணகி, பாமரர்களின் தெய்வம், மலைக்குறவர் முதல் மண்டலம் ஆளும் மன்னவர் வரை இவளை பணிந்தனர்.
காப்பிய ஆசிரியர் இளங்கோவே பின்னால் இவள் தெய்வமாவாள் என்பதை முற்பகுதியான வேட்டுவவரியில் தெய்வம் ஏறி ஆடும் சாலினி வாயால் இவ்வாறு சொல்ல வைக்கிறார்.
"இவளோ கொங்கச் செல்வி, குடமலையாட்டி, தென்தமிழ்ப்பாவை, செய்தவக் கொழுந்து, ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி"

இந்த கற்புக்கரசி கண்ணகிக்கு ஒரு கோட்டம் அமைக்க சேரன் செங்குட்டுவன் வடபுலம் சென்று ஆரிய மன்னராம் கனக விசயரை வென்று இமயத்தில் கல்லெடுத்து கங்கையில் நீராட்டி, கனக விசயர் மேல் சுமத்தி, பேரியாற்றங் கரையில் நெடுவேள் குன்றத்தில் கோட்டம் அமைத்து பூசித்தான் !

உறையூரிலும் மதுரையிலும் கடல் கடந்த இலங்கையிலும் கண்ணகி ஆலயங்கள் எழுந்தன. கண்ணகி வழிபாடு தமிழகத்தில் காலப்போக்கில் மற்ற அம்மன் வழிபாடோடு கலந்துவிட ஈழத்தில் மட்டும் இன்றளவும் சிறப்பாக கண்ணகி கொண்டாடப் படுகிறாள்.
பொன்னியின் செல்வன் புதினத்தில் அருள்மொழி வர்மர் இலங்கையில் இருக்கும் கதைப்பகுதியில், அருள்மொழி வர்மர் வந்தியதேவனுக்கு அனுராதபுரத்தில் நடக்கும் எசல பெரஹார திருவிழாவை பற்றி கூறும் இடத்தை நாம் படித்திருப்போம். அந்த திருவிழாவில் புத்தர், நாதர் அல்லது சிவன், திருமால், கந்தன் மற்றும் பத்தினிக்கு யானை மேல் ஊர்வலம் நடக்கும், இந்த விழா இலங்கையில் இற்றைக்கு 1800 வருடங்கள் முன்னரே தொடங்கிவிட்டது.
கி.பி இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட கயவாகு மன்னன், சேரன் செங்குட்டுவனின் அழைப்பையேற்று சிலப்பதிகார அரங்கேற்றத்தில் கலந்து கொண்டு திரும்பும் போது கண்ணகியின் சிலம்பையும், பிரம்பையும் சேரன் செங்குட்டுவனிடமிருந்து பெற்றுக் கொண்டு வந்து, தமிழ்நாட்டில் அக்காலத்தில் வழக்கிலிருந்த கண்ணகி வழிபாட்டை இலங்கையிலும், பரப்பினான் எனவும் நம்பப்படுகிறது.

சிலப்பதிகார வரிகள்
கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
என்நாட்டு ஆங்கன் செய்த நாளணி வேள்வியில்
வந்து ஈக என்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரம் என்று எழுந்தது ஒரு குரல்....



சிங்களர் பகுதிகளில் இவள் "பத்தினி" என்றும்
தமிழர் பகுதிகளில் கண்ணகி அம்மன் என்றும்
வணங்கப்படுகிறாள்

**தனசேகர் .பிரபாகரன்**

இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் மொழி, அரசியல் சம்பந்தமான விடயங்களில் சில வேறுபாடுகள் இருந்தாலும், முருகனும், கண்ணகி (பத்தினி) யும் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் பொதுவாக, இரண்டு இன மக்களும் உரிமையோடு சொந்தம் கொண்டாடும் தெய்வங்களாக, வழிபாட்டு முறைகளாக இன்றும் உள்ளன. இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் கண்ணகிக்குக் கோயில் உண்டு.




கோவலனைக் கொன்றதால் கோபமுற்ற சிலப்பதிகார நாயகி, மதுரையை எரித்தவுடன் தொடர்ந்து அங்கு வாழப் பிடிக்காமல் தேவமகளாகி கடலைக் கடந்து கிழவியுருவில் இலங்கைக்கு வந்து பல இடங்களில் தங்கிய பின்னர் கடைசியாக வற்றாப்பளை என்று அழைக்கப்படும் வன்னியிலுள்ள பத்தாம் பளையில் தங்கி இளைப்பாறியதாக ஈழத்தமிழர்கள் நம்புகின்றனர்.

மதுரை எரிந்த பிறகு எங்கும் மழையின்றி வாடவே மக்கள் மழை வேண்டி பத்தினிக்கு பூசனைகள் புரிந்தனராம், இவள் வழிபாடே மாரியம்மை வழிபாடாய் மருவியதென்பர்.
மூவேந்தரையும் முத்தமிழையும் போற்றி, பேதமற்ற மத ஒற்றுமையையும், அறத்தின் சாரமாயும் விளங்கும் சிலம்பின், நாயகி கண்ணகி, தன் கற்பு நெறியால் பெற்ற பேற்றினால் வஞ்சிக் காண்ட இறுதியில் தெய்வமாகமாறி அந்நில மக்களுக்கு காட்சி அளித்து பின் கோவலனுடன் வானுலகம் ஏகுகிறாள்.
உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் ! என்ற சிலப்பதிகார நீதியை இன்றளவும் பத்தினி வழிபாடு மூலம் ஈழம் மெய்ப்பிக்கிறது.







14 ம் பக்கத் தொடர்ச்சி

## இந்தியாவில் சாதனை புரியும் தாயகத் தமிழச்சி

7.உங்களது பள்ளிப் படிப்பையும் நீச்சல் துறையையும் உங்களால் எப்படிச் சமாளிக்க முடிகிறது?
ஆரம்பத்தில் கொஞ்சம் கஸ்டமாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது அது ஒரு பிரச்சனையாகவே தெரிவதில்லை. ஏனென்றால் எனது பள்ளியும் அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் எனக்குப் பக்க பலமாக உள்ளதாலும், எனது குடும்பத்தினரின் ஒத்துழைப்பாலும் என்னால் சமாளிக்க முடிகிறது.

8. இரண்டையும் பின்பற்றுவதில் நீங்கள் எத்தகைய சிக்கல்களை எதிர்கொள்கின்றீர்கள்?

சிக்கல் என்று பெரிதாக எதுவுமில்லை. வேறு விளையாட்டுகள் விளையாட எனக்கு ஆசை இருந்தாலும் எனக்கு நேரம் கிடைப்பதில்லை.
9.விளையாட்டு வீராங்கனையாக அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் எவை?
பள்ளிப் பரீட்சைக் காலத்தில் நீச்சல் போட்டிகள் வந்தால் எனக்குக் கொஞ்சம் கஸ்டமாகத்தான் இருக்கும். படிக்கவும் வேண்டும் பயிற்சியும் எடுக்க வேண்டும் என்பதால் கஸ்ரமாக இருக்கும்.

10.இத்துறையில் உங்களுடைய பலமாக நீங்கள் நினைப்பது எது?
அப்பாதான் என்னுடைய பலம். அவர் இல்லாவிட்டால் நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது.நீச்சல் மீது ஈடுபாடு ஏற்பட்டதும் அப்பாவின் பயிற்சியால்தான். அதேபோன்று போட்டிகளில் கலந்து கொள்ளும்போது என்னை விடவும் மிக ஆர்வமாக இருப்பது அப்பாதான்.எந்தக் கஸ்டம் இருந்தாலும் என்னை நீச்சல் போட்டிகளுக்கு அழைத்துச் செல்வதற்கு அவர் தயங்கியதே இல்லை. அவர் என்மேல் கொண்டுள்ள நம்பிக்கைதான் என்னுடைய மிகப்பெரிய பலம்.

11.உங்கள் நீச்சல் பயணத்தில் உங்களது குடும்பத்தினரின் பங்களிப்புக் குறித்துக் கூறுங்கள்?
என்னுடைய பயிற்சிக்காகவே அப்பாவும்,அம்மாவும் 4.30 மணிக்கே எழும்பிவிடுவார்கள். அப்பா ஒரு பெயிண்டர் ஆகையால் என்னையும் பார்த்து வேலையையும் பார்ப்பது அவருக்கு அதிக கஸ்ரமாக இருக்கும். அவருடைய வேலைகளுக்கிடையில் என்னை நீச்சல் பயிற்சிக்கும், படிப்புக்கும் என மாற்றி மாற்றி அழைத்துச் செல்ல வேண்டும்.
நான் காலையில் 3 மணி நேரமும், மாலையில் 2 மணி நேரமும் பயிற்சி எடுப்பதால் எனது உணவு வகைகள் சரியாக இருக்க வேண்டும் என்பதால் எப்படியான கஸ்ரத்திலும் அம்மா எனக்கான உணவு வகைகளைச் சரியாகக் கொடுப்பார். என்னுடைய தங்கைக்கும் என் மீது பாசம். இவர்களால்தான் என்னால் எல்லாவற்றையும் செய்யக்கூடியதாக உள்ளது.

12.தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்குச் சரியான வேலை வாய்ப்புகள், வருமானங்கள் இல்லாத சூழ்நிலையில் உங்கள் தந்தை உங்களது இந்தச் சாதனைப் பயணத்தில் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது குறித்து நீங்கள் என்ன சொல்ல நினைக்கின்றீர்கள்?
உண்மையிலேயே என்னுடைய தந்தை என்னுடைய திறமைகளை வெளிப்படுத்த மிகவும் கஸ்ரப்படுகின்றார்.
நீந்துவதற்குப் பல தடைகள் வந்தது. அப்பா தன்னம்பிக்கையோடு எனக்காகப் போராடி வெற்றி பெற்றார். பயிற்சியும்,முயற்சியும் எப்போதும் வீணாகாது என்று அப்பா எப்போதும் கூறுவார். அப்பாவின் முயற்சிகள் வீணாகாதவாறு நான் இத்துறையில் சாதனை படைப்பேன்.
13. தமிழ்நாட்டில் ஏதிலியாக இருக்கும் உங்களது திறமைகள் மதிக்கப்படுகிறதா?
ஓரளவு. அகதி என்பதால் சில கஸ்ரங்கள் உள்ளது. விளையாடுவதற்கான வாய்ப்புகள் கிடைக்காமலும் போயுள்ளது.

14. தமிழகத்தில் ஏதிலியாக வாழ்வதால் உங்கள் சாதனைப் பயணத்தில் ஏற்படுகின்ற தடைகள் எவை?

குடியுரிமை இல்லாத காரணத்தால் தமிழ்நாட்டில் நடக்கும் சில நீச்சல் போட்டிகளில் கலந்துகொள்ள முடியவில்லை. மேலும் கடந்த 10ஆம் மாதம் புனேயில் நடைபெற்ற ரயத்திலான் போட்டியில் தங்கம் வென்றதுடன் அமெரிக்காவில் நடைபெறவுள்ள உலக சாம்பியன்சிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தேன். ஆனால் எனக்குக் குடியுரிமை இல்லாத காரணத்தினால் கடவுச் சீட்டு மறுக்கப்பட்டது. இதனால் என்னால் அந்தப் போட்டியில் விளையாட முடியாமல் போயுள்ளது.
15. இவை குறித்து என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

இது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி வரைக்கும் பேசினோம். சில அதிகாரிகள் கடவுச்சீட்டுத் தொடர்பாக மேலிடத்தில் பேசுகிறோம் என்று கூறினார்கள். ஆனால் எந்த முடிவும் வழங்கப்படவில்லை.
இதனால் நானும் அப்பாவும் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டோம். ஆனாலும் நான் கடுமையாகப் பயிற்சி எடுக்கிறேன். மறுக்கப்பட்ட வாய்ப்புகளைத் தாண்டிச் சாதனை படைப்பேன்.வருங்காலத்தில் உலக அளவில் பல பதக்கங்களைப் பெறுவேன்.
என்னை இந்த நாடு தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டால் நிச்சயமாக வருங்காலத்தில் இந்தியாவிற்கு என்னால் பதக்கம் வென்று கொடுக்க முடியும்.
16. நீச்சல் வீராங்கனையாக உங்களது இலக்கு என்ன? அதற்காக நீங்கள் மேற்கொள்கின்ற முயற்சிகள் எவை?
பதக்கங்களைத் தாண்டி எனக்கும் என் அப்பாவுக்கும் பல கனவுகள் உள்ளது. நீச்சல் துறையில் என்னுடைய பெயரை நிலை நாட்டுவேன். என்னுடைய சாதனைகள் எப்போதும் பேசப்படுபவையாக இருக்கும். அதற்காக நான் கடுமையான பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றேன்.
எனது முயற்சிக்கு உற்சாகமூட்டவும் புலம்பெயர்ந்து வாழும் நம் தாயக மக்கள் என்னை அறிந்து வாழ்த்தவும் களம் அமைத்து தந்த வெற்றிமணி பத்திரிகைக்கு நன்றி. இவரது முயற்சிகளும் கனவுகளும் வெற்றிபெற நாமும் வாழ்த்துவோம். எம் மண்ணின் மகளின் வெற்றிப் பாதை குறித்த பெருமிதத்தோடு அவரின் தடைகளெல்லால் அகல வேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்வோம்.




# 100 ஆண்டுகள் கடந்த அனைத்துலக பெண்கள் தினம்

**வ.சிவராஜா**

உலகெங்கும் வாழும் பெண்களுக்கான உரிமை தினமாக பங்குனி 8ம் திகதி எனப் பிரகடனப்படுத்தி 100 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. ஆண்டுகள் பல கடந்தாலும் பல நாடுகளில் வருடக்கணக்காகப் பெண்களுக்கான வாழ்வுரிமை இன்றும் மறுக்கப்பட்டிருப்பது கசப்பான உண்மையாகும்.

சர்வதேச அளவில் பெண்கள் தினம் எப்படி உருவானது என்பதை இத் தினத்தில் தெரிந்து கொள்வது முக்கியம். இது தொடர்பான வரலாற்றுப் பதிவுகள் இங்கு தரப்படுகின்றன. 1908-இல் நியூயோர்க்கில் பணிச் சூழலுக்கு எதிராக பெண் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து போராட்டம் நடத்திய நாளை முன்னிறுத்தி அமெரிக்க சோஷியலிசக் கட்சி, முதன் முதலில் பெண்கள் தினத்தைக் கொண்டாடியது. ஆனால் முதல் தேசிய பெண்கள் தினம் அமெரிக்காவில் பெப்ரவரி 28, 1909 -இல் கொண்டாடப்பட்டது.

1910இ-ல் பெண்கள் உரிமைக்காகவும், பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்று வலியுறுத்தியும் டென்மார்க்கின் கோபன்ஹேகனில் சர்வதேச சோஷலிஸ்ட் பெண்கள் மாநாடு நடைபெற்றது. இதில் 17 நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 பெண்கள் கலந்து கொண்டனர். பின்லாந்து பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த முதல் 3 பெண்களும் இதில் அடக்கம். இதில் சர்வதேச அளவில் பெண்கள் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. எனினும், திகதி எதுவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதன் விளைவாக உலக மகளிர் தினம் ஐரோப்பாவில் 1911, மார்ச் 19 அன்று முதன்முதலாக ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் கொண்டாடப்பட்டது. பல நாடுகளில் பெண்களை அடக்கி ஒடுக்கி உரிமைகளைக் பறித்து வேறு உயிரினங்களைப் போல பெண்களை அடிமைகளாக வைத்திருக்கவே இன்றும் பல நாடுகள் விரும்பிச் செயற்படுகின்றன. அரபு நாடுகள் சிலவற்றில் இன்றும் பெண்கள் கார் போன்ற வாகனங்கள் ஓட்டக்கூடாது, விரும்பிய தொழில் செய்யக்கூடாது, விரும்பியவரைத் திருமணம் செய்யக்கூடாது ஏன் கல்வியே கற்கக்கூடாது என்றும் வாக்குரிமை மறுக்கப்பட்டும் பல கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி பெண்களை இரண்டாம் தரப் பிரசைகள்போல நடாத்தப்படுவதும் வழிவந்த செயலாககவே இன்றும் இருந்து வருகின்றது.

பெண்களுக்கெதிரான உரிமை மறுப்பில் நாட்டுக்குநாடு வெவ்வேறு வடிவங்களில் சம உரிமை மறுக்கப்படும் நிலை இருந்து வருகின்றது. எத்தனையோ ஆர்பாட்டங்கள், போராட்டங்கள் நீண்டகாலமாக நடாத்தியும் இன்றும் உலகில் பல நாடுகளில் ஆண்-பெண் சமத்துவம், சம உரிமை நிலவவில்லை என்பது முக்கிய விடையமாகும். இப்படியாகப் பெண்களின் உரிமை மறுப்பில் அதை எதிர்த்துப் போராடிப் பல நாடுகளில் பெண்கள் வெற்றியும் எழுச்சியும் பெற்றிருப்பது பாராட்டுக்குரிய விடையமாகும். பல நாடுகளில் இப்பிரச்சனை இருந்துவந்தாலும் யேர்மனி பற்றிய சிறு பார்வையைச் செலுத்துவோம். -1918ம் ஆண்டு 1வது உலகப்போர் முடிவடைய 1919ம் ஆண்டில் சுமார் 17 மில்லியன் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

-1919-2-19ம் தேதிதான் முதன் முதலாகப் பெண்மணி SPD கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகத் தெரிவானார். அவரின் பெயர் (Marie Juchacz) -1931ம் ஆண்டுதான் பெண்களுக்கான தேர்தல் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. 1933 1945ம் ஆண்டுவரை பெண்கள் தேர்தலில் போட்டியிடலாம். ஆனால் அரச திணைக்களங்களில் வேலை செய்யக்கூடாது என்ற சட்டம் அமுலில் இருந்தது 1957ஆண்டளவில் 3.3 வீதமான பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார்கள். 1972 ஆண்டளவில் பெண்களின் வளர்ச்சியும் அரசியல் ஈடுபாடுகளும் அதிகளவு காணப்பட்டது. -1972 ஆண்டிற்குப்பின்பு ஆண் - பெண் வேறுபாடுகள் வெகுவாகக் குறைந்து காணப்பட்டன. -1980 ஆண்டளவில் புதிதாகக் தோற்றம் பெற்ற Grünen) பசுமைக்கட்சியில் பெருந்தொகையான பெண்கள் அங்கம் வகித்தனர். -1990 ஆண்டில் பெண்களின் முன்னேற்றம் பெரிதாகக் காணப்பட்டது. அரசியல் மற்றும் அரச துறைகளில் ஆண்களுக்குச் சரிசமமான தொகையினர் காணப்பட்டனர்.-2005 பெண்களின் அரசியல் வளர்ச்சியால் முதன் முதல் பெண் ஒருவர் Angela Merkel நாட்டின் அதி உயர் பதவியான கான்சிலராகத் தெரிவு செய்யப்பட்டார். -2013 மறுமலர்ச்சியால் பல பெண்கள் அரசியலிலும் உயர் பதவிகளிலும் ஆண்களுக்குச் சரிநிகராகப் பதவிகளில் அமர்ந்தனர்.

-2016 ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் 18 பெரு நகரங்கள் மற்றும் 56 சிறு நகரங்களில் பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு விகிதாசாரம் வளர்ச்சி கண்டது.

-2017 நடைபெற்ற தேர்தல்களில் 60 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் வெற்றிபெற்றுப் பல பதவிகளில் அமர்ந்தனர். -36.7%- 2009ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பிரதான ஆளும் கட்சியான CDU கட்சிக்கு 7.1 வீதம்பேர்தான் வாக்களித்தனர். ஆனால் 2013ம் ஆண்டுத் தேர்தலில் 36.7 வீதமான பெண்கள் இக்கட்சிக்கு வாக்களித்து விகிதாசாரத்தைக் கூட்டக்கொண்டனர். - Angela Merkel யேர்மனிய வரலாற்றின் முதல் பெண் கான்சிலர் 4 தடவைகள் இவர்தான் கான்சிலர். யேர்மனி மட்டுமல்ல உலகிலேயே அதகாரம் மிக்க பெண்மணிகளில் முதல்வராகத் திகழ்பவரும் இவர்தான்.

3 பெண்கள்....இன்று யேர்மனியின் அரசியல் வரலாற்றில் ஆட்சிசெய்பவர் பெண் (Angela Merkel) பிரதான பெரிய கட்சியான CDU கட்சியின் தலைவர் பெண் (Kramp-Karrenbauer) பிரதான ஆளும் கட்சியும் பழமையான கட்சியான SPD கட்சியின் தலைவரும் ஒரு பெண்தான். (Andrea Nahles) இப்படியே நாட்டை வழி நடத்துபவர்கள் பெண்களாகவே இருப்பது சிறப்பான அம்சமாகும். - யேர்மனிய இன்றைய அரசியலில் பெண்களின் பங்களிப்பு..

| ஆண்கள்- பெண்கள் | | |
|---|---|---|
| -கிராமிய பிரதேச சபைகளில் | 75வீதம் | 25வீதம் |
| -மாகாண பாராளுமன்றங்களில் | 70 “ | 30 “ |
| -மத்திய பாராளுமன்றத்தில் | 69 “ | 31 “ |



-பிரதான அரசியல் கட்சிகளில் அங்கங்வகிக்கும் பெண்களின் வீதத்தைப் பார்ப்போம்..Grüne - 40% Linke -36% SPD -33% CDU -26% FDP -22% CSU -21% A&D -17% பெண்கள் தினம் உலகம் முழுவதும் வருடாவருடம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டாலும் இலங்கை போன்ற பல நாடுகளில் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வருவது இயல்பாகவே நடந்து வருகின்றது. நோய் நொடிகள் ஒருபுறம் வாட்டி உயிர் எடுக்க பெண்கள் மீதான சீதனம், சாதியம், சமயம், பாலியல் கொடுமைகள், கொலைகள், வன்முறைகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. ஏன் சின்னஞ்சிறு பாலகர்கள்கூட இன்று வன் கொடுமைகளுக்கு உட்படுத்திக் கொலை செய்தலும் காணாமல் ஆக்கப்படுதலும் சர்வசாதாரணமாக நிகழ்ந்து வருகின்றன. சட்டத்தையும் ஒழுங்கையும் தண்டனைகளையும் உறுதிப்படுத்த வேண்டிய அரசுகளும் பாதுகாப்புத் துறையினரும் சில நாடுகளில் குற்றவாளிகளுக்குத் துணை போவதை நாம் கவலையுடன் நோக்க வேண்டும். இன்று பெருவாரியான பெண்களுக்கான வன்முறைகள் குடும்ப உறவுகளாலும் ஏன் பெண்களாலுமே நடந்தேறுகின்றன என்று ஐக்கியநாடுகள் சபையின் பெண்களுக்கான அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen





# வாழ்வின் அமைதி

நல்லவனாய் வாழ்ந்தாலும் நிம்மதியில்லை
கள்வனாக மாறினாலும் காண்பது தொல்லை
அல்லும் பகல் பாடுபட்டும் அமைதி என்பதில்லை
சொல்லப்போனால் துன்பந்தானே மனிதனின் எல்லை.
என்பது ஒரு பழைய சினிமாப்பாடல்.

**கோகிலா மகேந்திரன்**

மனிதனுடைய சராசரி வாழ்வுக்காலம் இன்று ஏறத்தாழ 80 வருடங்கள் ஆக உயர்ந்து விட்டது. மருத்துவ வளர்ச்சி கல்வி வளர்ச்சி விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் ஆகியன மனிதனை அதிக காலம் வாழ வைப்பதில் வெற்றி கண்டுள்ளன ஆனால் எத்தனை பேர் தங்களது வாழ்வுக்காலத்தின் பெரும் பகுதியை அமைதியாக, மகிழ்வாக, நிம்மதியாக வாழ்ந்து முடிக்கின்றார்கள் என்று பார்த்தால் அந்த எண்ணிக்கை வரவர அருகி வருகிறது. உலகம் முழுவதிலும் மனச்சோர்வின் நூற்று வீதம் அதிகரித்து வருகிறது. அடுத்த தசாப்த காலத்தில் மனச்சோர்வு தடிமன் போல மிக வேகமாகப் பரவும் ஆபத்து இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. (அது தொற்று நோய் இல்லாவிட்டாலும்) வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் இத்தகைய உள நலப்பிரச்சினைகள் கையாளக் கடினமானவையாகத்தான் இருக்கின்றன.

“நிம்மதியான வாழ்வு” என்பது தான் எதிர்காலத்தில் மனிதர்களின் இலக்காக ஆக வேண்டி இருக்கின்றது. வேறு என்னதான் இருந்தாலும் - செல்வம், கல்வி, வேறு வசதி வாய்ப்புக்கள் எல்லாம் இருந்தாலும் - அமைதி இல்லை என்றால் வாழ்வு வெறுமையாகி விடும். மற்றதெல்லாம் தேடியது, அமைதியும் சந்தோசமும் வரும், வரவேண்டும் என்பதற்காகத்தானே!

வாழ்வின் அமைதி, உளநலத்தோடு தொடர்புடையது என்பது தெளிவு. உளநலமும் மனஅமைதியும் ஒன்றுக்கொன்று நேர்விகித சமனானது என்றும் கூறலாம். உளநலம் திருப்தியாக அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஆரோக்கியமான நிறை உணவு, குடிப்பதற்கு சுத்தமான நீர், சுவாசிக்க மாசற்ற வளி, நிம்மதியான நித்திரை செய்ய ஒரு பாதுகாப்பான இடம் என்பவற்றோடு அன்புத்தேவையும் கணிப்புத்தேவையும் பூர்த்தியாக வேண்டும். மிகச் சுவையான விதம் விதமான உணவு, ஒரு கட்டிலில் தான் படுக்கமுடியும் என்றாலும் அதற்குப்பெரிய மாடி வீடு என்று எல்லாம் மனிதன் தேடிக்கொண்டு விடுகிறான் ஆனால் அன்புத்தேவையும் கணிப்புத்தேவையும் தான் அவனை சிக்கலில் தள்ளி விடுகின்றன. .கணிப்புத்தேவை பூர்த்தியாவது அவசியந் தான் அது அதிகார வேட்கை ஆகிவிடக்கூடாது. “என்னுடைய கருத்தே எப்போதும் இறுதியாக இருக்க வேண்டும்” “ நான் சொல்வதையே எப்போதும் மற்றவர்கள் செய்ய வேண்டும். ” என்று நினைத்து மற்றவர்களை புண்படுத்தி துன்புறுத்தி செயற்படுபவர்கள் ஒருபோதும் அமைதி பெறுவதில்லை.

மறுதலையாகத்தனக்குள் ஒரு விழுமியமும் ஒழுக்கப்பண்பும் கருணையும் நிறைந்த ஒரு மனிதரை உருவாக்கிக் கொண்டு அதனால் தனது சுய கணிப்பபை உண்மையாக உயர்த்திக்கொள்பவர்கள் அமைதியாக இருக்கிறார்கள் , இருப்பார்கள். தாம் ஏனைய பல மனிதர்களை விட மனிதத்துவத்தில் சிறந்தவர்கள் என்பது அவர்களுக்கு உண்மையாகவே தெரியும். அதைப்பிறர் சொல்ல வேண்டும் என்பது கூட அவசியமில்லை. அவர்களது அகமனம், ஆழ்மனம், மனச்சாட்சி ஆகியவை சொல்லும். காலப்போக்கில் உலகிற்கு அது புரியும். இல்லாவிட்டால் அப்துல்கலாமையும், அன்னை திரேசாவையும் உயர்ந்த மனிதர்கள் தான் என்று உலகம் ஒரே குரலில் ஒத்துக்கொள்ளுமா?

## நான் அது செய்தேன், இது செய்தேன்

வேறு பல மனிதர்களும் தான் “ நான் அது செய்தேன், இது செய்தேன் ” என்று மேடை மேடையாக வாய் கிழியக் கத்திக்கொண்டு திரிகிறார்கள். ஆனால் உலகம் அவ்வளவு விரைவில் எல்லோரையம் சான்றோர்கள் என்று ஏற்றுக்கொள்வதில்லை. சான்றாண்மையை நிலைநாட்ட பல தசாப்தங்கள் செல்லும். அப்படி இல்லை என்று ஆவதற்கு ஒரு நாள், ஒரு சம்பவம் போதும். ஆகவே தான் மன அமைதியை நிலைநாட்டுவது பலருக்கும் பெருத்த சவாலாக இருக்கிறது.  தமக்குள் மன அமைதியுடன் வாழ்பவர்கள் தாமாக யாருக்கும் புத்திமதி சொல்லப்போவதில்லை. ஆயினும் அவர்களிடம் ஆலோசனை கேட்க ஆயிரக்கணக்கானோர் காத்திருப்பார்கள். அவர்களது உள்ளார்ந்த அமைதியை வெளியிலிருந்து யாரும் குழப்ப முடியாது என்பதால் அவர்கள் பெரும்பாலான நேரத்தில் சந்தோசமாகவும் அமைதியுடனும் இருப்பார்கள்.

அமைதியுடன் இருப்பவர்களுக்கும் எல்லா மனித உணர்வுகளும் இருக்கும். கோபம், பயம். போன்ற மறை உணர்வுகள் இவர்களுக்கும் வரலாம். ஆயினும் அந்த உணர்வுகளை அவர்கள் மிக ஆரம்பத்திலேயே இனங்கண்டு கொள்வார்கள். அந்த உணர்வுகளைக் கையாளும் முறை இவர்களுக்குத் தெரிந்திருக்கும். தொழிற்படாநிலைக்கோபம் என்பது தமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு தருவது என்று இவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும் என்பதால், கோபத்தைக்காட்டி இவர்கள் மற்றவர்களை பயமுறுத்துவதில்லை. அந்தக்கோபம் தமது சொந்த இதயத்துடிப்பு வேகத்தையும், குருதி அமுக்கத்தையும் உயர்த்த வல்லது என்பதை இவர்கள் தெளிவாக அறிவர்.
வாழ்வின் அமைதியை வேண்டுபவர்கள் மற்றவர்களோடு உறவாடுகையில் வாக்குநேர்மை, செயல்நேர்மையைக் கடைப்பிடிப்பர். ஒப்புக்கொண்ட விடயத்தை ஒப்புக்கொண்ட வகையில் ஒப்புக்கொண்ட நேரத்தில் செய்து முடிப்பர். தங்களால் அது முடியாது எனக்கண்டால், அல்லது தாங்கள் அதைச் செய்ய விரும்பவில்லை என்றால் அதை அவ்வாறு நேர்மையாகக் குறிப்பிடுவர்.


கவலைகள் பெரும்பாலும் மற்றவர்களுடனான ஒப்பீட்டினால் வருவது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே நிம்மதியாக வாழ விரும்புபவர்கள் தங்களை யாருடனும் ஒப்பிடுவதில்லை. “எனது காலுக்குச் செருப்பில்லை என்று கவலைப்பட்டேன். தெருவில் கால்களே இல்லாத மனிதனைக்காணும் வரை ”(I had the blues I had no shoes; until upon the street I met a man with no feet) என்ற ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நாங்கள் எங்களை எங்களோடு ஒப்பிட்டுக்கொள்ளலாம். எங்கள் சுயவளர்ச்சி கண்டு மகிழலாம். நாங்கள் செய்யும் நல்ல செயல்களுக்குச் சுய பாராட்டும் பரிசும் கூட வழங்கிக்கொள்ளலாம். ஆனால் இன்னொருவரோடு நம்மை ஒருபோதும். ஒப்பிடவேண்டியதில்லை.
ஒரு கிராமத்தின் கோடியில் உள்ள மரத்தின் கீழ் முனிவர் ஒருவர் அமர்ந்திருக்கிறார். கிராம மக்கள் ஒவ்வொருநாளும் அவரைத் தேடி கூட்டம் கூட்டமாகப் போகிறார்கள். அந்த நாட்டின் அரசனிடம் அவ்வளவு மக்கள் கூட்டம் வருவதில்லை. அரசனுக்கு ஒரு வகையில் இது பொறாமையாக இருந்தது. அவன் அதை முனிவரிடமே கேட்டு விட எண்ணினான் ஒரு நாள் தானே முனிவர் அமர்ந்திருந்த மரத்தடிக்குச் சென்றான். “சுவாமி” என்றான். முனிவர் தியானம் கலைந்து கண்களைத் திறந்து பார்த்தார் “ஒரே ஒரு கேள்வி சுவாமி” என்றான் அரசன். “கேளப்பா” அவர் முகத்தில் சிறு புன்னகை! “என்னிடம் பெருமளவு செல்வம் இருக்கிறது, கல்வி இருக்கிறது. வீரம் இருக்கிறது. நினைத்தவுடன் எதையும் செய்யத்தக்க அதிகாரம் இருக்கிறது. இவை எதுவுமில்லாத அல்லது என்னை விட மிகக் குறைந்தளவிலுள்ள உங்களைத்தேடி .இவ்வளவு மக்கள் வருகிறார்கள். அந்த எண்ணிக்கையில் பாதி கூட என்னிடம் வரவில்லையே! ஏன்? ” முனிவரின் முகத்தில் மீண்டும் ஒரு சிறு புன்னகை. “நீ உன்னை என்னோடு ஒபபிடுகிறாய். நான் அப்படிச் செய்யவில்லை. அவ்வளவுதான் வேறுபாடு.” என்று கூறி விட்டு மறுபடியம் தியானத்தில் மூழ்கி விட்டார்.

தொடர்ச்சி 32 ம் பக்கம்








G.Vijay Home Designer
Sauber- Professionell - Pünktlich-Preiswert
web.www.vijay-home-designer.de
உங்கள் வீடுகளை
சிறப்பாக வடிவமைக்க நாடுங்கள்!
சிறந்ததொழில் தேர்ச்சிபெற்வர்களால்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
நேர்த்தியாகச் செய்து தரப்படும்.
Kleiststrasse 07
41844 Wegberg
Germany
e.mail:G.Vijay@outlook.de
Facebook:
Vijay Home Designe Gunaratnam
0176 7221 8466
Inh.: Gunaratnam Vijayakumar
Telefon: +49 176 72 21 84 66



# கண் புருவங்களின் பயன்பாடு என்ன?

## Dr.நிரோஷனின் அதிசய உலகம்

நண்பர்களே, நமக்குள் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த என்ன செய்வோம்? ஏதோ நமது வாயால் பேசி, குரல்களை எழுப்பி, சைகைகளைக் கொண்டு, கோபம், அன்பு, ஆனந்தம், துக்கம், பயம், ஆச்சரியம், வெட்கம் போன்ற பலவிதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்துவோம். அது சரி தானே? ஆனால் இந்த அனைத்து உணர்ச்சிகளையும் வெளிக்கொண்டு வர, இன்னும் ஒரு மிக மிக முக்கிய பங்களிப்பை எது செய்கிறது தெரியுமா? அது வேறு ஒன்றுமே இல்லை, நமது புருவங்கள் தான்!

நமக்கு முன் நிற்கும் ஒருவர் நம் மீது கோபமாக இருக்கிறார் என்பதை அவரின் கண் புருவங்கள் கீழ் நோக்கி இருப்பதை வைத்தே எளிதாகக் கண்டறிந்துவிட முடியும். அதேபோல் எதையாவது ஆச்சரியமாகப் பார்த்தால், நமது புருவங்கள் தானாக மேலே ஏறிவிடும். இப்படி நம்மை அறியாமலேயே நமது புருவங்கள் நமது செயல்பாடுகளை உலகிற்குக் காட்டிக்கொண்டே இருக்கும். ஆனால், உங்களிடம் ஒன்று கேட்கவா? இப்படி நம்மைக் காட்டிக் கொடுக்கும் இந்தப் புருவங்களின் உண்மையான பயன்பாடு என்ன? இயற்கையில் காணப்படும் அனைத்திற்கும் ஏதாவது ஒரு காரணம் இருந்தே தீரும். அதற்கு இதுவும் கூட ஒரு உதாரணமாக இருக்கிறது. மனிதர்களுக்குக் கண் புருவம் இருப்பது ஒரு பாதுகாப்பிற்குத் தான். சரி சரி, நீங்கள் எல்லோருமே கேட்கும் கேள்வி எனக்குப் புரிகிறது. இந்தக் கண் புருவங்கள் அப்படி எதைத் தான் பாதுகாக்கின்றது என்றும் எந்த ஆபத்திலிருந்து பாதுகாக்கின்றது என்றும் தானே கேட்கிறீர்கள். எல்லாம் நமது கண்களைப் பாதுகாப்பது தான் நமது புருவங்களின் வேலையே.

உதாரணமாக நீங்கள் வேகமாக ஓடுகின்றீர்கள் என்று எடுத்துக்கொள்வோம். அப்படி ஓடும் போது அதிகப்படியான வியர்வை வந்து உங்கள் நெற்றியிலிருந்து கீழ் நோக்கி வழிகின்றது. அப்படி வழியும் வியர்வை, நமது கண்களுக்குள் செல்லாமல் தடுப்பது நமது புருவங்கள் தான். அதே போல் தான் மழையில் நாம் நனைந்தாலும் நமது கண்களைப் பாதிக்காமல் மழைத் துளிகளைக் கண்களுக்கு அருகே வழியும் படி செய்வதும் அதே புருவங்கள் தான். ஏனென்றால், அதன் வடிவமைப்பின் காரணத்தால் தலையிலிருந்து வியர்வையோ அல்லது நீரோ கண்களை நோக்கி வந்தால் அவற்றை நமது கண்களை நெருங்க விடாமல் கன்னத்திற்குக் கொண்டு செல்வது நமது புருவங்களின் முக்கிய வேலை ஆகும்.

சரி, கண் புருவங்களின் பயன்பாடு உங்கள் எல்லோருக்கும் இப்பொழுது புரிந்து இருக்கும், ஆனால் சும்மா ஒரு கற்பனைக்கு இதைச் சிந்தித்துப் பார்ப்போம். ஒருவேளை நமக்குக் கண் புருவங்கள் இல்லை என்று எடுத்துக் கொள்வோம். அப்படி என்றால், இயற்கை அதற்கு என்ன வழி பண்ணி இருக்கும் தெரியுமா? சில ஆராய்ச்சியாளர்களின் கணிப்புப் படி, நமக்குக் கண் புருவங்கள் இல்லாமல் இருந்தால், அதிகப்படியான கண்ணிமை முடிகளின் வளர்ச்சி இருந்து இருக்கும் அல்லது நமது நெற்றி முன்னோக்கி வளர்ந்து நமது கண்களைப் பாதுகாத்திருக்கும் என்று சொல்கிறார்கள்.

சரி நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள்? இயற்கையின் படைப்புக்குப் பின்னால் ஏதாவது ஒரு புத்திசாலித்தனமான காரணம் இருக்கும் என்பதற்கு நமது கண் புருவங்களே ஒரு உதாரணம் ஆகும், இல்லையா? இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இதற்குரிய பதிலை மட்டுமில்லாமல், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh

## வாழ்வின் அமைதி 31 ம் பக்கத் தொடர்ச்சி....

“சந்தோசமும் அமைதியும் கடையில் விற்கப்படும் சரக்குகளல்ல- விலை கொடுத்து வாங்குவதற்கு. அவை எமது மனதுக்குள்ளே இருந்து வருகபவை.” என்று தெரிந்தவர்கள் தங்களை யாருடனும் ஒப்பிடுவதில்லை ஒப்பிட விரும்புவதுமில்லை. எமது மகிழ்வுக்கும் எமது உடலில் சுரக்கப்படும் ” செறரோனின்” (Seratonin) என்ற நரம்பிணைப்புப் பதார்த்தத்திற்கும் தொடர்பிருக்கிறது என்று உளவியல் விஞ்ஞானம் கூறும். போதிய உடற்பயிற்சி செய்பவர்கள், தளர்வுப்பயிற்சிகள் செய்பவர்கள், யோகாவில் ஈடுபடுபவர்கள், தமது எண்ணங்களை முடிந்த வரை நேரானவையாக வைத்திருப்பவர்கள் தமது செறரோனின் அளவைக் கூட்டிக்கொள்கிறார்கள். தம்மைச்சூழவுள்ள விடயங்களை நிறையவே இரசிப்பவர்களும். வாழ்வில் நன்றி சொல்வதற்கு நிறைய விடயங்களும் நிறைய மனிதர்களும் இருப்பதாக நினைப்பவர்களும் கூட அதை செய்து கொள்கிறார்கள். தாம் செய்யும் விடயம் எதுவாக இருந்தாலும் அதை முழுமனதுடன் இரசித்து விரும்பிச் செய்பவர்கள் மகிழ்வாக இருப்பதற்கு இதுவே காரணம்.


மற்றைய மனிதர்களை அன்பு செய்வதும் மகிழ்வாகவும் அமைதியாகவும் இருப்பதற்கான சிறந்த வழியாகும். ஊலகம். முழுவதும் இன்று தனிநபர் வாதம் நிறைந்த சுயநலப் போக்கை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது (Individualization). கடிதங்களும் மின்னஞ்சல்களும் “அன்புள்ள” என்று தொடங்கினாலும் அன்பு என்பதன் அர்த்தம் புரிந்து கொள்ளப்படுகிறதா? என்று தெரியவில்லை. ஒருவரது வளர்ச்சி, விருத்தி, மகிழ்ச்சி ஆகியவை மற்றொருவருக்கு அவசியமாகும் நிலை தான் அன்பு. “அன்புதான் வாழ்வு அதுதான் வாழ்வின் ஒரே ஒரு சட்டம். இன்றும் என்றும் அது உண்மையானது ” என்றார் சுவாமி விவேகானந்தர். சுயநலம் என்பது இறப்புக்கு ஒப்பானது என்பதைப் புரிந்த கொள்ளாமல் மனிதர்கள் மேலும் மேலும் சுயநலம் மிக்கவர்களாக மாறி வருகிறார்கள்.

எந்த பிரதி பலனும் எதிர் பாராமல் மற்றவர் மீது நாம் அன்பு செலுத்தும் போது அது எம்மை நோக்கி ஏதோ ஒரு வகையில் திரும்பி வரும். இந்த உலகத்தினூடு நாம் ஒரு முறைதான் பயணம் செய்யப்போகிறோம். (பிறகு என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது). ஆகவே அந்தச் சிறு காலப்பகுதியில் விரக்தி உள்ள இடத்தில் நம்பிக்கையையும் இருள் உள்ள இடத்தில் ஒளியையும் மருள் உள்ள இடத்தில் மகிழ்வையும் உண்டாக்க முயல்வோம். விளக்கு ஒளியைத் தருமா தராதா என்று விவாதிப்பதை நிறுத்தி-விட்டு ஒரு சிறு அகல் விளக்கையாவது ஏற்றுவோம்.

**நன்றி:**
**மகாஜனா பழையமாணவர் சங்கம் - பிரான்ஸ் வெளியிட்ட வெள்ளிவிழா மலரான “வெளிச்சம்“ (2016) இதழிலிருந்து..**





# திருமந்திரமும் வாழ்வியலும் 48

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## அட்டமா சித்தி (எட்டு வகைச் சித்திகள்) - (பாகம் 3)

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான பிராத்தி (மண்ணில் இருந்துகொண்டு விண்ணைத் தொடும் சித்தி) பற்றிய திருமந்திரப் பாடல் எண் 679

"நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படைஅவை எல்லாம்
கொண்டவை ஓராண்டு கூட இருந்திடில்
விண்டதுவே நல்ல பிராத்தி அதாகுமே"

யோகப் பயிற்சியால், உலகத் தத்துவ ஞானங்களுக்கெல்லாம் தலைவியாகிய பராசக்தியுடன் உள்ளமும் உணர்வும் ஒடுங்கி நின்றன. ஐம்பூதங்களும், மற்ற வெளி அண்டப் பொருட்கள் எல்லாமுங் கூட அகக் கண்ணுக்குத் தெரியவந்தன. இப்படி அகக் காட்சி கண்ட நிலையிலேயே ஓராண்டுகூட இருந்தால், அணிமா, இலகிமா, மகிமா சித்திகள் கைவந்தபிறகு கூட ஓராண்டுகாலம் முயன்றால், அடையப் பெறுவது பிராந்தி (மண்ணில் இருந்துகொண்டே விண்ணைத் தொடுகின்ற வித்தை) என்னும் சித்தியாகும்.

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான பிராகாமியம் (எங்கும் நிறைந்திருக்கும் சித்தி) பற்றிய பாடல் எண் 683
"ஆன விளக்கொளி ஆவது அறிகிலார்
மூல விளக்கொளி முன்னே உடையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடுஎளி தாநின்றே"

உள்ளத்தினுள்ளே ஒளிச் சுடராய்ச் சோதி ஒன்று உள்ளது. இதை மூலாதாரத்தில் மூலக் கனலை உடையவர்கள், இந்த மூலாக்கினியே ஆன விளக்கொளியாவதை தவப்பயிற்சி இன்மையால், அறியமாட்டார்கள். ஆனால் யோகத்தால் இரு புருவ மத்தியில் ஒலியோடு இயங்கும் ஒளி உதயம் உணரப் பெற்றவர்கள் கண்டு கொள்வார்கள். இவர்களுக்கு விண்ணுலகத்துத் தேவர்களுக்கு மேலான சிவப்பரம் பொருளின் திருவடி ஒளியாகிய மோட்ச இன்பம் மிக எளிதாகக் கிட்டும். அதாவது பிரகாமியம் (எங்கும் நிறைந்திருக்கும் சித்தி) கிட்டும்.

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான ஈசத்துவம் (ஆக்குதல் அழித்தல், அருளல் ஆகிய பரம்பொருளின் ஆற்றலைத் தரும் சித்தி) பற்றிய பாடல் எண் 684
"நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படைஅவை எல்லாம்
கொண்டவை ஓர்ஆண்டு கூடி இருந்திடில்
பண்டைய ஈசன் தத்துவம் ஆகுமே"

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களிலும் நின்று நிலைத்திருக்கும் சதாசிவமாகிய பரம்பொருள் துணையால், காணுதல், கேட்டல், உண்ணல், உணர்தல், நுகர்தல் என்னும் ஐம்புலன்களின் இச்சையும் அடங்க அடக்கித், தவயோகத்தில் அணிமா முதலான ஆறு சித்திகளும் பெற்ற நிலையில், மேலும் ஓர் ஆண்டு உள்ளம் ஒன்றத் தவயோகம் செய்தால், உலகைப் படைத்த பழம்பெரும் மூலப் பொருளான பரமன் தத்துவ நிலை எய்தல் ஈசத்துவம் (ஆக்குதல் அழித்தல், அருளல் ஆகிய பரம்பொருளின் ஆற்றலைத் தரும் சித்தி) ஆகும்.
சந்திரனைப் போல் தெய்வ நிலை பெறலாம் எனக் கூறும் பாடல் எண் 685
"ஆகின்ற சந்திரன் தன்ஒளி யாய்அவன்
ஆகின்ற சந்திரன் தட்பமும் ஆயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தான்அவன் ஆமே"

வளரும் பிறை நிலவைப் போன்ற நெற்றியில் புருவ நடுவில் ஒளி காணப் பெறுபவன், சந்திரனைப் போலவே குளிர்ச்சி உடையவனாகவும் இருப்பான். சந்திரன் வளர்வது போல் புருவ நடுவில் ஒளியைக் காணும் சித்தியை மேலும் முயன்று வளர்த்துக் கொண்டவன், தானே ஒரு சந்திரனைப் போலத் தெய்வ நிலை பெறலாம்.
ஈசத்துவ சித்தி பெற்றவரின் வல்லமை பற்றிக் கூறும் பாடல் எண் 686
"தானே படைத்திட வல்லவன் ஆயிடும்
தானே அளித்திட வல்லவன் ஆயிடும்
தானே சங்காரத் தலைவனும் ஆயிடும்
தானே இவன்எனும் தன்மையன் ஆமே"

ஈசத்துவ சித்தி பெற்றவன் தானே எல்லாவற்றையும் படைக்கும் வல்லமை பெற்றவனாயிடுவான். தானே படைத்த உயிர்களைக் காக்கவும் திறமை உடையவனாயிடுவான். அவனே அழிக்கும் ஆற்றல் உடையவனுமாவான். இவன் படைத்து, காத்து, அழிக்கும் பரம்பொருள் ஆற்றலைப் பெற்றவனாகவும் ஆவான்.
தெய்வ தரிசனம் தேடி வரும் எனக் கூறும் பாடல் எண் 687
"தண்மைய தாகத் தழைத்த கலையின்உள்
பன்மைய தாகப் பரந்தஐம் பூதத்தை
வன்மைய தாக மறித்திடில் ஓராண்டின்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே"

குளிர்ச்சி உடையதாகப், பரந்து விரியும் சந்திர கலையில், பலவாகப் பிரிந்த ஐம்பொறிகளையும், அடக்கி ஒருமுகப்படுத்தி மனம் ஒன்றி இருந்தால், ஓராண்டு காலத்தில் மேலான பரம்பொருள்காட்சி தெளிவாகும்.
எட்டுவகைச் சித்திகளில் மிகவும் மேலான ஒன்றான வசித்துவம் என்னும் சித்தி பற்றிய பாடல் எண் 688

"மெய்ப்பொரு ளாக விளைந்தது ஏதெனில்
நற்பொரு ளாகிய நல்ல வசித்துவம்
கைப் பொருளாகக் கலந்த உயிர்க்கெல்லாம்
தற்பொரு ளாகிய தன்மையன் ஆகுமே"

உண்மையான ஞானமாக உள்ளத்தில் உண்டான செல்வம் எது என்றால், அது மேலான செல்வமான "வசித்துவம்" (எல்லாவற்றையும் தன்பால் ஈர்த்து வசியப்படுத்தும் சக்தி) என்ற சித்தியே. இந்தச் சித்தி கைமேல் இருக்கின்ற உடனடியாகப் பயன்படுத்த உதவுகின்ற செல்வமாக, உயிர்க் குலத்துக்கெல்லாம் தான் விரும்பியபடி இயக்கக் கூடிய பரம்பொருளைப் பொன்ற மேலான ஒரு நிலையைத் தருகிற அரிய பெரிய செல்வமாகும்

தொடரும்

### ஆலயங்களின் கவனத்திற்கு

### சமயகுரவர்கள் குரு பூசை



பாடுவது தேவாரம்
திருவாசகம்
ஆனால்
இவர்களை
மறந்துவிட்டோம்.
இந் நிலை நீடித்தால்
**காணமல்**
**போனவர்கள்**
பட்டியலில்
இவர்களும்
வந்துவிடுவார்கள்

சமயகுரவர்கள் குரு பூசை

1. திருநாவுக்கரசு நாயனார் :- சித்திரை மாதம் சதய நட்சத்திரம்
2. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் :- வைகாசி மாதம் மூல நட்சத்திரம்
3. மாணிக்கவாசக சுவாமிகள் :- ஆனி மாதம் மக நட்சத்திரம்
4. சுந்தரமூர்த்தி நாயனார் :- ஆடி மாதம் சுவாதி நட்சத்திரம்







மூன்று ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு...
SALE
16.03 - 04.04
தரமான ஆடைகள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
எம்மிடம் தங்க நகைகளும் பெற்றுக்கொள்ளலாம்
Sari 1
20 - 50%
Taunusstr. 49, 60329 Frankfurt am Main 0152 1923 9663 opening hours: Mon-Sat 10.00 am - 20.00 pm https://www.facebook.com/sari1fashionhouse


Frankfurt நகரில்...
Frankfurt (Main) Hauptbahnhof முன்பாக 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது
New ASIA LAND
மளிகைப்பொருட்கள் மற்றும்,மரக்கறி, கடலுணவுப்பொருட்கள் அனைத்தும் என்றும் சிறந்த விலைக் கழிவில்
Tel:069 23 35 35 Fax:069 24009760
TAUNUSSTRASSE 49
60329 FRANKFURT






சந்திரவதனா

புலம்பெயர் வாழ்வில் வேலைக்குப் போகும் பெண்களையும், வேலைக்குப் போகாதிருக்கும் பெண்களையும் பார்ப்போ மேயானால் இரு பகுதியினரது வாழ்வும் ஏதோ ஒரு வகையில் கடினமானதாகவே இருக்கிறது.
இன்றைய பெண்களுக்கு இந்த வாழ்க்கை ஒரு சவாலாகவே அமைந்துள்ளது. குடும்பம் என்ற புனிதமான கோவிலில் குழப்பங்கள் ஏற்பட்டு விடாமல்,கணவன், மனைவி என்ற உறவில் எந்த விரிசல்களும் ஏற்பட்டு விடாமல், விடுதலைப் பாதையை நோக்கி வெற்றிநடை போட வேண்டிய ஒரு கட்டாயம் இன்றைய பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டா யத்தை பெரும்பாலான பெண்கள் தாமாகவேதான் விரும்பி தமக்காக எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

இங்கே முக்கியமாகக் கவனிக்கப் பட வேண்டியது என்னவென்றால், ஆண்களைப் பொறுத்த மட்டில் பெண்களின் இந்த விழிப்புணர்ச்சி, அல்லது மாற்றம் அவர்களிடம் சற்று அச்சத்தையே ஏற்படுத்தியுள்ளது. அச்சப்பட்டவர்களை அப் படியே விட்டுவிட்டு, தம்பாட்டில் போய் விடாது, தம்மோடு அவர்களையும் இழுத்துச் செல்ல வேண்டிய கட்டாயமும் இன்றைய பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பெண்களுக்குள்ளும் ஆண்களைப் போலவே ஆசை, பாசம், கோபம், நேசம்.. போன்ற எல்லா உணர்வுகளும் இருக்கின்றதென்பதை ஆண்களுக்குப் புரிய வைத்து, பெண்கள் அடிமைத் தனத்தையோ, அடக்கு முறையையோ விரும்பவில்லை, தாம் தாமாகவே வாழ விரும்புகிறார்கள் என்பதை உணர வைத்து, குடும்பத்தைக் குலைய விடாது காக்க வேண்டிய பாரிய பொறுப்பும் விடுதலைப் பாதையை நோக்கி நடக்கின்ற இன்றைய பெண்களுக்கு உள்ளது. பெண்விடுதலையின் சரியான பரிமாணத்தை உணர்ந்த பெண்கள், இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, ஒரு முன்னேற்பாடுடனேயே விடுதலையை நோக்கி நடக்கத் தொடங்கியுள்ளார்கள்.
இந்த விடுதலைப் பாதையின் முதற் படியில் இருப்பது, பெண்கள் தாம் தமது காலில் நிற்பதற்கு ஏதுவான சுய சம்பாத்தியம். அதாவது பெண்கள் தாம் தமக்கெனச் சம்பாதிக்க வேண்டும். இன்றைய பெண்களில் அனேகமானோர் இந்த சூட்சுமத்தைப் புரிந்து வேலைக்குப் போகத் தொடங்கி விட்டார்கள். ஆனாலும் அத்தோடு அவர்களது கஷ்டங்களும், பிரச்சனைகளும் தீர்ந்து விடவில்லை.
வேலைக்குப் போகும் பெண்கள் நிறையவே கஸ்டப் படுகிறார்கள். காரணம் ஆண்கள் சமூகம் இன்னும் பெண்களின் விடுதலைப் பாதையை நோக்கிய இந்த பயணத்தைச் சரியான முறையில் ஏற்றுக் கொள்ளவில்லை.

**"யாரோடை போட்டு வாறாய்? எங்கை இவ்வளவு நேரமும் போனனி?**

ஆண்கள் எந்த நேரம் வேலைக்குப் போய் எந்த நேரம் வீடு திரும்பினாலும், அவர்கள் களைத்து வந்திருக்கிறார்கள் என்ற அனுசரணையோடு பெண்களால் கவனிக்கப் படுவார்கள். இதுவே பெண் வேலைக்குப் போகும் போது அவள் எந்த நேரத்தில் வேலைக்குப் போய் எந்த நேரத்தில் வீடு திரும்ப வேண்டும் என்பது ஆண்களால்தான் தீர்மானிக்கப் படுகிறது. தப்பித்தவறி ஒரு பெண் வீடு திரும்பும் நேரம் சற்றுத் தாமதமானாலும் போதும்... ஏன் தாமதம் என்பதற்கான காரணம் ஆனால் அது கணவனாக இருந்தாலும் சரி, தந்தையாக இருந்தாலும் சரி, சகோதரனாக இருந்தாலும் சரி சந்தேகக் கண்களுடனேயே பார்க்கப்படுகிறது. "யாரோடை போட்டு வாறாய்? எங்கை இவ்வளவு நேரமும் போனனி? என்பது மாதிரியான மனசை விளாசும் கேள்விகளாலேயே அவள் வீட்டுக்குள் வரவேற்கப்படுகிறாள். அவள் கூடிய வேலையால் களைத்துப் போயிருப்பாளே என்ற அனுசரணை காட்டப்படா விட்டாலும் பரவாயில்லை. வேலை செய்து விட்டுத்தான் வருகிறாள் என்ற நம்பிக்கை கூட அனேகமான பொழுதுகளில் அவர்களிடம் இருப்பதில்லை.

பெண்கள் வேலைக்குப் போகத் தொடங்கியதால் ஆண்களின் வாழ்க்கை சற்றுச் சுலபமாகியுள்ளது. அவர்கள் தனியாகச் சுமந்த குடும்பத்தின் பணத்தேவையை, இப்போது வேலைக்குப் போகும் பெண்களும் பங்கு போட்டுச் சுமக்கிறார்கள். அதே நேரம் வீட்டிலுள்ள மற்றைய வேலைகளையும் பெண்களே தனியாகச் சுமக்கிறார்கள். பெரும்பான்மையான ஆண்கள் அதைப் பங்கு போடத் தவறி விடுகிறார்கள். ஆணும், பெண்ணும் வேலைக்குப் போய் வருகையில், ஆண் வந்து கதிரைக்குள் இருந்து தொலைக்காட்சி பார்ப்பதுவும், பெண் வந்து கால் வலிக்க, கை வலிக்க வீட்டு வேலைகளைத் தொடர்வதுவும் ஒவ்வொரு வீட்டிலும் இன்னும் நடந்து கொண்டுதானிருக்கிறது.

ஆதிகாலத்தில் வேட்டைக்குப் போன ஆண்கள் வீட்டுக்கு வந்ததும் நெருப்பைக் கொழுத்தி விட்டு அதன் முன் இருந்து குளிர் காய்வார்கள். அந்த நேரத்தில் அவர்கள் யாருடனும் பெரியளவாகப் பேச மாட்டார்கள். மௌனமாக இருந்து தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்வார்கள். அதன் தாக்கம்தான் இன்றும் தொடர்வதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

சில ஆண்கள் வீட்டு வேலைகளில் ஏதாவதொன்றைச் செய்வார்கள். அதாவது ஒரு ஆணால் சமைக்க முடியும். இன்னொருவரால் அயர்ண் பண்ண முடியும். இன்னொருவரால் வீட்டைத் துப்பரவாக்க முடியும். ஆனால் பெரும்பாலான ஆண்களால் வீட்டின் முழுவேலைகளையும் ஒரு பெண்ணைப் போல பொறுப்பேற்றுச் செய்யத் தெரிவதில்லை. அல்லது முடிவதில்லை. இதனால் வேலைக்குப் போகும் பெண் நிறையவே கஸ்டப்படுகிறாள்.

சில சமயங்களில் நேரமின்மை காரணமாக பிள்ளைகளைச் சரிவரக் கவனிக்க முடியாமல் கூடத் திண்டாடுகிறாள். கவலைப்படுகிறாள்.
இந்த நிலையிலும் கூட பிள்ளை ஒரு தவறு செய்யும் போது, "நீ பிள்ளையைச் சரியாகக் கவனிக்கிறாயில்லை." என்று கணவனிடம் திட்டும் வாங்குகிறாள்.

தொடர்ச்சி 36ம் பக்கம்



35 பக்கத் தொடர்ச்சி ..

## புலம்பெயர் வாழ்வில் வேலையும் பெண்களும்



ஒரு கணவனும் தந்தையாக நின்று, பிள்ளையைக் கவனிக்கலாம்தானே. அப்படி நடப்பது மிகமிகக் குறைவு. ஏனெனில் இதெல்லாம் பெண்களின் வேலையாகவே கருதப்படுகின்றன. அது இன்று பெண் வெளியில் வேலைக்குப் போகும் போதும் மாறி விடவில்லை.

வேலைக்குப் போகும் பெண்களின் நிலை இப்படியாக இரட்டைச் சுமையைத் தலையில் தூக்கி வைத்ததற்குச் சமனாயிருக்கும் போது, வேலைக்குப் போகாத பெண்களின் நிலை வேறு விதமான பரிதாபத்தை உணர்த்துகிறது. அவர்களின் வீட்டு வேலைகள் ஒரு வேலையாகக் கணிக்கப்படுவதே இல்லை.
அனேகமான சமயங்களில் ”உன்ரை மனைவி என்ன செய்கிறாள்..?” என்று கணவனை யாராவது கேட்டால்.. ”அவ சும்மாதான் இருக்கிறா” என்பதே வேலைக்குப் போகாத பெண்களின் கணவன்மார்களின் பதிலாக இருக்கிறது.

இந்த அளவில்தான் பெண்களின் வீட்டு வேலைகள் கணிக்கப் படுகின்றன. அவர்கள் சிறிதளவு பணத்தேவைக்கும் கணவனை எதிர் பார்ப்பவர்களாகவே இருக்கிறார்கள். அனேகமான சந்தர்ப்பங்களில் ”உனக்கென்ன தெரியும். நீ சும்மாதானே வீட்டிலை இருக்கிறாய். நான் எவ்வளவு கஸ்டப்பட்டு முறிஞ்சு வேலை செய்திட்டு வாறன்” என்று சொல்லிக் கணவன்மாரால் உதாசீனப் படுத்தப்படுகிறார்கள்.

வீட்டிலுள்ள சகல வேலை களையும் செய்வது மட்டுமல்லாது ”எதுவுமே செய்வதில்லை” என்ற குற்றச் சாட்டையும் கணவனிடமிருந்து அடிக்கடி பெற்றுக் கொள்கிறார்கள். இதனால் வேலைக்குச் செல்லாத பெரும்பான்மையான புலம்பெயர் பெண்கள் பாரிய உளவியல் தாக்கத்துக்கும் உள்ளாகிறார்கள்.

அவர்களது வாழ்க்கை சமையல், வீட்டுவேலை, கணவனுக்குப் பணிவிடை.. என்றே போய் விடுகிறது. அனேகமான குடும்பங்களில் கணவன்மார்கள் ”நான் உழைக்கிறேன். எனது பணம்.” என்ற ஒரு திமிருடன்தான் இருக்கிறார்கள்.

தமது மனைவியரைச் சற்றுத் தாழ்ந்தவர்களாகவே கருதி, மனைவியரின் மனங்களிலும் ”நீ தாழ்ந்தவள். எனது பணத்தில்தானே நீ வாழ்கிறாய். நான் எவ்வளவு வேலை செய்து விட்டு வருகிறேன். நீ சும்மா வீட்டில் இருந்து எனது பணத்தில்தானே சாப்பிடுகிறாய்” என்பது போன்றதான கருத்துக்களை விதைக்கிறார்கள்.

மிகச் சிறுபான்மையான ஆண்கள் மட்டுமே மனைவியரை மனைவியராக, உணர்வுள்ள ஜென்மங்களாக மதித்து, வீட்டு வேலைகளை வேலையாகக் கணித்து உதவுகிறார்கள்.

மொத்தத்தில் வேலைக்குப் போகும் பெண்களும் சரி, வீட்டில் இருக்கும் பெண்களும் சரி ஏதோ ஒரு வகையில் கஸ்டங்களையே சுமக்கிறார்கள்.

ஆனாலும் வெளிவேலை, வீட்டுவேலை இரண்டினாலுமான அதீத சுமைகளின் மத்தியிலும் வேலைக்குப் போகும் பெண்கள் வெளி உலகத்துடனான தொடர்பு, நானும் உழைக்கிறேன் என்ற மனநிறைவு போன்றதான விடயங்களால் நான், எனது பணம் என்று கர்வம் கொள்ளும் கணவர்களிடமிருந்து விடுதலை பெற்ற உணர்வைப் பெற்று, ஒரு வித தன்னம்பிக்கையுடனேயே வாழ்கிறார்கள்.

வேலைக்குப் போகாத பெண்களோ தாழ்வு மனப்பான்மை நிறைந்த உளவியல் தாக்கத்தினால் தன்னம்பிக்கை இழந்து ஒரு வித தனிமைச் சிறையில் வாழ்கிறார்கள்.

நன்றி: Manaosai

## சின்னத்திரை நாடகங்களால், அபத்தமாகும் பெண்ணினம்!

25 ம் பக்கத் தொடர்ச்சி

முதிய பெண்களின்மேல் தவறான அவிப்பிராயத்தை பரப்பிக்கொண்டே இருக்கிறது. சின்னத்திரையில் உள்ளதுபோல் எந்த மாமியாரோ, சித்தியோ இல்லாவிடினும், அவர்கள் மேல் சீற்றம் சமுதாயத்திற்குள் தேங்கி நிற்கிறது.

அன்றிலிருந்து இன்றுவரை ஒரே விதமான கதாப்பாத்திரங்களே உருவகிகப்பட்டு வருகின்றன.

இறுதியில் தயாரிப்பாளர்களுக்கு தேவையானது பார்வையாளர்கள் எண்ணிக்கையே தவிர, கதையின் கருத்து அல்ல. அதைவிட, மூன்று மணிநேரம் செல்லும் திரைப்படத்தில் பரப்பரான காட்சிகளுக்கிடையே, நகைச்சுவையான, மெல்லியதான காட்சிகள் வந்து ஆறுதற்படுத்தும். 25 நிமிடச்சின்னதிரையில் எத்தனையோ பரபரப்பை குறுகிய இடைவெளியில் அடக்கும் கட்டாயத்தில் இயக்குனர்கள் உள்ளனர். இங்கே தாயினது கதாப்பாத்திரம் பார்ப்போரிற்கு பரபரப்பையும் சங்கடத்தையும் ஏற்படுத்த மிக உகந்த கதாப்பாத்திரமாக இருப்பதால், அவளைவைத்தே தொடரின் ஈர்ப்பை நிச்சயப்படுத்துகின்றனர். மொத்தத்தில் எப்படியிருந்தாலும் பொழுதுபோக்கு உற்பத்திக்கு வணிகமதிப்பே அவசியம், அங்கே பெண்ணியத்திற்கு இடமில்லை. பெண்ணினத்திற்க்கும் மதிப்பில்லை.




# இயக்குநர் சிகரம்
# கே.பாலசந்தர்
## வாழ்வும் படைப்பும்



### அரங்கேற்றம்

வெற்றி மைந்தன்

1972ம் ஆண்டு பாலசந்தர் இரண்டு தமிழ்ப் படங்களை இயக்கினார். இரண்டு திரைப்படங்களிலும் ஜெமினி கணேசன் தான் ஹீரோ. ஒரு படம் வெள்ளி விழா, இன்னொன்று கண்ணா நலமா.

வெள்ளி விழா திரைப்படத்தில் ஜெமினிகணேசனுடன் ஜெயந்தி, வாணிஸ்ரீ எஸ்.வரலக்ஷ்மி, வி.கோபாலகிருஷ்ணன் மற்றும் பலர் நடித்திருந்தனர். வி.குமார் இசையமைத்திருந்தார்.

இன்னொரு திரைப்படம் கண்ணா நலமா. அந்தப் படத்தில் கமலஹாசனும், பாலசந்தரும் இரண்டாவது முறையாக இணைந்தனர். ஆனாலும் பின்னர் தசாவதாரம் காட்டி, விஸ்வரூபம் எடுக்கப் போகும் நடிகர் என்பதற்கான சுவடுகள் பெரிதாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

கண்ணா நலமா கமலஹாசனுக்கு பதினொன்றாவது படம். அதற்கு முன் அன்னை வேளாங்கன்னியில் இயேசுவாக நடித்திருந்தார். குறத்தி மகன் திரைப்படத்தில் ஹீரோவின் நண்பனாக நடித்திருந்தார்.

கண்ணா நலமா திரைப்படத்துக்குப் பிறகு பாலசந்தர் கமலஹாசன் நட்பு நெருக்கடையத் துவங்கியது.

அடுத்த ஆண்டு பாலசந்தர் கமலஹாசனுக்கு முக்கியமான கதாபாத்திரம் ஒன்றைக்கொடுத்து எடுத்த படம் அரங்கேற்றம். அந்தப் படம் பின்னர் ஆய்னா எனும் பெயரில் இந்தி பேசியது.

கமலஹாசனின் முதல் இந்திப் பிரவேசம் அந்தத் திரைப்படம் தான்.

பெரிய சலசலப்பையும், விமர்சனத்தையும், எதிர்ப்புகளையும் சம்பாதித்த படம் அரங்கேற்றம். பாலசந்தர் எனும் ஆளுமையின் இன்னொரு முகத்தை இந்தத் திரைப்படம் வெளிக்கொண்டு வந்தது. பாலசந்தரின் திரைப்படத்தில் பெண்கள் வலிமையானவர்களாக இருப்பதன் தொடக்கம் இது தான்.

லலிதா, அக்ரஹாரத்தில் வாழும் ஒரு அக்மார்க் பிராமணப் பெண். உடன் பிறந்தவர்கள் எட்டு பேருடன் வாழும் அவளுக்கு குடும்பத்தைக் காப்பாற்றும் கடமை வந்து சேர்கிறது.

நகரத்துக்கு வேலைக்காக வருகிறாள்.

விதி அவளை விபச்சாரத்துக்குள் தள்ளி விடுகிறது.

குடும்பத்துக்காக உழைத்த அவளை கடைசியில் குடும்பமே வெறுத்து ஒதுக்குகிறது.

குடும்பத்துக்குத் தேவை வரும்போது ஆண்கள் தான் வேலை செய்து காப்பாற்ற வேண்டுமா ? ஏன் அந்தப் பொறுப்பை ஒரு பெண் ஏற்றுக்கொள்ளக் கூடாதா ? எனும் தைரியமான கேள்வியை பாலசந்தர் அப்போது எழுப்பினார். அதுவும் அக்ரஹாரப் பிராமணப் பெண் என்பவள் கற்பையும், புனிதத்தையும் போற்றுபவளாகவே சித்தரிக்கப்பட்ட காலகட்டத்தில் தைரியமாக இப்படி ஒரு படத்தை எடுத்ததற்காக பாலசந்தர் பாராட்டவும், விமர்சிக்கவும் பட்டார். அக்ரஹாரப் பெண்ணை படிதாண்ட வைக்க அக்ரஹார இயக்குனர் தான் தைரியம் கொள்கிறார்.

பிரமிளா, சிவகுமார்,கமலஹாசன்,செந்தாமரை, சுந்தரி பாய், எஸ்.வி.சுப்பையா, ஜெயசுதா, ஜெயசித்ரா ஆகியோரின் நடிப்பில், வி.குமார் இசையில் வெளியானது இந்தப் படம்.

கே.பாலசந்தர் இயக்கத்தில் வி.குமார் இசையமைத்த கடைசித் திரைப்படம் இது தான். இந்தப் படத்துக்குப் பிறகு இந்த வெற்றிகரக் கூட்டணி இணையவேயில்லை.

இந்தப் படம் ரொம்ப சீரியஸாகச் சென்று கொண்டிருப்பதால் தனியே ஒரு காமெடி டிராக் எழுதும்படி பாலசந்தர் மௌலி அவர்களைக் கேட்டுக் கொண்டார். அப்போது மௌலி நகைச்சுவை நாடகங்களில் முத்திரை பதித்திருந்தார். ஆனால் இந்தப் படம் ரொம்ப சீரியசாக இருப்பதால் இதுக்கு காமெடி எல்லாம் ஒத்து வராது என மறுத்து விட்டார் மௌலி.

அவர் சொன்னதும் சரியாகவே இருந்தது. படத்தின்வலிமை பாதுகாக்கப்பட்டது.

தொடர்ச்சி 38 ம் பக்கம்



37 ம் பக்கத் தொடர்ச்சி




அரங்கேற்றம் திரைப்படத்தின் கதாநாயகி ரொம்பவே வாழ்க்கையில் கஷ்டப்படுகிறாள். ஆனால் அவளைக் கடைசியில் நீங்கள் மகிழ்ச்சியான முடிவுக்குக் கொண்டு செல்லவில்லையே ? ஏன் ? என ஒரு முறை அவரிடம் கேட்டார்கள்.

"அந்தக் காலகட்டத்தில் கதாநாயகியை விபச்சாரம் செய்யும் பெண்ணாய்க் காட்டுவதே மிகப்பெரிய சவால். படத்தில் விபச்சாரம் செய்யும் பெண்ணாய் காட்டியபின் மகிழ்ச்சியான ஒரு முடிவை அவளுக்குக் கொடுக்க அன்றைய சமூகம் இடம் கொடுக்காது. அதனால் தான் ஒரு சமநிலைக்காக ஒரு புதுமையான கருத்தைக் கூறி, பார்வையாளர்களைத் திருப்திப் படுத்தும் முடிவையும் எடுத்தேன். இன்றைய காலகட்டத்தில் அந்தப் படத்தை எடுத்திருந்தால், ஹீரோயின் நிச்சயம் மகிழ்ச்சியாகவே இருந்திருப்பாள்" என்கிறார் பாலசந்தர்.

**சொல்லத்தான் நினைக்கிறேன்**

மரபுகளை உடைக்க வேண்டும் எனும் பாலசந்தரின் கனவுடன் வெளியான அடுத்த படம் சொல்லத்தான் நினைக்கிறேன். ஹீரோ ஹீரோயினைக் கல்யாணம் பண்ணித் தான் ஆகணுமா ? காதல்னா அகராதியில் சொல்லப்படும் விஷயங்கள் தானா ? வில்லன் ஜெயிக்கலாமா ? இப்படியெல்லாம் சாதாரண இயக்குனர்கள் கேட்காத கேள்விகளை பாலசந்தர் தனக்குத் தானே கேட்டதன் விளைவு தான் சொல்லத் தான் நினைக்கிறேன்.

இந்தப் படத்திலும் கமலஹாசன் நடித்தார். 1973ம் ஆண்டு வெளியான இரண்டு படங்களிலும் கமலஹாசனின் பங்களிப்பு இருந்தது. அவர்களுடைய தொடர் பயணத்தின் அடிக்கல் அந்தக் காலகட்டத்தில் தான் போடப்பட்டது.

கமலஹாசனுக்கு இந்தப் படத்தில் பெண்களை மயக்கும் பிளேபாய் வேடம். எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைத்திருந்தார். சொல்லத் தான் நினைக்கிறேன், சொல்லாமல் தவிக்கிறேன் எனும் வாலியின் பாடல் மிகப்பெரிய ஹிட்டானது. சிவகுமார், ஜெயசித்ரா, ஸ்ரீவித்யா, சுபா, ஜெயசுதா, பூர்ணம் விஸ்வநாதன் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்தனர். ஸ்ரீவித்யா, சுபா, ஜெயசித்ரா மூவரும் சகோதரிகள். மூவருக்கும் சிவகுமார் மீது காதல். சிவகுமார் ஜெயசித்ராவைக் காதலிக்கிறார். ஆனால் ஜெயசித்ராவோ விதி வசத்தால் கமலஹாசனின் வலையில் விழுகிறாள். பிறகு நடப்பவை சாதாரண சினிமா இலக்கணங்களை உடைத்த திரைக்கதை. வெகுவாகப் பேசப்பட்ட திரைப்படம் இது.

பாலசந்தர் எனும் இயக்குனர் இன்னொரு தளத்துக்கு சரேலென சென்ற படம் ஒன்று அடுத்த ஆண்டில் வெளியானது !

அந்தப் படம் அவள் ஒரு தொடர்கதை !

**அவள் ஒரு தொடர்கதை**

பாலசந்தரின் மிகச்சிறந்த படைப்புகளின் பட்டியலில் நிச்சயம் இடம் பிடிக்கக் கூடிய திரைப்படம் "அவள் ஒரு தொடர்கதை". அந்தப் படம் தான் சுஜாதா எனும் மலையாள நடிகையை தமிழுக்கு அறிமுகம் செய்த படம். கமலஹாசனும் பாலசந்தரும் மீண்டும் இணைந்த படம். சுஜாதா நடித்த எர்ணாகுளம் ஜங்ஷன் எனும் மலையாள திரைப்படத்தைப் பார்த்த பாலசந்தருக்கு சுஜாதாவைப் பிடித்து விட்டது. உடனே அவரை தனது படத்துக்காக ஒப்பந்தம் செய்தார். அவருடைய குரலில் பக்கா மலையாள வாசனை அடித்ததால் ஒரு மாத கால அவகாசம் கொடுத்து, தமிழ் படிக்கச் சொல்லி, அதன் பிறகே படத்தில் நடிக்க வைத்தார்.

அதற்கு முன் சுஜாதா மலையாளத்தில் நாற்பது படங்களில் தலை காட்டியிருந்தார். ஆனால் இந்தப் படம் தான் அவருக்கு திருப்பு முனை தந்த படம் என்று தைரியமாகச் சொல்லலாம்.

வழக்கம் போல ஒரு நடுத்தரக் குடும்பம். குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு கதாநாயகிக்கு. அவளுடைய ஒரு சகோதரி விதவை. இன்னொரு சகோதரிக்கு திருமணம் ஆகவில்லை, ஒரு சகோதரன் பார்வையில்லாதவன், இன்னொரு சகோதரன் குடிகாரன், கூடவே இருக்கும் அம்மா, குடும்பத்தை உதாசீனப்படுத்தி விட்டு சாமியாராய்ப் போய்விட்ட அப்பா. இது தான் களம்.

கதாநாயகி தனது குடும்பத்துக்காக காதலை இழக்கிறாள், வாழ்க்கையில் பல இன்னல்களைச் சந்திக்கிறாள், பல இனிமைகளை இழக்கிறாள். கடைசியில் தனது அலுவலக உயரதிகாரியை மணக்கிறார். ஆனால் அதுவும் வாழ்க்கையை இனிமையாக்கவில்லை என்பது தான் கதையமைப்பு.

கடவுள் அமைத்து வைத்த மேடை, தெய்வம் தந்த வீடு போன்ற சூப்பர் ஹிட் பாடல்களை கண்ணதாசன் எழுத,எம்.எஸ் விஸ்வநாதன் இசையமைத் திருந்தார்.

தமிழ் சினிமா வரலாற்றில் ஒரு முக்கியமான மைல் கல் இந்தத் திரைப்படம் என "டைம்ஸ் ஆ∴ப் இந்தியா" தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது. "ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மறக்க முடியாத திரைப்படமாக நிலைபெற்ற படம் அவள் ஒரு தொடர்கதை" என்றது இந்து பத்திரிகை. சிறந்த இயக்குனருக்கான பிலிம் ∴பேர் விருதை கே.பாலசந்தருக்குப் பெற்றுத்தந்த முதல் படம் "அவள் ஒரு தொடர்கதை" தான். "பாலசந்தர் படங்களில் உங்களுக்குப் பிடித்த படம் என்ன ?" என்று தமிழ்த் திரையுலகின் முன்னணி இயக்குனர்கள் யாரைக் கேட்டாலும் அவர்கள் தவறாமல் சொல்லும் படங்களின் பட்டியலில் அவள் ஒரு தொடர்கதை இருக்கும். மணிரத்னம், பாரதிராஜா போன்ற இயக்குனர்கள் இது குறித்துச் சிலாகித்துப் பேசியிருக்கின்றனர்.

"அவள் ஒரு தொடர்கதைக்கு முன்பும், பின்பும் பாலசந்தர் நிறைய நல்ல படங்களை இயக்கியிருக்கிறார். ஆனாலும் எனது ∴பேவரிட் திரைப்படம் அவள் ஒரு தொடர்கதை தான். காரணம் அந்தக் கதாபாத்திரமும், அது கதையைத் தூக்கிச் சுமக்கும் விதமும்" என இயக்குனர் மணிரத்னம் குறிப்பிட்டார்.

"அவள் ஒரு தொடர்கதை" படம் தான் என்னை பாலசந்தரின் விசிறியாக மாற்றியது என்றார் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

இந்தப் படம் கருப்பு வெள்ளையில் தயாரானது என்பது குறிப்பிடத் தக்க அம்சம். கலர் படங்கள் வெளியான காலத்தில் கருப்பு வெள்ளையில் ஒரு படத்தை எடுத்தது பாலசந்தரின் துணிச்சல் என்று தான் சொல்ல வேண்டும். அந்தத் துணிச்சல் வீண் போகவில்லை. வெள்ளி விழா கொண்டாடிவிட்டுத் தான் தனது ஓட்டத்தை நிறுத்தியது அவள் ஒரு தொடர்கதை திரைப்படம்.



அவள் ஒரு தொடர்கதை

தொடர்ச்சி 39 ம் பக்கம்

**100வது பிறந்த நாளையொட்டி**
**அவரது உறவுகளின்.**
**நூற்றாண்டு நினைவுக் காணிக்கை**



**அமரர் மாணிக்கம் சுந்தரமூர்த்தி**
**22.03.1920 – 01.11.1996**

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு கொட்டாஞ்சேனையையும் பின்னர் கனடாவையும் வசிப்பிடமாகக் கொண்டவருமான விஸ்வப்பிரம்ம வழித்தோன்றல் அமரர் மாணிக்கம் சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய தபாலதிபர் கொழும்பு.) அவர்களின் 100வது பிறந்த நாளையொட்டி அவரது உறவுகளின்.
நூற்றாண்டு நினைவுக் காணிக்கை

இறைபக்தியும் எவரையும் மனம்நோக வைக்காத மென்மையான பேச்சும் எப்போதும் தூய்மையானவராகவே வாழ்ந்த இவரது பண்பும் அதேவேளை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளை எவருக்காகவும் விட்டுக்கொடுக்காத இவரது கண்டிப்பும் அந்தக் கட்டுப்பாடுகளுக்கமையவே தன்னைப்போலவே தன்னைச் சார்ந்தவர்களும் நடந்துகொள்ளவேண்டும் என்பதில் இவர் காட்டிய அக்கறையும் ஒவ்வொரு மனிதரும் கடைப்பிடிக்கவேண்டிய உதாரணங்களாக விளங்கின. தன்னுடைய இறுதிப்பொழுதுவரை அனைத்தையுமே திட்டமிட்டு ஓர் உதாரண புருஷராக அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை வியக்கத்தக்கது. முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் இறைவனோடு ஐக்கியமாகிவிட்ட இவரது ஆத்மா சாந்தி பெறுவதாக.
அன்பின் நினைவுகளோடு -
மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

**–சு.மகேந்திரமூர்த்தி (மகன்)**
**ஜெர்மனி**

## பெண் இயக்குனர் சுதா கொங்காரா இயக்கத்தில் இன்று சூர்யா! நாளை விஜய்!!



சென்னை: நடிகர் விஜய் நடிக்கும் அடுத்த படத்தை இயக்குனர் சுதா கொங்காரா இயக்க இருக்கிறார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் சில நாட்களில் வெளியாகும்.

இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், விஜய் நடிப்பில் மாஸ்டர் படம் வெளியாக உள்ளது. அடுத்த ஏப்ரல் மாதம் இந்த படம் வெளியாகும். சென்னையில் நடக்கும் கதை இது என்று குறிப்பிடுகிறார்கள். பெரிய படம் மாஸ்டர் படம் தற்போது கோலிவுட்டின் மிகப்பெரிய படமாக உருவாகி வருகிறது. மல்டி ஸ்டார் படமாக விஜய் நடிக்கும் இந்த படம் உருவாகி வருகிறது. மாநகரம் எடுத்து வெற்றிதந்த லோகேஷ் கனகராஜ் இந்த படத்தை இயக்குகிறார். இந்த படத்தில் விஜய் சேதுபதி ஒரு வில்லனாக நடிக்க உள்ளார். நடிகர் விஜய் நடிக்கும் மாஸ்டர் படத்தின் ஒருபாடலுக்கு ஒரு குட்டி கதை என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த பாடல் சில வாரங்களுக்கு முன் வெளியானது.

இந்த படம் ஏப்ரல் மாதம் வெளியாக உள்ள நிலையில், நடிகர் விஜய் தனது அடுத்த படத்திற்கு இப்போதே தயாராகிவிட்டார். ஏற்கனவே இவர் இரண்டு இயக்குனர்களிடம் அடுத்த படத்திற்காக கதை கேட்டு இருக்கிறார். கடைசியில் தற்போது நடிகர் விஜய், சுதா கொங்காரா உடன் படம் நடிக்க முடிவு செய்துள்ளார்.

விஜயின் அடுத்த படத்தை கண்டிப்பாக சுதா கொங்காராதான் இயக்க போகிறார் என்று உறுதியாகி உள்ளது.

அதன்படி நடிகர் விஜய் சுதா கொங்காராவிடம் கதை கேட்டுள்ளார். சுதா கொங்காரா சொன்ன கதை விஜய்க்கு மிகவும் பிடித்துவிட்டதாம். விஜயிடம் சுதா கொங்கரா டான் பாணி கதை ஒன்றை சொல்லி இருக்கிறாராம். விஜய் கோலிவு கிராபில் இதுவரை இல்லாத ஜானர் கொண்ட படம் இது என்று கூறுகிறார்கள். இதனால் விஜய் அந்த கதையை கேட்ட உடனே ஓகே சொல்லிவிட்டார் என்கிறார்கள்.

அதே சமயம் விஜய் சுதா கொங்காராவின் படத்தை போட்டு காட்டும் படி கேட்டுள்ளார். சுதா கொங்காரா நடிகர் சூர்யாவை வைத்து சூரரை போற்று படம் எடுத்துள்ளார். சூரரை போற்று விரைவில் வெளியாக உள்ளது. இதற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. சூரரை போற்று படத்தை நேற்று விஜய் அவரின் வீட்டில் பார்த்து இருக்கிறார். சில காட்சிகள் சில காட்சிகள் ஆனால் விஜய்க்கு முழு படம் போட்டு காட்டபடவில்லை. முக்கால்வாசி படத்தை விஜய் பார்த்து இருக்கிறார். இதை பார்த்து சுதாவை விஜய் பாராட்டியதாக கூறப்படுகிறது. இதற்கு பின்பே விஜய், சுதாவின் அடுத்த படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டு இருக்கிறார். விஜயின் சினிமா கிராபில் முதல் பெண் இயக்குனராக சுதா கொங்காரா இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது






சூரரை போற்று

## அவள் ஒரு தொடர்கதை

38ம் பக்கத் தொடர்ச்சி...

இந்தத் திரைப்படத்தை பின்னர் தெலுங்கில் எடுத்தார் பாலசந்தர். அந்தப் படம் தான் அந்துலேனி கதா. அதுவும் கருப்பு வெள்ளையில் தான் உருவானது. ஒன்பது வருடங்களுக்குப் பிறகு பாலசந்தர் அந்தப் படத்தை கன்னடத்தில் எடுத்த போது வண்ணப் படமாக எடுத்தார். பென்கியல்லி அரலிட ஹூவு என்பது கன்னட பதிப்பின் பெயர். மலையாளத்தில் இந்தப் படத்தை "அவள் ஒரு துடர் கத" என்று டப்பிங் செய்து வெளியிட்டார்கள். காரணம் ஏற்கனவே சுஜாதா மலையாளத்தில் அறியப்பட்ட ஒரு நடிகையாய் இருந்தார்.

பாரத் சாம்ஷீர் இயக்கத்தில் இந்தப் படம் பெங்காளி மொழியும் பேசியது. அப்படிப் பேசியதால் நிகழ்ந்த இன்னொரு நன்மை, கமலஹாசனுக்கு பெங்காளியில் கிடைத்த அறிமுகம். !

அதே ஆண்டு பாலசந்தர் "நான் அவனில்லை" என்றொரு படம் இயக்கினார். ஜெமினி கணேசன் கதாநாயகனாக நடித்தார். இது மராத்தியில் வெளியான டு மீ நாவ்லே எனும் படத்தின் தமிழ் வடிவம்.

இந்தப் படத்திலும் கமலஹாசன் நடித்தார். இந்தப் படத்திலும் எம்.எஸ்.விஸ்வநாதனின் இசை தொடர்ந்தது. ஜெமினி கணேசனுக்கு பல இடங்களில் சென்று பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்யும் கதாபாத்திரம். இந்தப் படம் அவருக்கு சிறந்த நடிகருக்கான ஃபிலிம் ஃபேர் விருதைப் பெற்றுத் தந்தது.

அடுத்த படம் தமிழ் திரையுலக வரலாற்றில் மறக்க முடியாத திரைப்படம். அந்தப் படம் தான் தமிழ்த் திரையுலகின் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை அறிமுகம் செய்த திரைப்படம். அபூர்வ ராகங்கள் !

தொடரும்....




ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
தரமும் மலிவும் நிரந்தரம்!
ஆசிய ஆபிரிக்க மற்றும், இலங்கை, இந்திய பலசரக்குப் பொருட்கள்,மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள், அனைத்திற்கும், எம்மை நாடுங்கள்.

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Mönchengladbach
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

TEMPO VALUTRANS Ria MoneyGram
துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven



உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!

Jasmine Silk House
நேரில் வந்து பாருங்கள்
பட்டுச்சேலை, பஞ்சாபி, குருதார்
மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்
அனைத்தும் வகை வகையாக உண்டு.
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen

ASIA BAZAR
துரித பண மாற்றுச் சேவை!
Ria Money Transfer
MoneyGram
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976

PALAZIO
EVENTS
உங்கள் இல்லத்தின் சகல விதமான மங்கல
வைபவங்களுக்கும், மேடை நிகழ்வுகளுக்கும் ஏற்ற
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் ஓர் அழகிய மண்டபம்!
0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய வாகனத்
தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.
மேலும் எம்மிடம்....
★ போட்டோ மற்றும் வீடியோ
த.கோபிநாத்
+ (49) 1525 3961138
Kasinostr. 25 |42103 Wuppertal

SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Tel:0231 860 26 96
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
FOR SHOPS ONLY